பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

மாலை 5	புதன் 14-5-41 விஷு ௵ வைகாசி ௴ 1௨	முத்து 5

பொருள் அடக்கம்

விஷயம்			பக்கம்
போகிற போக்கில்	...	...	258
கவிதா தர்சனம்	...	வே. நாராயணன் எம். ஏ. எம். எல்	260
மறு மலர்ச்சி	...	... கா. வெ. ஸ்ரீநிவாஸன் பி. எஸ். ஸி.	262
யார் கேட்பார்கள் ?	...	ஏ. முகம்மது ரஷீத் பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்)	265
மணியின் நண்பன்	...	... மு. ந. சுப்ரமண்யன்	268
காகா கலேல்கார்	...	... புரொபஸர். என். ஆர். மால்கானி	271
கிரணங்கள்	...	... ஆர். கே. விசுவநாதன் எம். ஏ.	273
கடமை	...	... "ஹரிணி"	275
தமிழும் ஆங்கிலமும்	...	புரசு பாலகிருஷ்ணன் எம். பி. பி. எஸ்.	278
காயக சிகாமணி	...	... கு. ப. ராஜகோபாலன் பீ. ஏ.	281
விசேஷத்தின் விளைவு	...	... சு. வேங்கட சுப்ரமண்யன்	283
கோகிலா	...	... ஸ்ரீமதி. ஞானம்பாள்	285
பொருளாதாரம்	...	... எஸ். வைத்தீசுவரன்	288
சம தரிசனம்	...	... ஸ்ரீ ஸ்வாமி துரியாநந்தர்	293
சாயம் வெளுத்தது	...	... ய. மஹாலிங்க சாஸ்திரிகள்	297
ஆநந்த உத்ஸவம்	...	... ஸ்ரீமதி. ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்	300
வில்லியின் நகைச் சுவை	...	... வித்வான். ச. கு. கணபதி ஐயர்	305
மனக் குதிரை	...	... எஸ். சந்திரசேகர சாஸ்திரி	308
புத்தக விமர்சனம்	...	... ...	310
ஸ்வேதாரண்ய ஆச்ரம பால பாடம்	...	கா. சி. வேங்கடரமணி	313
சிறுவர் பகுதி	...	... ... பெ. நா. அப்புஸ்வாமி	314
நாம் ஏன் ஸங்கீதம் கற்க வேண்டும் ?	...	ஸ்ரீமதி. எஸ். பத்மாவதி	317

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

போகிற போக்கில்

இன்றைய தினம் காலையில் நான் நரி முகத்தில் விழித்தேன். ஞாயிற்றுக்கிழமை யாகையால்மணியார்டர்ஒன்றும் வரவில்லை. பொழுது விடிந்து எழுந்தவுடன் மகாகனம் சாஸ்திரியாரின் முகத்தில் விழித்தேன். உண்மையிலா?

இல்லை. இல்லை.

கனவிலா?

இல்லை. இல்லை.

மகாகனம் சாஸ்திரியாரைக் கனவில் காணுவது துர்லபம். அவரிடம் எனக்கு முப்பது வருஷத்திய பழக்கமிருந்தும் அவரை நான் கனவில் கண்டதில்லை.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பின் மேல் அட்டையில் சாஸ்திரியார் முகத்தில் விழித்தேன். பத்திரிகை ஜன்னல் வழியாகப் போடப்பட்டு என் தலைமாட்டில் கிடந்தது.

* * *

நான் டில்லியிருந்து வந்தவுடன் கவனித்தேன். கொஞ்சகாலமாய், "சுதேசமித்திரன்" மேலட்டை கலரில் ஈடுபட்டு அழகுவாய்ந்து வருகிறதே என்ன விசேஷம்? புதிய பந்தல் போட்டுத் தோரணம் கட்டி, காவியடிக்கப்பட்டிருக்கும் வீட்டில் காதுகுத்தும் கலியாணமாவது மேள தாளத்துடன் நடக்காதா என்று எதிர்பார்த்தேன். அசல் விவாகமே ஏற்பட்டு விட்டது—ஐ. ஸி. எஸ் ஸுக்கும் ராஜகுமாரிக்குமே.

மகாகனம் சாஸ்திரியார் தம் வாழ்க்கையின் அம்சங்களைப்பற்றி எழுத ஆரம்பித்து விட்டார். என் களிப்புக்குக் கங்கு கரையில்லை.

* * *

நான் பத்து வருஷகாலமாக, வணக்கத்துடன் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு, ஒற்றைக் காலால் நின்றுகொண்டு மகாகனம் சாஸ்திரியாரை, "தங்கள் வாழ்க்கையின் சாராம்சங்களை யெழுத வேண்டுமென்று வருஷா வருஷம் கேட்கிறது உண்டு. அதற்கு அவர் அழகாய் உதட்டைப்பிதுக்கி, கொட்டாவி விட்டு, "ஆமாம், உனக்கு வேலையில்லை"—என்று சொல்லிவிடுவார்.

"ஆமாம், இல்லை. நல்ல மைசூர் மாடுகளை அரசியல் குப்பை வண்டியிலிருந்து, இலக்கிய ரதத்தில் பூட்டச் செய்ய வேண்டியதுதான் என் வேலை"—என்று சொல்வேன். அவர் பதில் சொல்லமாட்டார். புன் சிரிப்புடன் இருப்பார்.

இந்தப் புன்சிரிப்பும், சாந்தக்களிப்பும், முகக்களையும்"சுதேசமித்திரன்" படத்தில் நன்றாய் வந்திருக்கின்றன. சாதாரணத் தாள் கூட மகாகனம் சாஸ்திரியாருக்கு மரியாதை செய்கிறது.

* * *

மகாகனம் சாஸ்திரியாரைப் பத்திரிகையில் எழுதும்படியாய்ச் செய்த மகானை நான் தரிசனம் செய்ய விரும்புகிறேன். அவரைக் கொண்டு இந்தியாவுக்குச்சீக்கிரம் ஸ்வராஜ்யம் கொண்டு வரலாம். அமெரியிடம் போய் பிரிட்டிஷ் மந்திரிசபையைச் சரிப்படுத்த இவர்தான் சரியான தூது. ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீநிவாஸனைகத்தானிருக்குமோ? அப்படியிருந்தால் அது பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோலாகும்.

* * *

மழைபோல், பிறர் மெச்ச இனிய சாரீரத்தில் பொழியும் மகாகனம் சாஸ்திரியாருக்குக் கூட உபந்யாஸம் என்றால் யோசனைதான். பசிதெரியாது; சாதம் வேண்டியிராது; வியர்க்கும். மாணவர்களுக்குப் பரீக்ஷையெப்படியோ அப்படியேதான் இந்தத்தலைமை உபாத்யாயருக்கும் உபந்யாஸம் என்றால்-பந்தயக்குதிரைக்கு ஓட்டம் போல்.

பேச்சு இப்படியானால் எழுத்து என்றால் கேட்கவேண்டுமா? இதற்குக் காரணம் என்ன? காகிதமும் மையும் சுலபமாய்க் கிடைக்கின்றனவேயென்று அழியும் பொருளை அழியாப் பொருளாகச் செய்யமுயலுவது நமது தர்மத்திற்கு விரோதமான கொள்கை யென்ற நம்பிக்கைதான்.

* * *

ஸ்வாநுபவங்களை யொட்டி யெழுதும் கட்டுரைகளுக்கு மலைவாழைப்பழம் (நவரம்பழம்) போலவும் கொம்பில் கனிந்த கனிபோலவும் ஒருதனியான சுவையுண்டு. இவைகள் எப்பொழுதும் மனத்திற்குச் சோர்வற்ற களிப்பைக் கொடுக்கின்றன. கூட்டுப் பாதைகள் கலங்கிச் சேருமிடத்தில வழிகாட்டிகளாக நிற்கின்றன.

நமது தலைவர்கள் எல்லோரும் தங்கள் அனுபவங்களைக்குறித்து எழுதவேண்டும், மக்களுக்கு அவைகள்தாம் ஒரு அணையாததீபமாகநின்று வாழ்க்கையில் வழிகாட்டும். அப்பொழுதுதான் நமது நாட்டில் உண்மையில் இலக்கியப் பெருக்கு ஏற்படும். நமது வாழ்கைக்கும் பெருக்குண்டு. அநுபவப் பெருக்கில்லாமல்வேறு பெருக்கு உண்மையில் இல்லை. வேற்றுமையில் ஒற்மை அப்பொழுது தான் பிறக்கும்.

இப்படிப் பெருக்கடைந்த நாட்டில்தான் அரசியல் கோலிவிளையாட்டிலும் நாம் கட்டையடிக்கலாம். அஹிம்ஸா தர்மத்தை விடாமல். இப்பொழுது அமெரியும், பிரதமமந்திரி சர்ச்சிலும் நாம் சம்பந்தப்பட்டவரையில் நம்மையவர்கள் கட்டையடிப்பது போலத்தான் இருக்கிறது—மகாகனம் சாஸ்திரியார் சாத்தனூர் கிராமத்தில் கோலியாட்டதில் எல்லோரையும் கட்டையடித்தது போல்!

மணி.



கவிதா தர்சனம்

[வே. நாராயணன். எம். ஏ.,எம். எல்]

அன்று பௌர்ணமி; சூர்யாஸ்தமனமானதும் சந்திரோதயம். ஆனால் பஞ்சாங்கத்திலே கிரகணம் என்று போட்டிருந்தது. சந்தரோதயத்தைக் காண்பதற்குக் கடற்கரையிலே காத்துக்கொண்டிருந்தேன். கிரகணம் கால் மணி நேரத்திலே விட்டு விடும். பிறகு, சமுத்திரஸ்நானம், நிலாச்சாப்பாடு, ஒரே கொம்மாளம் தான்.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டு மணலிலே சாய்ந்து படுத்திருக்கும் போது ஓர் அழகிய வனிதை என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள். என்னை நோக்கித்தானா? ஆம், சந்தேகமில்லை. என் அருகிலே வரவே அவளது நடை சற்று தயக்கப்பட்டது; சதங்கையொலிமட்டுப்பட்டது! முகத்திலே புன்னகை தவழ்ந்தது! கண்கள் ஏதோ ஒரு செய்தி சொல்லப்பறப்பன போல மிளிர்ந்தன! அவளது மேனி ஸௌகுமாரமாய்க் கோமளமாய்ப் பிரகாசித்தது; அவள் அணிந்திருந்த பட்டாடை நறுமணம் வீசிற்று! பொறுக்கியெடுத்தாற் போல் சில நகைகள் தான் அணிந்து கொண்டிருந்தாள். அவள் என் அருகில் வந்தமர்ந்ததும் நான் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டேன்.

சற்று நேரம் மௌனம். பிறகு, சற்று மயக்கந் தெளிந்து, அவளை மீண்டும் நோக்கி, 'அம்மா, நீ யார்?'' என்றேன். "நான் தான் கவிதாதேவி, என்னைத் தெரியுவில்லையா உனக்கு?" என்றாள். நான் மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன்.

கவிதாதேவியின் தோற்றத்தைப் பற்றிய பலவருணனைகளைப் படித்திருக்கிறேன். சித்திரக்காரர் அவளைப் படமாக வரைந்த உருவப்படத்தையும் பன்முறை கண்டிருக்கிறேன். ஆனால் மீண்டும் கண் திறந்து பார்த்தபோது, அருகில் இருந்த பெண் மணியைக் காணவில்லை. அவளது சிற்றடிச் சுவடுகள்—என்னை நோக்கி வந்த அடிச்சுவடுகள்-மட்டும் மணலிலே பதிந்திருந்தன. அவள் சென்ற வழி தெரியவில்லை; மாயமாய் மறைந்துவிட்டாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு என் நண்பர்கள் ஒவ்வொருவராக என் அருகில் வந்து உட்கார்ந்தார்கள். 'என்னடா, ஒரு மதிரியாக இருக்கிறாய்?' என்று ஒருவன் விசாரித்தான்.

"ஒன்றுமில்லை சற்றுமுன் என் அருகில் ஒரு அழகி வந்திருந்தாள்; தன் பெயர் கவிதாதேவி என்றாள்; நன்றாக நோக்கு முன் மாயமாய் மறைந்து விட்டாள்" என்று சொன்னேன்.

"பாரதி மாதிரி நீயும் கனவு காணத் தொடங்கி விட்டாயோ?" என்றான் வேறொருவன்.

"பாரதி பைத்தியக்காரன்; இவன் அவனுக்குத் தம்பி" என்பது அவன் கருத்து.

"ஆமாடா! பாரதி கூட இப்படித்தான் கனவு கண்டாராம்." என்று சொல்லிப் பாடத் தொடங்கினான் அவன் தம்பி சீனு.

மங்கிய தோர் நில வினிலே
  கனவிலிது கண்டேன்
வயது பதினாறிருக்கும்
  இளவயது நங்கை

என்று.

அதற்குள் சுப்பராமன் "அவள் எப்படியிருந்தாள், சொல்லு, கேட்போம்" என்று நிர்ப்பந்தப் படுத்தினான். எனக்கும் அவளை வருணிக்கவேண்டுமென்று ஆசை தான்.

'அவள் திருமேனி பத்தரை மாற்றுத் தங்கம்' என்று தொடங்கினேன். அதற்குள் சீனு,

கூந்தலழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல.

என்று தொடங்கிவிட்டான்..............
கிரகணம் விட்டு விட்டது. நண்பர்கள் எல் எல்லோரும் கடலாடச் சென்றுவிட்டனர்.

நான் மட்டும் அக் காட்சியை நினைந்து கொண்டே படுத்திருந்தேன்.

நான் கண்ட கவிதை மாலைமதியின் மயக்கத்தால் எழுந்த கனவா? அவள் கனா ஆகாள். அவள் என்னைநோக்கி வந்த அடிச்சுவடு, இம்மணலிலே மறைந்தாலும் என் நெஞ்சிலே மறையுமா? நான் கண்டகவிதை பிற காட்சிகளை விட உயர்ந்ததால் நான் மறக்க இயலாத பேருண்மை. அவள் திருமேனி யாதொரு மாசும் மறுவும் இன்றி அமைந்து கண்டோர் கண்களை விசீகரிப்பது! ஆயினும் அந்தத் திருமேனியன்று நான் கண்ட கவிதை! அத்திருமேனியிலே பொறுக்கியெடுத்த சில நல்லணிகள் ஒளி வீசின! ஆயினும் அவ்வணிகளல்ல அவளுக்குச் சிறப்புச் செய்தன. அவளது முகத்திலே புன்னகை தவழ்ந்தது. ஆயினும் அம்முறுவலன்று என் உயிரையுண்டது! 'கூற்றமோ பிணையோ' என்று வீசிய அவள் கண்ணிணைகளும் அல்ல. என் உயிரைக்கொண்டது கவிதாதேவி முகத்திலே பிரதிபலித்த அவளது இதயமே.

'கவிதாதேவியை வருணிக்கவேண்டும்' என்றார்கள் என் நண்பர்கள்; அவளது திருமுகத்திலே தோன்றிய அகத்தழகை வருணிக்கமுடியுமா? வருணிக்கக் கூடியவற்றைத் தானே வருணிக்கலாம். அதனாலேதான் இன்றும் "இன்று நீ கண்ட கவிதாதேவியை வருணிக்கவேண்டும்" என்று கேட்போர்க்கு, அவளது திருமேனியின் ஸௌந்தரியத்தையும் அவளது நூபுரத்தின்மெல்லொலியையும் அவள் அணிந்திருந்த மாலைகளையும் மேகலையையும்வருணிக்கிறேன்; அவளது இளமுறுவல் என்னைப் பரவசப்படுத்திய வாற்றை வருணிக்கிறேன். என் வருணனைகளைக் கேட்கும் நண்பர்கள், "யாரோ ஓர் அழகிய பெண்மணியைக் கண்டு மயங்கிவிட்டான்" என்று என்னைப் பரிகசிக்கிறார்கள். ஆனால் நான் கண்டது பெண்மணியன்று; ஸாக்ஷாத் கவிதாதேவியே. அவளை வருணிக்கமுடியாமல் அவளது வடிவை வருணிக்கிறேன், என்று சொன்னால் நம்புகிறார்களா? உள்ளத்தைக் கண்டவனுங்கூட வடிவத்தைத் தானே வருணித்துச் சொல்ல முடியும். கிரகணம் விட்ட பௌர்ணமியை வருணிக்கமுடிவதில்லை; சந்திர பிம்பத்தையும் நிலாபொழிவதையும் தானே வருணிக்க முடியும்?



மறு மலர்ச்சி*

[கா. வே. ஸ்ரீனிவாஸன் பி. எஸ்ஸி.]

அன்று சனிக்கிழமை. மாலை மணி ஏழு. மாணவர்கள் விளையாட்டு மைதானங்களிலிருந்தும் கூட்டங்கூட்டமாக ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். ‘மெஸ்’ மணியடித்தது. உடனே யொரு பரபரப்பு காணப்பட்டது. அறைகளின் விளக்குகள் அணைந்தன; கதவுகள் தடாரென சாத்தப்பட்டன. மாணவர்கள் ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு ஹாஸ்டலிலிருந்து சாப்பாட்டுக்கட்டடத்திற்குச்சென்றனர்.

ஒரு கூட்டத்தில் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது :—

‘நடேசா, இன்று நமது யூனியன் ஹால் அமர்க்களப்படப்போகிறது. கணபதி சுப்பிரமணியன் ‘டிபேட்டை’ ஆரம்பிக்கப் போகிறான். நான் மத்தியானமே அவனைப் பார்த்தேன். அவன் உணர்ச்சி ததும்ப, தான் பேசப்போவதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தான். அப்பொழுதே மிகக் காரமாகவும், கடுமையுடனும் வெறி பிடித்தவன்போ லிருந்தான்.’

‘ஆமாம், அதிலென்ன ஆச்சர்யம்? சாதாரண நாளிலேயே அவன் பேச்சைக் கேட்க வேண்டுமா! இப்படித் திரும்புவான் ‘பைரனை’ ஒப்பிப்பான். அப்படித்திரும்புவான் ‘மில்லை’ ‘கோட்’ பண்ணுவான். இன்றோ கேட்பானேன்? நமச்சிவாயன் எதிர்த்துப் பேசுகிறான். இன்று விவாதம் மிகக்கோரமாக இருக்கும். எனக்குப் பயமாகக் கூட இருக்கிறதப்பா!’

“அவனது குரல் இனிமையானது; தொண்டையே கம்பீரம். வார்த்தைகளோ, நர்மதையின்வேகம் ஸ்படிகக்கற்களின்மீது புரளுவது போன்று கிளம்புகின்றன; பௌர்ணமி தினத்துக் கடல் கொந்தளிப்பின் அலைகள் ஒன்றன்மீதொன்று இடைவிடாது மோதுவது போன்றிருக்கிறது... நடேசா, ஆஜானுபாகுவான அவன் கோட்டின் இருதலைப்புகளைப் பிடித்துக்கொண்டு, இப்படியும் அப்படியும் தலையசைத்துக் கடலோசை போல் தங்குதடையறப் பேசும்பொழுது, அவனிடத்தில் எனக்கே யொரு பிரேமை ஏற்படுகிறது. இன்று அவன் பன்மடங்கு...........‘சீக்கிரம், இன்று இடமகப்படாது. நாம் முந்தி போகவேண்டும். சனிக்கிழமை சாப்பாட்டை விட ‘டிபேட்! முக்கியமென்று நீயே சொல்லியிருக்கிறாயல்லவா? நான் இதோ எழுந்திருக்கப் போகிறேன்...... ‘ஈச்வரய்யர், எனக்குக் கொஞ்சம் மோர் குடிக்கக் கொடுங்கள் போதும்’

* * *

மணி எட்டு. அண்ணாமலை சர்வகலாசாலையின் ‘யூனியன்’ ஹாலில் பரபரப்பு, ஏதோ நாட்டிலேயே ஓர் பெரிய சம்பவம் போன்று காணப்பட்டது. மாணவர்கள் அவரவர் இடங்களில் அமர்ந்தார்கள். மாணவிகளும் ஆசிரியர்களும் ஏராளமாய்க் கூடியிருந்தனர். ‘டிபேட்’ ஆரம்பமாயிற்று. மாணவருலகில் பேச்சுவன்மையில் சிறந்தோனென்று கியாதியடைந்த கணபதி சுப்பிரமணியன் வாதத்தை ஆரம்பித்தான். ஊசி விழும் ஓசையும் கேட்கும்படியான நிச்சப்தம். கணபதி சுப்ரமணியன் அந்தக் கூட்டத்தையே மயக்கிவிட்டான். அன்று அவன் என்றையும் விட சரமாரியாகப் பொழிந்தான்.

அன்று இரவு மணிபத்தரை வரையில் கூட்டம் நீடித்தது. கூட்டம் கலையும் பொழுது எங்கும் கணபதிசுப்பிரமண்ணியனது நாமமே உச்சரிக்கப்பட்டது.

* * *

லலிதா முதலாவது வருஷ வகுப்பில் படித்துவந்தாள். சர்வகலாசாலையில் நாள்

* காசி விசுவவித்யாலயத்தின் தமிழ்ச் சங்கத்தில் பரிசு பெற்ற சிறு கதை.

தோறும் திருநாமம் உச்சரிக்கப்படும் கியாதியடைந்தவர்களில் அவள் ஒருத்தியன்று; கூட்டத்தோடு கூட்டமாக இருந்து வந்தாள் அவள். கலாசாலை மாணவர்களோ, மாணவிகளோ அவளை ஒரு காரணத்தைக் கொண்டும் பொறுக்கிஎடுக்கவில்லை. அவளும் அப்படிப்பட்ட கௌரவத்தைக் கோரவில்லை; அதற்கு முயற்சியும் எடுத்துக் கொண்டவள் அல்லள்; அப்படிப்பட்ட கௌரவத்தின் மந்திர சக்தியையுமறியாதவள் அவள்.

ஆனால் அன்றைய தினத்திலிருந்து ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது லலிதாவிடத்தில். கூட்டம் கலைந்த பிறகும் அவள் ஹாலைவிட்டு நகராது நின்றாள். அவளது கூரிய இரண்டு கண்களும் கணபதிசுப்பிரமணியனது ஆகிருதியைப் பாதாதிகேச பரியந்தம் திரும்பத் திரும்ப வாராய்ந்தது. மின்சார வொளியில் ஜொலிக்கும் அவனது கண்ணாடி யணிந்த வதனத்தில் அந்தப் பார்வை தடைப்பட்டு நகர முடியாது தவித்தது-தீபவொளியில் சிக்கிக்கொண்ட விளக்குப் பூச்சிகளைப்போல. புஷ்பக் கொத்துகளை நாடி மதுவைப் பருகும் தேனீ துவட்டும் இனிப்பைக் கண்டு ஒரு புஷ்பத்தை எவ்வாறு விடாது உறிஞ்சுமோ அப்படியே அவ் விரு கண்களும், அன்று கடலோசையை எழுப்பின அவ் வதனத்தில் புதைந்தன. சுருக்கமாகச் சொன்னால் கணபதிசுப்பிரமணியனிடத்தில் அவளுக்கு ஒரு அளவற்ற மதிப்பு ஏற்பட்டது. அவனது வாக் விலாஸம் அவளைப் பிரமிக்கச் செய்தது. வாக் சாதுர்யத்தின் மாய விலாஸத்தை யன்றுதான் உணர்ந்தாள் அவள்.

அன்றுமுதல் லலிதா கணபதிசுப்பிரமணியனைப் பற்றியே தனது தோழிகளிடத்தில் பேச வாரம்பித்தாள். அவனைப் புகழ்ந்தாள். அளவிலா பக்தியுடன் விக்கிரஹத்தின் முன் நின்று கதறும் பக்தனின் நிலையில் நின்றாள் அவள். அன்று முதல் அவள் அதிக ஊக்கத்துடன் காணப்பட்டாள். அன்று முதல் சிறிது சிறிதாக வெளி விஷயங்களில் அவள் அதிக ஊக்கம் கொண்டாள். சிறிது சிறிதாக 'யூனியன்' கூட்டங்களில் மேடை யேறிப் பேசவும், தனது தோழிகளுடன் நடை விஷயங்களை விவாதிப்பதும் போன்ற அதிக நடவடிக் கைகளில் இறங்கினாள். இறுதியில் மாணவி களிடையில் அவள்நாமார்ச்சனை நடைபெற வாரம்பித்தது.

* * *

இந்த சம்பவங்கள் நடந்து இரண்டு வருடங்கள் கடந்தன. இவ் விரு வருடங் களில் உலகில் பெரும், திடுக்கிடும் மாறு தல்கள் ஏற்பட்டன. உலகமே புரண்டு விட்டது; உலகம் ஆழ்ந்த அந்தகாரத்தில் மூழ்கியது. மனிதன் கட்டின நாகரிகக் கோயில்களும், சின்னங்களும் அவனுடன் அழிந்துவிடும்போ லிருந்தன. மனிதன் தனது இயல் பொன்றினால் இயற்கையைத் தோற்கடிக்க முற்பட்டான்; ஆனால் தன்னையே அடக்கிக்கொள்ள அவனுக்கு இயற்கை யில்லை. தனது அதிசயிக்கத்தக்க அரிய செயல்களைக் கண்டு அவனே பிர மித்து நின்றான். அவன் யந்திரக் கருவி களை அதியற்புதமாகச் சிருஷ்டித்தான். அது அவனுக்கே யடங்காத மாபெரும் பூதமாகக் கிளம்பியது; தனது சிருஷ்டி கர்த்தாவையே சம்ஹரிக்கக் கொக்கரித்துக் கொண்டு ஆகாயத்திலும், பூமியிலும் அகண்ட நீலக் கடலில் ஊடுருவியும் அவனை மிரட்டி, விரட்ட வாரம்பித்தது.

மனிதன் திக்கற்றவன் போன்று, நடு நடுங்கிச் செத்தேன், பிழைத்தே னென்று பூமியைக் குடைந்து குடியிருக்கப் புகு தான்.

தாய் மடிகிடந்த பால் மணம் மாறாக் குழவிகள் தாயிடமிருந்து பிரிக்கப்பட் டன. காதலனைப்பினின்று காதலர்கள் பிரிக்கப்பட்டனர்.

இந் நாட்டிலோவெனில் விந்தையிலும் விந்தை! தாயின் மடி கிடந்து குழவிகள் விளையாடி, தரித்திரம் தாண்டவமாடும் சிறு குடியிலும் களிப்பை யளித்தன. காதலர் களோ கவலையின்றிக் காதற் செடியிட்டு செப்பனிட்டு அது ஓங்கி மரமாகிக் குலுங் கப் பூத்துக் காய்ப்பதை நின்று நோக் கினர்; விஷமச் சிறுவர்கள் களித்துக் சிரித்துச் சகிக்கவொண்ணாத விஷமத்தி லீடுபட்டார்கள்.

கணபதி சுப்ரமண்யனும் ஓரிளம் காளை தான். ஆனால் அவன் பிஞ்சிலேயே பழுத்துவிட்டான். அவனது வயதிற்கு அவனது அறிவு வளர்ச்சி நமது ஆச்சர்ய சக்திக்கு வேரர் முடக்குப் போடுவது போன்றிருந்தது. அவனது இளம் ஆர்வம் கொந்தளித்துக் கொப்பளித்தது. அவன் அபாரசக்தியின் அணைக்கட்டேபோலிருந் தான். அவனது உணர்ச்சி வேகமோ வெனில் எல்லைக் கடங்காததாக விருந்தது.

ஓரிடத்தில் அவன் அமிதக் களஞ்சியத் தைக் கண்டான்; ஓரிடத்தில் பயங்கர வறுமையைக் காணச் சகியாது திகைத் தான். ஓரிடத்தில் அளவற்ற களிப்பைக் கண்டான்; மற்றோரிடத்தில் சகிக்க வொண்ணாத துன்பத்தைப் பார்த்தான்; இன்னுமோரிடத்தில் விரும்பப் பட்டவை வேண்டப்படாது நாசமாயின; மற்று மோரிடத்திலோ கதறி விரும்பினாலும் வேண்டியவை கிடைப்பதரிதா யிருந்தன.

அடிமையால் நாடு வருந்தியது; அடிமை அச்சமளிச்கும் வறுமையைக் கொணர்ந்திருந்தது. அடிமை நாட்டில் பிளவை யுண்டாக்கியிருந்தது; ஒற்று மையைத் தலைகாட்டாது விரட்டியடித்து விட்டது. இந்திய மக்களின் ஆவியைக் கொன்றது. அவர்களது பழைய காலத்து மயிர்க்குச்செறியும் படியான ஆண்மை யைக் களைந்துவிட்டது; தீரத்தைத் தீயத் தீர்த்துவிட்டது. மனிதனின் உன்னத குணங்கள் நசித்து வந்தன. கடமை, ஒழுக்கம் போன்ற உயர்ந்த மானிட வொழுக்கங்கள் வழுவிவிட்டன.

'இனிச் சகியோமென' இரண்டாவது மகத்தான போராட்டம் ஆரம்பித்தது. பல தேசபக்தர்களும், வீரச் சிறுவர் சிறுமிகளும் சிறை சென்றனர்.

* * *

மாலை மணி நான்கு. அன்று சதிரவன் சீக்கிரம் மலை வாயில் விழுந்து விட்டவன் போன்று இருள் மூடியது: தேசிய சர்வ கலாசாலையில் ஒரே பரபரப்பு; 'சிவாஜி ஹால்' முன்பு பெரும் கூட்டம்; மூவாயிரம் மாணவர்களின் கூட்டம். தேசியக் கூவல்கள் வான மண்டலத் தைக் கிழித்துக்கொண்டு கிளம்பின. கணபதி சுப்பிரமணியன் மெதுவாக எழுந்தான்; பின்வருமாறு ஒரு தினசரிப் பத்திரிகைத் துண்டொன்றை மெதுவாக ஆனால் கம்பீரமாக வாசித்தான்; 'அண்ணாமலை சர்வகலா சாலையில் நேற்று லலிதாவென்ற மாணவியுடன் பத்து மாண வர்கள் கைது செய்யப்பட்டார்கள்' அன் றொரு நாளவன் எப்படி அச் சர்வகலா சாலையில் கடலோரசையை எழுப்பினனோ அதைப் போலவே உணர்ச்சி வெள்ளத் தாலடித்துக்கொண்டு போகப்பட்டு அவன் இன்று ஒரு கடலோசையை எழுப் பினன்.

அசைந்து, அசைந்து வந்து நின்றது ஒரு போலீஸ்கார். கணபதி சுப்பிரமணிய னும் கைது செய்யப்பட்டான்.

வருடங்கள் ஓடி மறைந்தன. நாடு ஏராளமான தியாகங்களையும் வீரச்செயல் களையும் இயற்றியது. இந்திய மக்கள் ஒரு முகமாகத் திரண்டு சுதந்திரத்திற்குப் போராடினர். அது ஒரு மகத்தான போராகவே யிருந்தது; மஹாபாரதப் போரையும் விட மஹத்தான தென்ன லாம். சத்தியம் வென்றது; குரங்குப் பிடியொத்த அன்னிய வாட்சிப்பிடியி னின்று நாடு நழுவியது. ஏகாதிபத்தி யத்தின் வேர்கள், ஆணி வேருள்பட களையப்பட்டது.

நாட்டில் ஒரே குதூகலம்; ஒரே களிப்பு. நாடு ஒருங்கே திரண்டு வெற்றி யைத் தேசிய வுற்சவமாகக் கொண்டா டிற்று. சிறை புகுந்த தியாகிகளும், வீரச் சிறுமி, சிறுவர்களும் வெற்றிமாலை சூடி வெளிப் போந்தனர்.

கணபதி சுப்பிரமணியன் சிறைவாயி லிருந்து ஒரு அடி எடுத்து வைத்தான். கையில் ஒரு பூமாலையுடன் ஓர் சிறுமி ஓடோடியும்வந்தாள். அவள் 'இந்தியாவின் சுதந்திரப் போராட்ட'த் தன்று காதல் கொண்டேன் உம்மேல் என்று மொழிந்த படியே இவ்வழகிய ரோஜா மாலையை அவனது கழுத்திலிட்டாள்.

யார் கேட்பார்கள்?

ஏ. முகம்மது ரஷீத், பி. எஸ்ஸி
(ஆனர்ஸ்)

ஜில்லென்ற வெகு மனோகரமான மாலை. மேகங்கள் வானில் வந்து கொண்டிருந்தன —துறைமுகத்தில் கப்பல் நுழைவது போல. கடைத்தெருவில் எல்லோரும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். சிலருக்குச் சவப்பார்வை; சிலருக்குச் சவநடை. ஒன்றுமில்லாத மைனர்கள் தான் மிகவும் ஓய்யாரமாகத் துள்ளிக்குதித்து ஸ்டெயில் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

சோமு அர்த்தமின்றி தன் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான். இல்லை, நிஜத்தைச் சொல்ல வேண்டுமானால் அவன் வண்டியில் உட்கார்ந்திருந்தான்; எருது தன்னிஷ்டம் போல ஊர்ந்து கொண்டிருந்தது அவன் மனம் பாழடைந்த மடத்தைப் போலச் சூன்யமாக, சோம்பல் கணிகையின் மார்பின்மீது படுத்துக்கிடந்தது.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் சூழ்ந்து கொண்டு வந்தது. முனிசிபல் விளக்குகள் அங்கங்கே மினுக்க ஆரம்பித்தன--ஒன்றுமில்லாத நண்பர்கள் தளுக் பண்ணி தங்களைப் பெரிய மனிதர்களாக்கிக்கொள்வது போல. வாடைக்காற்றும் இரக்கமின்றி ஏழைகள்மீது வீசஆரம்பித்தது. சோமு கைகால்களை முடக்கிகொண்டு குறுகி வண்டிக்குள் உட்கார்ந்திருந்தான்; அவன் மனமும் குறுகிக்கிடந்தது.

எருதுகூட அசைய இஷ்டமில்லாமல் அசைந்து கொண்டிருந்தது. அதற்கும் ஏதுவும் யோசனையோ, என்னவோ?

சோமுவிற்குக் காலை முதல் ஒரு சவாரியும் கிடைக்கவில்லை. அதைப்பற்றியும் அவனுக்கு அக்கரையுமில்லை.

"ஏய்ய்!.........வண்டி"........பிரேமாஸ்டோருக்கு வருகின்றாயா?...... ...."

சோமு துள்ளி விழுந்து, எழுந்து நின்றான்.

சிறியகண்கள், பெரியமூக்கு, கோரை மீசை, பருத்தசரீரம்—இவ்வளவுங் கொண்ட ஒருகுட்டை மனிதன் நின்று கொண்டிருந்தான்.

"சொல்லு....என்னவாடகை?..........."

"..........ம்ம்..................."

"இரண்டணாதான் கொடுப்பேன்...."

சோமு பதிலே சொல்லவில்லை, இரண்டணா என்றால் எவ்வளவு என்று அர்த்தமில்லாமல் அவன் மனம் எண்ண ஆரம்பித்தது.

வந்தமனிதன் வண்டியில் ஏறிஉட்கார்ந்தான். வண்டியும் மெதுவாக நகர ஆரம்பித்தது.

"என்ன இது? எருமைபோல நகருகின்றதே.......கொஞ்சம் வேகமாக ஓட்டு..."

சோமு அந்தமனிதனைத் திரும்பிப் பார்த்தான். ஆனால் ஒரு வார்த்தையும் வெளியில் வரவில்லை.

அந்தமனிதன் ஏற இறங்க சோமுவை நோக்கினான். "என்ன சங்கதி?" என்ற கேள்வியும் முரட்டுக்குரலில் பிறந்தது

சோமுக்குத்தொண்டை கம்மிக்கொண்டது. "என் மகன்—ஒரேமகன்........ இரண்டு நாட்களுக்குமுன் இறந்து போனான்......சாமி..........."

அந்தக் குட்டை மனிதன் இதை ஒன்றும்பிரமாதமாக எடுத்துக்கொள்ளவில்லை. அவன் பொன் கடியாரம் கொஞ்சம் மங்கி இருந்ததாக அவனுக்குப்பட்டது. தன் சில்க் கர்சீபால் மெதுவாகத் துடைத்துக் கொண்டான் பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல, "எப்படி:இறந்தான்?" என்று கேட்டு வைத்தான்.

"என்னமோ சாமி! மூன்று நாள் ஜுரம் ......போய் விட்டான்.........."

"டேய்ய்! அயோக்கிய ராஸ்கல்!! இடது பக்கமாக ஓட்டடா கழுதை!!!..........."

அந்த ரஸ்தாவைச்சென்ற இரண்டுமணி நேரமாக ஆண்டு கொண்டு வரும் போலீஸ் சேவகனின் ராஜாங்க அதட்டல் இது.

சோமு ஒன்றும் பதில் சொல்லாமல் மெதுவாக இடது பக்கம் திரும்பினான். போலீஸ் சேவகனின் மேல் ஏற்பட்ட

கோபத்தைத் தன் எருதின் மேல் கூடக் காட்டவில்லை. அவனுக்குக் கோபமே ஏற்படவில்லை.

"என்ன இது ?..... உம்ம்..... ஜல்தியாக ஓட்டப்பா......" அந்தச் சவாரி ஆளும் கொஞ்சம் தன் அதட்டலைக் காட்டி வைத்தான்.

சோமு இரண்டு மூன்று தடவை சவுக்கை ஆட்டிவிட்டு வண்டியிலிருந்த மனிதனைச் சும்மா திரும்பித் திரும்பிப் பார்த்தான். ஆனால் அந்த ஆளோ கண்களை மூடிக்கொண்டு ஏதும் கேட்க இஷ்டமில்லாதவனைப் போல உட்கார்ந்திருந்தான். அதற்குள் குறித்த இடமும் வந்து சேர அந்த மனிதன் ஒரு நிக்கல் காசை அனுவசியமாக விட்டெறிந்து அப்பால் சென்றான்.

குளிர்காற்று இன்னும் வேகமாக அடிக்க ஆரம்பித்தது. சோமு தலை குனிந்தவாறு உட்கார்ந்திருந்தான். அவன் இதயத்தில் எவ்வளவு குளிரோ, ஜில்லிப்போ ?

'சனே சனே' பாட்டு ஒரு சீட்டியால் எங்கிருந்தோ ரீங்காரித்தது. நடுவில் பாஷன் சிரிப்புகள்—இடி இடிக்கிறமாதிரி.

மூன்று நவயுவன்கள். இருவர் ஒல்லி. ஒருவன் கொஞ்சம் பருமன். மிகவும் உல்லாஸமாகப் பேசிச் சிரித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் நிலை என்னவோ லட்சத்தில் பிறந்து கோடியில் கொப்பளித்தமாதிரி இருந்தது.

"ஒய்ய்.........கார்ட்மே(ஏ)ன்.......... கொஞ்ச தூரம்-ஸிக்ஸ் அன(ஏ)ஸ்........"

"எவ்வளவு ஆனபோதிலும் சரி......"

வாயிலிருந்த சிகரெட்டை விட்டெறிந்தவாறு மிகவும் டம்பமாக அவர்கள் ஏறி உட்கார்ந்தார்கள்.

"எங்கே பஞ்சாப்-கா-பேட்டா மாதிரி போகவேண்டும் !.......பார்க்கலாம்......"

"ஆஹா ! என்ன நேர்த்தியான சட்டையப்பா உனக்கு !"

"என்னமோ ஐயா !...உங்களைப்போல நல்ல சட்டைகளைப் போட நானெங்கே போவேன் ?......"

பிறகு மூவர்களும் உனக்கு இடமில்லை எனக்கு இடமில்லை என்று சண்டை போட ஆரம்பித்தார்கள். அவர்கள் சம்பாஷணை அதிலிருந்து எங்கெங்கேயோ திரும்பித் திரும்பிச் சென்றது.

"எனக்கு ஸிவியர் ஹெட் ஏக்..... இரண்டு தடவை சினிமா பார்ப்பதென்றால் ?......"

"ஏன் சினிமா பிடிக்கவில்லையா ?"

"சினிமாவை யார் கண்டார்கள் ? பக்கத்திலே ஒரு (F) ஆர்ஸி லேடி உட்கார்ந்திருந்தாள் பார்........."

"ஓ! அந்த மயக்கமோ ?......"

"ஆஹா ! ரொம்ப குஷால் பேர்வழிகள் !" என்று சோமு மனத்தில் எண்ணிக்கொண்டான்.

"என்ன 'கார்ட் மாஸ்டர்'! வண்டி நகரவே மாட்டேனென்கிறதே !......"

எதிர்பாராவிதமாக ஒருவன் ஒரு அதட்டல் போட்டான். அந்தத் தொனியால் சோமு பயந்துவிட்டான் கூட கொஞ்சம் நேரங் கழித்து மெதுவாகத் திரும்பினான்.

"இரண்டு நாளைக்கு முன் என் ஒரே மகன் செத்துப்போனான் தம்பி" என்ற வார்த்தைகள் மிகவும் கனமாக அவனிடமிருந்து வெளிப்பட்டன.

"ஆமாம் ஐயா! நீ கூட ஒரு நாள் செத்துப்போக வேண்டியவன்தான்! சரி நடக்கட்டும் , ...ஜல்தியாக வண்டியை ஓட்டு"

"உனக்குக் கலியாணம் கூட ஆகிவிட்டதா ?"

மற்றொரு மைனருக்குப் பெரிய சந்தேகமாகிவிட்டது. ஏழைகளுக்குக் கலியாணம் வேண்டியதில்லை என்ற எண்ணம் போலும் அவருக்கு !

சோமு ஏதோ பதில் சொல்லப்போனான்.

அதற்குள், "வண்டியை நிறுத்து !" என்ற தொனி வண்டிக் கூண்டையே கிழித்துக்கொண்டு வெளிக்காற்றில் கலந்தது.

இரண்டு மூன்று காசை வண்டிப்பாதையின் மீது விட்டெறிந்து அவர்கள் சிரித்து விளையாடியவாறு இறங்கினார்கள்.

ஒருவித ஏக்கத்துடன் சோமு, அவர்கள் இருட்டில் போவதையே உற்று பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களின் பேச்சும், சிரிப்பும், உருவங்களும் ஒவ்வொன்ருக இலேசாக மறைந்து, முற்றிலும் மறைந்து விட்டன.

சோமு, மறுபடியும் தனிமையாகிவிட்டான். வழியில் சென்று கொண்டிருந்த மனிதர்களை உற்றுப்பார்த்தான். ஒருவரும் ஏனென்று கேட்கவில்லை. ஏழையின் வருத்தத்தைப் பங்கெடுத்துக்கொள்ள யார் தான் இசைவார்கள்—பெரிய மனிதர்கள் என்று நினைத்துக்கொண்டு வீண் டமாரம் அடிப்பவர்களைப் பற்றிச் சொல்லுகின்றேன்.

இறந்துபோன மகனைப் பற்றிப் பேசித் தன் துக்கத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாமென்பது சோமுவின் எண்ணம். ஆனுல் அவன் துக்கத்தை யார் கேட்பார்கள் ?

சோமு, வண்டியை மெதுவாகத் தன் குடிசையை நோக்கிவிட்டான். அவன் துர்ப்பாக்கிய நிலமையைப் பற்றி கேவலம் பெருமூச்சுகூட விடவில்லை. அவன் துக்கம் முழுவதும் அவன் சிறு இதயத்தில் கொந்தளித்துக்கொண்டு கிடந்தது.

சோமு, ஜுரத்தால் எப்படி யெல்லாம் கஷ்டப்பட்டான் ; உயிர் போகும்பொழுது என்னென்ன சொன்ஞன் ? இறந்த பிறகு தான் பிணத்தின்மேல் விழுந்து எப்படி விழுந்து புலம்பி அழுதான் ;......இவை எல்லாவற்றையும் யார் கேட்பார்கள் ?

குடிசையும் வந்துவிட்டது. மெதுவாக வண்டியை விட்டுக் கீழே இறங்கிஞன்.

எருதை மெதுவாக வண்டியிலிருந்து அவிழ்த்தான். அதுகூட அவன் வருத்தத்தை அறிந்துகொண்டதைப் போல தலையைக்கூட ஆட்டாமல் மெதுவாக அவனுடன் நகர்ந்தது.

அதைக் கட்டிவிட்டு, கொஞ்சம் வைக்கோலை அள்ளிப்போட்டான். அதுவும் அசைபோட ஆரம்பித்தது.

எதையோ நினைத்துக்கொள்ள சோமுவின் கண்கள் நிறைய கண்ணீர் நிறைந்தது.

“ஹும்! புல் வாங்கக் காசில்லாமல் வைக்கோல் தின்கின்ருயா ?......என் மகனிருந்தால் ஒருநாளாவது உன்னை இந்த நிலையில் விடுவாஞ ?.........”

தன் கிழிந்த வேட்டியால் கண்களைத் துடைத்துக்கொண்டான். சிறிது நேரம் மௌனமாக இருந்தது. பிறகு மறுபடியும் ஆரம்பித்தான்.

“இதோ பார்......சோமு போய்விட்டான்—இந்தக் கிழவயதில் என்னைத் தனியாகவிட்டு...........அநியாயமாக இறந்து போஞன்........உனக்கு ஒரு மகனிருந்தானென்று வைத்துக்கொள். அவன் தீடீரென்று அநியாயமாக இறந்துபோனுல் உனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்குமென்று யோசித்துப் பார்......”

சோமு, மேலே பேசாமல் நின்ருன். பேச முடியாதபடி அவன் தொண்டை அடைபட்டது.

வைக்கோலை மென்றுகொண்டிருந்த எருது எஜமானனின் மனத்தை அறிந்துகொண்டதைப் போலத் தலையைத் தூக்கிப் பெரு மூச்சு விட்டது.

நல்ல வேளை! அந்த ஆண்டவன் அந்த வாயில்லாப் பிராணியையாவது அவனுக்கு ஆறுதலாகக் கோடுத்து வைத்தான்.

மணியின் நண்பன்

[மு. ந. சுப்பிரமணியன்]

வாழ்க்கை அந்தோணிக்கு ரஸமற்றதாகத் தோன்றியது. அந்த வெறுப்பை அவனது நீண்ட உணர்ச்சியற்ற முகம் எடுத்துக் காட்டியது. கண்களிலும் அதே வெறுப்பு பிரதிபலித்தது. அவன் ஒரு நடைப் பிணமாகச் சென்னை தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தான்.

அவன் அந்தத் தெருக்கோடி திரும்பும் போதுதான் அவன் பார்வை எதிரே பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பையன் மீது விழுந்தது. எதையும் வெறுப்புக் கலந்த அலக்ஷிய பாவத்துடனே பார்க்கும் அக் கண்கள் அப் பையனைக் கூர்ந்து நோக்கின. ஆஹா! அந்தச் சோபையற்ற கண்களிலும் அப்பேர்ப்பட்ட ஒளி உண்டாகக்கூடுமோ? ஒரு கணம் தன்னையே மறந்து நின்றான் அந்தோணி. வாய் தானாகத் திறந்துகொண்டு சிரித்தது.

பையனைத் தொடர்ந்தான்.

"குழந்தே! ஒனக்குப் பப்பரமிட்டுப் பிடிக்குமோ?"

பையன் திரும்பிப் பார்த்தான். உடனே வெகு சரளமாகப் பேசத் தொடங்கிவிட்டான்.

"ஓ! பிடிக்குமே! எங்க அப்பாகூட தினம் ஆபீஸ்லேந்து வரச்சே வாங்கிண்டு.........."

"நான் குடுத்தா தின்பியோ?"

"உம்"

உடனே அந்தோணி இடுப்பில் சுருட்டி வைத்திருந்த முடிச்சை அவிழ்த்து, காசை எடுத்துப் பக்கத்துக் கடையில் பைசாவுக்குப் பப்பரமிட்டு வாங்கிக் கொடுத்தான்.

குழந்தை ஆவலாய்ப் புசித்தான். சந்தோஷ மிகுதியால் அந்தோணியின் கண்கள் விரிந்தன. வாயைத் திறந்து பார்த்துக்கொண்டே இருந்தான். குழந்தையும் மெல்ல மெல்லத் தின்றுகொண்டே போனான். கொஞ்ச தூரம் போய்த் திரும்பி, அங்குத் தனியாக இருந்த ஒரு பங்களாவிற்குள் போனான். உள்ளே போகும்போது அந்தோணியைப் பார்த்துச் சிரித்துக் கையை ஆட்டிக்கொண்டே போனான். வீட்டைப் பார்த்தான், அந்தோணி. "மணி பவனம்" என்று எழுதியிருந்தது. அந்தோணிக்குக் கொஞ்சம் வாசிக்கத் தெரியும். பின் திரும்பிவிட்டான்.

அந்தோணிசாமி பட்டணத்தில் ஒரு பாங்கில் டபேதாராக இருந்தவன். மாரி (மேரி) அவனது மனைவி. குடும்பம் சந்தோஷமாக நடந்து வந்தது. மாதம் 15 ரூபாய் சம்பளத்தைக் கொண்டு குதூகலமாய் ஜீவனம் செய்து வந்தார்கள். அந்தோணிக்கு ஒரு பிள்ளையும் பிறந்தான். அருள்ராஜை வெகு செல்வமாக வளர்த்து வந்தான் அந்தோணி. அருள் அழுதால் அந்தோணிக்கும் அழுகை வந்துவிடும். அவ்வளவு அன்பு!

இப்படியிருக்கையில், அவன், தெருவில் தோன்றிய காலரா அவனையும் பீடித்துக்கொண்டது. காலரா கண்ட இரண்டே நாளில், அது அவன் மனைவியையும், அருளையும் பற்றிக்கொண்டது. வெகு சிரமப்பட்டு அவன் பிழைத்துக்கொண்டான். ஆனால்............ஆனால்.......... அக் கொடிய வியாதிக்கு அவளும் அருளும் பலியானார்கள்.

அவனது வாழ்நாட்கள் அவனுக்கு இருளடைந்து தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. வேலையையும் விட்டுவிட்டான். சேர்த்துவைத்திருந்த பணம் கொஞ்சமிருந்தது. அதை வைத்துக்கொண்டு காலங்கழித்து வந்தான். அவன் ஒழுங்காகச் சாப்பிட்ட நாளே கிடையாது.

இப்படி அலைந்து திரிகையில்தான் அவன் மணியைப் பார்க்க நேரிட்டது. மணியின் தகப்பனார் கோபாலையர், எம்.ஏ. பிரபல பணக்காரர். ஒரு பெரிய கம்பெனி மானேஜர்; நல்ல செல்வாக்குள்ளவர்.

மணியினிடத்தில் அந்தோணி அவனுடைய முக ஜாடையையும் அங்கலக்ஷணங்களையும் கண்டான். 'அருள்தானே' என்றுகூட எண்ணிவிட்டான். இதுவே அவன் தன்னையு மறியாமல் மணியிடம் வைத்திருந்த பிரேமைக்குக் காரணம். தினந்தோறும் மணியை சாயங்காலம் அதே இடத்தில் தயாராகக் காத்திருந்து, சந்திப்பான். இருவரும் குதூகலமடைவார்கள். பிறகு பெப்பர்மிண்ட் வாங்கிக் கொடுப்பான். மணியோடு அவன் எவ்வளவோ விஷயங்கள் பேசியிருக்கிறான். ஆனால் அவன் பேரை மாத்திரம் கேட்டதில்லை. அவனைக் 'குழந்தை' என்றே கூப்பிடுவது வழக்கம். ஒருநாள் அவனை 'அருள்' என்று கூப்பிட்டுவிட்டான் மறதியாக.

"போடா, எம் பேரு அது ஒண்ணும் இல்லே. 'மணி'ன்னு கூப்பிடு" என்றான் குழந்தை.

பாவம் அந்தோணி மனத்தைக் குழந்தை அறிய முடியுமா?

ஒருநாள் சாயங்காலம் அந்தோணி வருவதற்கு அன்று நேரமாய்விட்டது. வழக்கமாய் சந்திக்குமிடத்தில் மணி அவனைத் தேடினான். காணோம். 'அந்தோணி' என்று கூப்பிட்டான். பதிலைக் காணோம். வருத்தத்துடன் வீட்டுப் பக்கம் நடந்தான். அவன் பங்களா கேட்டைத் தொடும்போது பின்னால் 'குழந்தே' என்ற குரல் கேட்டது.

தன்னையு மறியாமல் "அந்தோணி" என்று சந்தோஷ மிகுதியில் கத்திவிட்டான் மணி. இதைக் கவனித்து விட்டார், மாடியில் உலாவிக்கொண்டிருந்த மணியின் தகப்பனர். கோபாலையர் பேசாமல் நடப்பதைக் கவனித்தார். மணி 'பெப்பர் மிண்ட்' பெற்றுக்கொள்வதைப் பார்த்தார். அவர் ஒரு சந்தேகப் பிரகிருதி.

அந்தோணி போய்விட்டான். மணி உள்ளே வந்தான்.

"கையிலே என்னடா?" என்றார் கோபாலையர்.

மணி நடுங்கிவிட்டான். அவனுடைய பயத்தைக் கண்ட கோபாலையருக்கு மனமிரங்கியது.

"இனிமே, கண்ட பயல்களிடம் ஏதாவது வாங்கித் தின்னு, அடிச்சுடுவேன் தெரியுமா, போ உள்ளே", என்று சொல்லிப் போய்விட்டார்.

இதற்குப்பின் பல தடவைகள் மணியை பங்களா வாசலிலேயே அந்தோணி சந்தித்திருக்கிறான். கோபாலையரும் இரண்டு மூன்று தடவை கவனித்திருக்கிறார் இதை. ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை. மணியையும் வைவது கிடையாது. ஆனல் சந்தேகத்துடனேயே இதைக் கவனித்து வந்தார்.

அன்றைய தினம் மணியோடு அந்தோணி பேசிக்கொண்டிருந்தான் பங்களா வாசலில்.

"இந்த வளை, ரொம்ப நல்லாயிருக்குது. இல்லே?" என்று கேட்டான் அந்தோணி, மணி கையில் போட்டிருந்த தங்க வளையல்களைக் காட்டி.

"என்னெ வாசிக்க வெக்கச்சே, எங்க பாட்டி பண்ணிப்போட்டா" என்று சொல்லிச் சிரித்தான் மணி.

உணர்ச்சி மிகுதியால் மணியின் கைகளை அழுத்திப் பிடித்துப் பரவசமடைந்தான் அந்தோணி.

கோபாலையர் பார்த்துவிட்டார். "அந்த நாய் இவ்வளவு தூரத்துக்கு வந்துடுத்தா?" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டு கீழே இறங்கி வந்தார். அதற்குள் போய்விட்டான் அந்தோணி தெருக்கோடி திரும்பி. மணி மாத்திரம் எதிரே வந்தான். அவன் கையில் வளையல்கள் இருந்தன. ஆனல் அவர் அந்தோணி மீது கொண்ட சந்தேகம் போகவில்லை.

"அவன் யாருடா அவன்?" என்றார்.

"அவன் தாம்பா அந்தோணி. அவன் ரொம்ப நல்லவன். அவன் தினம் என்னைப் பார்க்க வரான் அப்பா."

கோபாலையர் கேட்டார்:—"நாளைக்கு வருவனா?"

"ஓ! வருவானே! அவன் ரொம்ப ரொம்ப நல்......

"சரிதான்டா போடா, உள்ளே" என்று பையனை அதட்டி விட்டு மாடிக்குப் போய்விட்டார்.

மறுநாள் மாலை. அந்தோணி வந்தான். ஆனல் கோபாலையர் வீட்டில் தயாராக இருந்த இரு போலீஸ்காரர்கள் அவனை மிரட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தோணிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனல் அவன் சிரித்துக்கொண்டே சென்றான். இப்பொழுது அவனுக்கு வாழ்க்கை அலகூழியமாகத் தோன்றியது. இதைப் பார்த்த மணி கதறித் தீர்த்துவிட்டான்.

அந்தோணிக்கு இரண்டு மாதகாலம் ஜெயில் வாசம் கிடைத்தது—வளையைத் திருட முயன்றதாக.

அவன் ஜெயிலுக்குப் போய் 15 நாட்களிருக்கும். கோபாலையர் உலாவிக்கொண்டிருந்தார். சாயங்காலம் மொட்டை மாடியில் ஒரு ஜவான் வந்து,

"அந்தக் கயிதே ஜெயில்லேயே செத்துப் பூட்டுதுங்க. அதாங்க அந்தோணி" என்றான்.

அப்போது அங்கே பெருக்கிக்கொண்டிருந்த வேலைக்காரி துடப்பத்தைப் போட்டு விட்டு நின்றாள்.

"அவரு போய்ட்டாரா?" என்று துக்கத்தோடு கேட்டாள்.

"அவனைத் தெரியுமா, உனக்கு, செல்வி?" என்று கேட்டார் கோபாலையர்.

"தெரியாதே என்னங்க, எங்க பக்கத்து வூடு தானே? அவரோட பொஞ்சாதி புள்ளை ரெண்டும் போன மார்கழிக் காலராலே பூட்டுதுங்க. அது லேந்து மனுஷனே மாறிப் பூட்டாருங்க. எப்பவாவது என்னோடே பேசிக்கிட்டிருப்பாரு. அவர்கூட ஒரு மாசம் முன்னடி சொன்னரு நீ கூட்ர வூட்டுப் பிள்ளை, எங்க அருளு மாதிரியே இருக்குதுன்னு. ஆமாங்க அவங்க அருள், நம்ப மணி யாட்டமே தான் இருக்கும். அவரு ஜெயிலுக்குப் போன விஷயமும் கேள்விப் பட்டேனுங்க ஆனு, அவர் கால் தூசிகூட அந்தமாதிரி வேலை செய்யாதுங்க."

கோபாலையர் அலறிப் போனர். உடனே ஜெயிலுக்கு ஓடினர். அதிகாரிகளைப் பார்த்துத் தான் பிணத்தைப் புதைக்கும் செலவுகளை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னர். பின் கிறிஸ்தவ முறைப்படி அந்தோணி அடக்கம் செய்யப்பட்டான். கோபாலையரும் கூடவே மாதா கோவிலிலுள்ள புதைக்குமிடம் சென்றார். அவனைப் புதைத்த கல்லறையின் மேலுள்ள சிலுவையில் "அந்தோணி, மணியின் நண்பன்" என்று செதுக்கி இருந்தார்.

பின் வீடு திரும்பினர். மணி தரையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ சொல்லிக்கொண்டே எழுதிக் கொண்டிருந்தான் ஸ்லேட்டில். அவனைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு அங்கிருந்த சோபாவில் தொப்பென உட்கார்ந்தார் கோபாலையர்.

காகா கலேல்கார்

எழுதியவர்:—புரொபஸர்: என். ஆர். மால் கானி,
மொழிபெயர்த்தவர்: ஆ. வே. ஜெயராமன்

1914-ம் ஆண்டி லிருந்து காகா கலேல் காரை நான் அறிவேன். நாங்க ளிருவரும் 1908-ல் பூனா பர்கூஸான் கல்லூரியில் கல்வி கற்றிருந்தாலும், அப்பொழுது எங்களிடையில் இவ்வளவு பரிச்சயம் கிடையாது. அவ் வருஷந்தான் லோக மான்ய திலகர் கைது செய்யப்பட்டுச் சிறையி லடைக்கப்பட்டார். அதே காலத் தில் டாக்டர் சொய்த்ராம் டொ மான்—ஜேவாஹ் என்னுமிடத்தில் ஓர் பிரம்ம சரிய ஆசிரமம் நடத்தி வந்தார். அவ் வாசிரமம் பழங்கலைகளைப் புத்தொளியில் பார்க்க விரும்பும் என் போன்ற இளைஞர் களுக்கும், ஹிந்து அநாதைகளுக்கும், புகலிடமாகவும், அறிவு பெறும் இடமாக வும் விளங்கி வந்தது.

முஸாபர்பூர் ஜி. பி. பி. கல்லூரியில் புரொபஸரும், என்னுடைய கூட்டாளியு மான ஆசார்யா கிருபளானிக்கு 1907 முதல் காகா சாஹிபை நன்ருகத் தெரியும். அவர்தான் காகா சாஹிபை சிந்து மாகா ணம் சென்று, ஆசிரமத்தில் டாக்டர் சொய்த் ராமோடு வசித்துக்கொண்டு, அவருக்கு உதவியாக இருக்குமாறு தூண்டியவர். அக் காலத்தில் கிருபளானி தான் சம்பாதித்த பணத்தை யெல்லாம் 'அபாயகரமான' செயல்களுக்குக் கொடுத் துதவுவார்! அதில் பாதி சொய்த் ராம் ஆசிரமத்துக்கும், பாதி என் வழியாகவும் செலவழியும். அவர் கொடுத்தார். கொடுத் ததை டாக்டர் சொய்த் ராம் ஆசிரமத்துக் குக் கொடுக்கும் பெருமையை நான் அடைந்தேன்! சொய்த் ராமோ அதைச் செலவழிப்பதில் கிடைத்த ஆனந்தத்தை அடைந்தார்!

அச் சமயந்தான் நான் காகா சாஹிபைச் சந்தித்தது. அது முதற்கொண்டு நான் அவருடன் கூடிப் பழகும் பெருமையை யடைந்தேன். 1915-ல் அப் பெரியார் எங்களை ஆசிரமத்தில் விட்டுச் சென்ற பொழுது ஒன்றை எங்கள் மனத்தில் ஊன் றிச் சென்ருர். கலையின்றிப் பாலைவனம் போலக் கிடந்த என் ஹிருதயத்தில் நீர் நிலையே போன்று ஸம்ஸ்கிருதம் ஊற் றெடுத்தது. அவர் சென்றதும் நான் பாட சாலைக்குத் தினம் போகாமலிரேன். பண் டர்கார் இலக்கணத்தின் முதல் பாகத்தை விழுந்து விழுந்து வாசிக்கத் தொடங்கி னேன். பிற்காலத்தில் பிரக்யாதி பெற்ற மஹாராஷ்டிர வித்வான் விஷ்ணுவி னிடந் தான் பாடங்கற்றுக்கொண்டேன். ஜி.பி.பி. கல்லூரியில் சேர்ந்தும் நான் சமஸ்கிருதத் தை விட வில்லை. ஆங்கே என். கே. ஓக் போன்ற பல நண்பர்களும் துணைபுரியலா னுர்கள். 1930-ல் சிறைவாசம் செய்த பொழுதுகூடப் படிப்பை விட்டேனில்லை.

படிப்பு அதிக முன்னேற்ற மடையா விட்டாலும், ஆசை அதிகமாக உண்டா யிற்று. காகா சாஹிப் விதைவிதைத்தது மல்லாமல் வழியையுங் காட்டினுர். செல் லும் பொழுது கீதையின் பதினேந்தாவது அத்தியாயத்தையும் கொடுத்துச் சென் ருர். அவ் வத்தியாயம் முழுவதும் என் றும் என் மனத்திரையி லிருந்து அழிய வே அழியாது. இப்பொழுது இருப்பது போலவே அப்பொழுதும் எனக்குப் புஸ்தகத்தின் மீது ஆர்வம் அதிகம். அவர் செய்த உதவிக்குக் கைம்மாருக என் அலமாரியி லிருந்த புஸ்தகங்கள் எல்லா வற்றையும் காகா சாஹிபுக்குக் கொடுத் தேன். ஆனுல் அவர், என்று ஆசிரமத்தை விட்டுச் சென்ருரோ அன்றே அப் புத்த கங்க ளெல்லாம் கூட்டிலிருந்து விடுபட்ட பக்ஷிகளைப் போலப் பறந்தோடி விட்டன.

1919-ல் மறுபடியும் நான் முஸாபர் பூரில் காகா சாஹிபைச் சந்தித்தேன். அப் பொழுது அவரும் ஸ்வாமி ஆநந்தும்,

கிருபளானியைப் பார்க்க முஸாபர்பூர் வந்திருந்தார். அம் மூவரும் நேபாளுக்குப் பிரயாணமானார்கள். முஸபர் பூரில் இருக்கும்பொழுதெல்லாம் எங்கள் நாட்கள் குதூகலமாகக் கழிந்தன. அப்பொழுது நாங்கள் எவ்விதம் ஓடினோம், குதித்தோம்; பக்கத்துத் தோப்பு மாமரங்களில் ஏறி மாங்காய் பறித்துத் தின்றோம் என்று நினைக்கும்பொழுதெல்லாம் என் மனம் குதூகலமாகிறது. அப்பொழுது தான், காகா சாஹிப் தேசியக் கல்வி போதகர் மட்டுமன்றி, நாகரிக மனிதரென்றும் தெரிந்துகொண்டேன். அவர் உடல் சமவெளியில் ஓடுமேயன்றி அவர் ஆன்மா உயரப் பறக்கும். அவர் சேவை செய்யாத இடமே இல்லை. ஸ்ரீஜத் தேச பந்துவுடன் பரோடா ஆசிரமத்திலும், டாக்டர் சொய்த் ராமோடு ஹைதராபாத்திலும், கவி தாகூருடன் சாந்தி நிகேதனத்திலும், பிற்பாடு காந்திஜியுடன் குஜராத் வித்யா பீடத்திலும் சேவை செய்திருக்கிறார். பரோடா ஆசிரமம் அரசாங்கத்தாரால் அடைக்கப்பட்டது. வித்தியா பீடமோ இன்றோ நாளையோ என்ற நிலையிலிருக்கிறது. ஆனால் காகா சாஹிபின் கொள்கை மட்டும் என்றும் மாறாமல் இருக்கிறது.

இந்திய நாகரிகம் ஹிமாசலய வாசிகளின் நாகரிகமே. காந்திஜி நம் இந்தியாவின் தனிப்பிறப்பு. அவர் மட்டுந்தான் ஹிமாலய நாகரிகத்தை அளந்திருக்கிறார். சமவெளியில் பிரயாணம் பண்ணும் பொழுது "ஹிமாலயத் தப்புகளைச்" செய்கிறார்! ஹிமாலய வாச ஸ்தலங்களான கில்ஜித், மானஸரோவர், காட்மாண்டு முதலிய இடங்கள் காகா சாஹிபுக்கு உயிர். அவர் அவ் விடங்களை விரும்புவது போலவே, நானும் விரும்புகிறேன். அவரும் என்னை அங்கு அழைத்துச் செல்வர். ஆனால் அவர் நேரமெல்லாம் சேவா கிராமத்திலும், எவரும் அறியாத சிறிய கிராமங்களிலும் செலவழிந்துவிடுகிறது.

அவருக் கிருக்கும் சம்ஸ்கிருத ஞானத்தையும், பாஷா விற்பத்தியையும், கலையின் ஆர்வத்தையும் குஜராத்துக்கு வெளியிலுள்ளோர் சிலரே அறிவார். காந்திஜியின் இதையின் மொழி பெயர்ப்பைக் காகா சாஹிபும், வினோபாஜியும் தான் வெளியிட்டார்கள். காகாசாஹிபு எதிலும் கரைகண்டவருமில்லை, எதிலும் சப்பையுமில்லை. உங்கள் குழந்தைகளுக்கு அழகான பெயர்கள் இடவேண்டுமானால், அவரைக் கேளுங்கள். அதர் பெயர் சூட்டினால் வெகு அழகாக இருக்கும். ஒருசமயம் அவக் என்னிடம், டில்லியிலிருக்கும் ஹரிஜன் தொழில் கூடத்தை ஏன் 'விஷ்ணுகாரியாலய,' மென்று வைக்கக்கூடாதெனக் கேட்டார். ஏன் வைக்கக்கூடாது? தலை நகரத்தில் முடிசூடா மன்னனாலும், இளவரசர்களாலும் நடத்தப்படும் சிறப்பு வாய்ந்த ஹரிஜன்காலனியை "ஹரிஜன் உத்தியோகசாலை" என்றுதான் கூப்பிடுகிறார்கள்.

காகாசாஹிப் குஜராதி பாஷைக்கு வேண்டிய அளவு தொண்டுசெய் திருப்பது எனக்குத் தெரியும். நவயுக குஜராதி வசன நடையில் காகா சாஹிப் முதல் ஐவர்களில் ஒருவராக விளங்குகிறார். குஜராதிபாஷையை முன்னுக்குக் கொண்டு வந்த காந்திஜி கூட்டாளிகளில் இவர் காந்திஜிக்கு அடுத்தபடியாக நிற்கிறார். அப்பாஷையில் அவர் ஓர் புதியநடையையும், புதிய அமைப்பையும் புகுத்தியிருக்கிறார். இயற்கையை அனுபவிப்பதற்கென்றே பிறந்தவர்; பிரயாணத்தில் பிரியமுள்ளவர்; பழங்கால இந்துதேச சரித்திர அபிமானி. நாவலை விட நல்லதாக வாசிக்க விரும்புகிறவர்கள், இவருடைய புஸ்தகங்களைத்தான் எடுப்பர். என்னைவிட எளிய நடையிலும், நானும் எழுதமுடியாத பலரகத்திலும் எழுதுவதில் வல்லமை வாய்ந்தவர்.

காகா சாஹிப் மேடைப் பிரசங்கத்தில் கைதேர்ந்தவரல்லர். நாம் நம்முடைய பிரசங்க மமதையினாலும், ஆடம்பரத்தினாலும் ஏமாறாமல் இருந்தால், ரஸமும் விஷயங்களும் மிகுந்த அவர் சொற்பொழிவைக் கேட்டு இன்புறலாம்.

கிரகணங்கள்

[ஆர். கே. விசுவநாதன் எம். ஏ. அண்ணாமலைநகர்]

ஒரு பிரகாசமான பொருளிலிருந்து புறப்பட்டுவரும் ஒளி நமது கண்ணிலே படும்போது அது கண்ணுக்குப் புலனாகிறது. சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒளி என்பது பிரகாசமான பொருளிலிருந்து வெளிப்படும் எண்ணற்ற சிறுதுகள்களினால் ஏற்பட்ட உணர்ச்சியே என்று கருதினார்கள். இத்துகள்கள் செல்லும் பாதைகளை ஒளிக்கிரணங்கள் என்றார்கள். மேலும் இத்துகள்கள் எல்லாம் மிகுந்த கதியுடன் செல்லுகின்றன என்றும், அதையே நாம் ஒளியின் கதி என்று கூறுவதாகவும் சொன்னார்கள். இந்த சித்தாந்தத்திற்குத் துகள் சித்தாந்தம் எனப்பெயரிட்டார்கள். ஒளிக்கிரணங்களெல்லாம் துகள்களாலானவையாயின் கிரணங்கள் நேர் கோடுகளிலேயே செல்லவேண்டுமென்று நாம் ஊகிக்கலாம். ஒளிக்கிரணங்கள் நேர் கோடுகளிலேயே செல்லுவதை நாம் அன்றாட வாழ்க்கையில் நிகழும் பல சம்பவங்களிலிருந்து அறிகிறோம். ஒரே நேர்கோட்டிலிருக்கும் இரண்டு பொருள்கள் ஒன்றையொன்று மறைத்து விடுவதை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். கூரையிலுள்ள சிறு துவாரத்தின் வழியாக அறையினுள் நுழையும் சூரிய வெளிச்சத்தைக் கவனித்தால் இந் நேர்கோட்டுச் செலவு பின்னும் விளங்கும். கிரணங்களைக் கொண்டு இந் நேர்கோட்டுச் செலவும் ஒளியின் கதியும் எவ்வாறு அறியப்பட்டது என்பதை இக் கட்டுரையில் விளக்குவோம்.

ஒளி சில பொருள்களின் வழியாக ஊடுருவிச் செல்லும் தன்மை வாய்ந்தது. ஆனால் பொருள்களிற் பெரும்பாலான ஒளியைத் தம்முட் செல்லவொட்டாது தடுத்து விடுகின்றன. முன்னதைத் தெளி பொருள்கள் என்றும், பின்னதைத் தகை பொருள்களென்றும் கூறுவார்கள். அறையிலுள்ள ஒரு பிரகாசமான விளக்கின் சமீபத்தில் இருக்கும் தகை பொருளின் நிழல் சுவரில் விழுவதைப் பார்க்கிறோம். விளக்கிலிருந்து வெளிவரும் ஒளிக்கிரணங்கள் செல்லும் வழியில் இப் பொருள் நிற்பதால் அக் கிரணங்கள் நேர் கோடுகளிலே செல்லுவது தடுக்கப்பட்டுப் பொருளின் வடிவை ஒத்தநிழல் சுவரில் ஏற்படுகிறது என்று உணரலாம். கிரகணங்களெல்லாம் வானவியல் அளவிலே ஏற்படும் நிழல்களாலேயே நிகழ்கின்றன.

பூமி, சந்திரன் இரண்டும் சுயம் பிரகாசமில்லாதவை. சூரியன் ஒளி அவற்றில் விழுவதாலேயே அவைகள் நமக்குப் புலனாகின்றன. பூமி சூரியனைச் சுற்றி ஓடுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றி ஓடுகிறது. இதனால் மாதமிருமுறை இம் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வருகின்றன. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி இருந்தால் பௌர்ணமி என்றும் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் இருந்தால் அமாவாசை என்றும் கூறுகிறோம். சில பௌர்ணமி நாட்களிலே சூரியனிடமிருந்து சந்திரன் மீது விழும் ஒளியைப் பூமி தடுத்து விடுகிறது. அதாவது பூமியின் நிழலில் சந்திரன் வந்து விடுவதால் சந்திரன் தனது ஒளியைஇழந்துவிடுகிறது. இதைச் சந்திரகிரகணம் என்கிறார்கள். சில அமாவாசை நாட்களில் சந்திரனது நிழலில் பூமியின் ஒருபாகம் வருவதால் அவ்விடங்களிலே சூரியன் ஒளி தடைபட அங்குள்ளவர்களுக்குச் சூரியன் புலப்படாது போகிறது. இதைச் சூரியகிரகணம் என்கிறார்கள். ஒவ்வொரு பௌர்ணமியன்று சந்திரகிரகணமும் ஒவ்வொரு அமாவாசையன்று சூரியகிரகணமும் ஏன் உண்டாகவில்லை என்று நினைக்கலாம். சூரியனைச் சுற்றிப் பூமிவரும் மண்டலத்தின் தளமும், பூமியைச்சுற்றிச் சந்திரன்வரும் மண்டலத்தின் தளமும் ஒன்றாயிராமல் ஒன்றுக்கொன்று சிறிதுசாய்ந்து யிருப்பதால் பௌர்ணமி அமாவாசை காலங்களிலெல்

லாம் சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர் கோட்டில்வராமல் சிறிது விலகி விடுகின்றன. இதனுல்தான் ஒவ்வொரு பௌர்ணமி அமாவாசையன்றும்கிரகணங் கள் ஏற்படுவதில்லை.

இப்பொழுது கிரகணங்களைக்கொண்டு ஒளியின் கதி நிர்ணயிக்கப்பட்ட விதத் தைக் கவனிப்போம். சூரியனைச் சுற்றிப் பூமியைப் போலவே, குரு, சனி முதலிய மற்ற கிரகங்களும் ஓடி வருகின்றன. பூமிக்கு இருப்பதுபோல குருவிற்குச் சந் திரன்கள் அல்லது உபகிரகங்கள் உண்டு. ஆனல் குருவைச் சுற்றி ஐந்து சந்திரன் கள் ஓடி வருகின்றன. இவைகளும் சூரிய னிடமிருந்தே ஒளியைப் பெறுகின்றன. குருவின் ஏதேனுமொரு சந்திரனது கிரக ணத்தைக் கொண்டு ஒளியின் கதியை அளவிடலாம் என்று "ரோமர்" என்ற வானநூல் விஞ்ஞானி 1676-ஆம் ஆண்டில் காட்டினர். குருவின் நிழலில் அதன் சந் திரன்களில் ஒன்று வரும்பொழுது பூமியி லுள்ள நமக்கு அது புலனுவதில்லை. நிற்க, பூமியும் குருவும், சூரியனைச் சுற்றி அவற் றின் மண்டிலங்களிலே ஓடிவரும்போது அவற்றினிடைத் தூரம் ஒருசமயம் உச்ச மதிப்பையும், மற்ருெரு சமயம் நீச மதிப் பையும் அடைகிறது. முதல் நிலையில் இரண்டு கிரகங்களும் இருக்கும்பொழுது அடுத்தடுத்து ஏற்படும் குருவின் ஏதேனு மொரு சந்திரனது கிரகணங்களின் இடைக் காலம், இரண்டாவது நிலையில் பூமியும் குருவும் இருக்கும்பொழுது அதே சந்திரனது கிரகணங்களின் இடைக் காலத்தினின்று வேருக இருப்பதை ரோமர் கண்டார். மேலும் இரண்டு நிலை களின் தூரத்தை ஒளி கடப்பதற்கான நேரத்தினளவு வித்தியாசப் படவேண்டு மென்று எடுத்துக் காட்டினர். சூரியனை ஒரு முறை சுற்ற குருவுக்குச் சுமார் பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன. பூமி ஒரு வருஷத்தில் சுற்றிவிடுகிறது. இவ்விரண்டு கிரகங்களின் இடைத் தூரம் நீச மதிப்பிலிருந்து உச்ச மதிப்பாக ஆவ தற்கு சுமார் ஏழு மாதம் ஆகும் என்று அறியப்பட்டது. குருவின் சந்திரன்கள் குருவை வெவ்வேறு கால அளவுகளில் சுற்றிவருகின்றன. குருவுக்குச் சமீபத்தி லுள்ள சந்திரனுக்குச் சுமார் 12 மணி நேரம் ஆகின்றதென்றும், தூரத்திலுள்ள சந்திரனுக்கு 16 நாள் ஆகின்றதென்றும் அறிந்தார்கள். மற்ற சந்திரன்களுக்கு இவ்விரண்டிற்கும் நடுவே அவ்வவற்றின் தூரங்களிற் கேற்றவாறு ஆகிறதென்றும் அறிந்தார்கள். ஏதேனுமொரு சந்திர னுக்கு ஏற்படும் கிரகணங்களை அடுத்தடுத் துக் கண்டு அவற்றின் இடை நேரத்தைக் காணலாம். இதை குருவின் ஒரு சந்திர னுக்கு பூமி குரு இரண்டும் முன் சொன்ன நிலைகளிலும் அளந்து, 1000 செகண்டு கள் வரை வித்தியாசப்படுவதை ரோமர் அறிந்தார். இரண்டு நிலைகளின் இடைத் தூரம் பூமி சுற்றிவரும் மண்டலத்தின் விட்டம் ஆதலால் அதன் மதிப்பை நாமறி வோம். இது பதினெட்டு கோடி அறு பது லக்ஷம் மைல்கள் என்று வானவியல் பரிசோதனையினல் கணக்கிட்டிருக்கிருர் கள். ஆகவே இந்த தூரத்தை ஒளி ஆயி ரம் செகண்டுகளிலே கடந்தது. எனவே ஒளியின் கதி செகண்டிற்கு ஒரு லக்ஷம் எண்பத்தாருயிரம் மைல் என்று காண்பித் தார்.

முடிவில் ஒளியின் நேர்கோட்டுச் செல வைப் பற்றிப் பின்னர் அறியப்பட்டதைக் கூறுவோம்.

ஒளிக் கிரணங்கள் பிரகாசமான பொருளிலிருந்து வெளிப்படும் எண்ணற்ற சிறு துகள்களின் பாதைகள் அல்லவென் றும், அவைகள் எங்கும் வியாபித்திருக் கும் விசும்பில் ஏற்பட்ட அலைகளே யாகும் என்றும், யங் (Young) முதலிய விஞ்ஞானிகள் காட்டினர்கள். அதாவது தற்காலம் ரேடியோ நிலையங்களில் ஒலி யைப் பரப்புவதற்கு உபயோகப்படும் மின் காந்த அலைகள்போன்று ஒளி அலை களும் ஒருவகை மின்காந்த அலைக ளென்று அறிந்தார்கள். இரண்டும் ஒரே கதியுடன் செல்வதை எடுத்துக் காட்டினர் கள். தற்கால ஆராய்ச்சியின் பயனக ஒளி சிறு துகள்களின் பாதைகளென்ற சித் தாந்தத்தை மறுபடியும் மேற்கொண் டிருக்கிருர்கள்.

கடமை

"ஹரிணி"

1

"உஷாதேவி மிகவும் பாக்யசாலி. பெண்ணென்று பிறந்தால் உஷாவைப்போ லிருக்கவேண்டும்"-என்று அவ்வூரிலுள்ள பெண்மணிகள் யாவரும் பேசிக்கொள்வது வழக்கம்.

ஏனென்றால் உஷாவின் கணவன் அவளை மிகவும் அன்புடன் நடத்தி வந்தான். அவளை உயிரினும் மேலாகக் காதலித்தான். ஒரு நிமிஷம்கூட அவளைப் பிரிந்திருக்க அவனால் முடியாது. உஷாவைக் காணாத ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றும். ஆகையினால் அவளை அவளுடைய பிதாவின் வீட்டிற்குக்கூட அனுப்பமாட்டான்.

உஷா எப்பொழுதும் கலியாணப் பெண் மாதிரிதான் காணப்படுவாள். அவளை அலங்கரித்துப் பார்ப்பதில் அவனுக்கு மிகுந்த ஆவல். இதற்காக அவன் அநேக விதமான அலங்காரப் பொருள்களை வாங்கி வருவான். தினமும் சாயங்காலம் உலாவ அழைத்துச் செல்லுவான். இருவரும் ஆனந்தமாக, சினிமாவுக்குச் செல்வார்கள்.

இணை பிரியாத ஆனந்தமான இத் தம்பதிகளைக் கண்டு மற்ற பெண்கள் பொறாமைப்படுவது சகஜந்தானே. ஒரு நாள் உஷாவின் தோழி மனோரமாவும், விமலாவும் அவளைக் காண வந்தார்கள்.

அப்பொழுது "ஏனடி! உஷா! நீ என்ன மந்திரம் செய்கிறாய்? உன் கணவர் உன்னை அன்புடன் நடத்துகிறாரே? அதை எங்களுக்கும் சொல்லேன்?" என்று விமலா கேட்டாள்.

இதைக் கேட்ட உஷாவின் மனம் கர்வத்தினால் நிரம்பியது. அவளுடைய முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. புன்னகையினால் அவள் முகம் சோபித்தது. "ஆம்! நான் மிகுந்த பாக்யசாலி தான். என்னுடைய கணவர் என்னை அன்பாகவும், மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்துகிறார். என்னைத் தன்னுடைய உயிராகவே மதிக்கிறார். எனக்கு ஒரு குறைவுமில்லை." என்று அவள் நினைக்கும்பொழுது, அவளுடைய முகம் கரைகடந்த சந்தோஷத்தினால் மலர்ந்தது. ஆனந்தமும், வெட்கமும் கலந்த ஒரு சிறு புன்னகை அவளுடைய முகத்திற்குத் தனிச் சோபையை யளித்தது.

2

பீஹார் மாகாணத்திலேயே ஹரிஹர க்ஷேத்ரத்தில் நடக்கும் திருவிழாதான் மிகவும் பிரசித்தமானது. வெகு தூரத்திலுள்ள ஜனங்கள் கூட்டம் கூட்டமாக இத் திருவிழாவுக்கு வருவது வழக்கம்.

இன்று திருவிழாவின் மூன்றாவது நாள். எங்கும் ஒரே பரபரப்பு, குதூகலம். ஸ்திரீகளும், குழந்தைகளும், ஆடவர்களும் புது ஆடைகளணிந்து ஆனந்தமாக அங்குமிங்கும் சென்ற வண்ணமிருக்கின்றனர்.

கங்கை நதிக்கரையில் கூடியிருக்கும் ஜனத்திரளைக் கணக்கிட முடியாது. அங்கே படகு விளையாட்டு நடக்கிறது. தங்கள், தங்கள் மனைவி மக்களுடன் படகில் ஏறிச் சென்றனர் ஆடவர்கள்.

உஷாவும், தன் கணவனுடன் ஒரு பெரிய படகில் ஏறி உட்கார்ந்தாள். அப் படகில் கூட்டம் அதிகம். படகோட்டிகள் எவ்வளவு தடுத்தும் கேட்காமல் ஜனங்கள் ஏறிவிட்டனர்.

படகு செல்ல ஆரம்பித்தது. யாவரும் ஆனந்தமாகப் பாடினார்கள். பூர்ண பிரவாகத்தின் நடுவில் படகு போய்க்கொண்டிருக்கிறது.

திடீரென்று "ஐயோ! ஐயோ!" என்ற கூக்குரல். படகோட்டிகளின் தைரியம் பலிக்கவில்லை. படகு சுழலில் அகப்பட்டுக் கொண்டது. நீந்தத் தெரிந்த ஜனங்கள் நதியில் குதித்துக் கரைசேர முயன்றனர்.

எப்படியும் இறப்பது நிச்சயம், முயற்சி செய்துதான் பார்க்கலாமே என்று நினைத்து, நீந்தத் தெரியாதவர்கள் கூட நதியில் குதித்து விட்டனர்.

படகில் உஷாவும், அவள் கணவனும் தானிருந்தனர். உஷா மிகவும் பயந்து விட்டாள். அவளுடைய ஹ்ருதயம் பறையடித்தது. மான்குட்டியைப் போல் மிரண்டு விழித்தாள். கண்களை மூடித் தன்னுடைய பதியின் க்ஷேமத்திற்காகக் கடவுளை வேண்டினாள்.

பதிமகா புருஷரோ வரிந்து கட்டிக் கொண்டு தண்ணீரில் குதிக்கத் தயாராகயிருந்தார். உஷா தன்னுடைய பதியைத் தழுவிக்கொள்ள நினைந்து, கைகளை விரித்துப் பாய்ந்தாள்.

பாவம் தடாலென்று படகின் தட்டில் சாய்ந்தாள். கணவர் தன்னுடைய உயிரின் மீதாசையால் தண்ணீரில் குதித்து விட்டார்.

கரையிலுள்ள ஜனங்கள் ஆரவாரித்தனர். அவர்கள் அப்பெண்மணியைக் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்தித்தனர்.

3

தயவுள்ள இவ்வளவு மனிதர்களுடைய வேண்டுகோளைக் கடவுள் அலக்ஷியம் செய்வாரா? கனம் குறைந்து விட்டபடியால் படகு முழுகவில்லை. கரையின் ஓரமாக வந்து சேர்ந்தது. சில மனிதர்கள் உஷாவைக் கரையில் எடுத்து வந்து கிடத்தினர். உஷாவின் கணவர் அவர்களும் வந்து சேர்ந்தார்.

"ஏனப்பா! உனக்குத்தான் நன்றாக நீந்தத் தெரியுமே? உன் மனைவியையும் ஏன் நீ காப்பாற்றக் கூடாது? அது உன் கடமையல்லவா?" என்று பலர் அவனைக் கேட்டனர்.

பாவம், பேதைப் பெண் உஷா தன் கணவனுடைய முகத்தை இமை கொட்டாமல் பார்த்தாள். அவன் வெட்கத்தினால் தலை குனிந்தான்.

"ஐயோ! என்னை என் கடவுள் காப்பாற்றினார்? நானிறந்திருக்கக் கூடாதா?" என்று உஷா நினைத்தாள்.

ஒரு க்ஷணம் அவளுடைய எதிர்கால வாழ்க்கைச் சித்திரம் கண்களின் முன்பு தோற்ற மளித்தது. ஆம்! என்னுடைய சுகத்தைக் கண்டு பொறாமையடைந்தவர்கள் இப்பொழுது சந்தோஷப்படுவார்கள். அவர்கள் பரிகசிப்பார்கள். என்ன அதிசயம்! அளவுகடந்த பிரேமையினால் என்னை என் தந்தையின் வீட்டிற்குக் கூட அனுப்பாத மனிதர் இவர் தானா? 'நீயில்லாமல் இவ் வீட்டில் எப்படி வசிப்பேன்?' என்று கூறிய அதே மனிதர்தானா இவர்? என்று அவள் மனத்தில் எண்ணங்கள் தோன்றிப் போராடின.

மறு விநாடி சீ! "இதென்ன? நானிப்படி நினைப்பது தவறு. பகவான் என்னுடைய பதியைப் பயங்கரமான விபத்திலிருந்து காப்பாற்றினார். அதற்காக நான் கடவுளிடம் நன்றி பாராட்ட வேண்டும். சந்தோஷம் கொண்டாட வேண்டும்." என்று நினைத்தாள்.

ஆம்! வீணாக ஒருவர்மீது குற்றம் சாட்டுவது சரியல்ல. உலகத்தில் யார் சுயநலமில்லாதவர்கள்? எவர்களுடைய பிரேமையில் சுயநலத்தின் நிழலில்லை? மனித சமூகத்தினுடைய ஒவ்வொரு ரத்த நாடியிலும் சுயநல ரத்தம் ஓடிக்கொண்டு தானிருக்கிறது.

ஆனால் கடமை......ஆம் மனித சமூகமே கடமை என்கிற சங்கிலியால்தான் பிணைக்கப் பட்டிருக்கிறது.........ஆம் மனைவி, புருஷன், புத்ரன், தந்தை, இவைகளெல்லாம் மாயையின் வலைகள். யார் யாருக்குச் சொந்தம்? மாயையில் கட்டுண்டு, தன்னுடைய உயிரைக் காத்துக் கொள்வதற்குச் சக்தி யிருந்தும்கூட, காப்பாற்றிக் கொள்ளாவிடில், அது தற்கொலைக்குச் சமானமல்லவா? பாபமல்லவா?......

இம்மாதிரியாகப் பலவித எண்ணங்களில் உஷா மனம் குழம்பினாள். பிறகு மனத்தைத் தேற்றிக்கொண்டு, சீ! என்ன யோசனை இது? மங்கையர்களுக்கு இதைவிட மங்களகரமானது எது? எப்படியோ கணவர் உயிர்பிழைத்து விட்டார். அதுதான் பெண்களுக்கு உண்மையான ஆனந்

தம். என்று எண்ணி, கண்களில் உத்சாகம் நிறைந்தவளாக எழுந்து நின்றாள்.

கணவனுடைய வெட்கத்தைப் போக்கடிப்பதற்காக "வாருங்கள், போகலாம். நல்ல வேளையாக கடவுள் நம்மை காப்பாற்றிவிட்டார். தாங்கள் ஏன் சிந்திக்க வேண்டும்" என்று கூறிப் புறப்பட்டாள்.

ஆனால் அவளுடைய மனம் சமாதானமாகவில்லை. இச் சம்பவம் அவளுடைய மனத்தில் முள்ளைப்போல் உறுத்தியது. தன்னுடைய தோழிகள் தன்னை இதைப் பற்றிக் கேட்டால் தான் என்ன பதில் சொல்வது ? என்று சிந்தித்தாள்.

4

நான்கு வருஷங்கள் சென்றுவிட்டன. உஷா இப்பொழுது தாயார். மரணத்தை எதிர்நோக்கி யிருக்கும் தன்னுடைய பதியின் படுக்கை யருகிலுட்கார்ந்துகொண்டிருக்கிறாள். கண்ணீர் கன்னங்களின் வழியே ஓடுகின்றது.

ஆறு மாதங்களாகிவிட்டன. ஜ்வரம் இன்னமும் குறைந்தபாடில்லை. பிழைப்பதற்கு நம்பிக்கையு மில்லை. டாக்டர்கள் 'க்ஷயரோகம்' என்று கூறிவிட்டனர்.

"தெய்வமே! நீ என்ன நினைத்திருக்கிறாயோ? எனக்கொன்றும் தெரியவில்லையே!" என்று பெருமூச்செறிந்தாள் உஷா.

உஷாவின் மனதும், கண்களும் நதியின் பிரவாகத்தைப்போ லிருந்தன. அச்சமயம் ஆறுதலளிக்கும் குரல் சமீபத்திலிருந்து கேட்டது. குழந்தை தூங்கி விழித்து 'அம்மா' என்றழைத்தான்.

உஷா கண்களைத் துடைத்துக்கொண்டாள். ஒரு நிமிஷம் கண்களை மூடியபடி கடவுளை வேண்டினாள். 'கருணைக் கடலே! என்னைத் தனியாகத் துன்பப்பட விடாதே."

குழந்தையை முத்தமிட்டாள். "ஐயோ! இவ்வளவு பெரிய உலகத்தில் இக் கபடமற்ற குழந்தையை யார் ஆதரிப்பார்கள்? யாவரும் அநாதை என்பார்களே.........ஆனால்......ஐயோ!......... இக்குழந்தைக்காக நான் வாழவேண்டுமா ? இல்லை.......புருஷனுக்குப் பிறகு இவனுக்காக நான் உயிர் வாழ்வது தர்மமா ?" என்று யோசித்தாள் உஷா.

நாற்புறமும் புயல். ஒரே மண் காற்று தொண்டையை யடைத்தது. கண்ணீர் ஆறாகப் பெருகி யோடியது. சரீரம் நடுங்கியது. என்ன இது! சரீரமட்டுமல்ல. வீடுமுழுவதுமே ஆடியது. உஷாவின் கணவனுடைய கட்டிலும் குலுங்கியது.

உஷா குழந்தையை மார்புடன் அணைத்தவண்ணம் ஓடிவந்தாள். அதேசமயம் எங்கும் கூக்குரல்—'பூகம்பம் — பூகம்பம்!'

உஷையின் கணவன் மெதுவாக "உஷா! என்னால் எழுந்திருக்கமுடியாது. என்னுடைய ஆசையை விட்டுவிடு. குழந்தையுடன் ஓடு. சீக்கிரம்! தப்பித்துக்கொள்" என்றான்.

உஷா திகைத்துநின்றாள். பயங்கரமான சப்தம். அடுத்த நிமிஷம் வீடு விழுந்துவிடும். ஆனால் ஒருஅடிகூட அவள் நகரவில்லை. கணவனைக்காப்பாற்றவோ வழியில்லை. அவள் தனியாக நின்றாள். கையில் குழந்தை........

ஒரு சுவர் விழுந்துவிட்டது. கணவன் கூச்சலிட்டான் "உஷா! ஓடு! ஓடு! விடைபெற்றுக் கொள்ளுகிறேன். கண்ணே! குழந்தை பத்திரம்"

உஷா ஓடினாள். பயத்தினால் கதறி அழும் குழந்தையைத் தெருவில் விட்டுவிட்டு, கணவனைக் காப்பதற்காக வீட்டிற்குள் மறுபடியும் ஓடிவந்தாள்.

ஆனால்..............பாவம்! எல்லாம் வீணாகிவிட்டது. அதேசமயம் தடதடவென்ற சப்தத்துடன் வீட்டின் மேல் தளம் இடிந்துவிழுந்தது.

பாவம் பேதை உஷாவுக்குத் தன்னுடைய குழந்தைக்காகப் பிரார்த்தனை செய்யக் கூட அவகாசம் கிடைக்கவில்லை.

கணவனும், மனைவியும், பூமாதேவியின் கர்ப்பத்தில் சேர்ந்துவிட்டார்கள்.

இணைபிரியாத தம்பதிகள் ஒன்றாகச் சமாதி யடைந்தனர்.

(ஒரு ஹிந்திக் கதையைத்தழுவி எழுதியது.)

தமிழும் ஆங்கிலமும்

[புரசு பாலகிருஷ்ணன். எம். பி. பி. எஸ்]

இந்தியாவில் புகுந்த ஆங்கிலத்தினாலும் ஆங்கில நாகரிகத்தினாலும் நம் இலக்கியத்திற்கு உண்டான பலன்கள் என்ன ?

முதலில் அச்சு யந்திரங்கள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டன. இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத முதல் சாதனம் இதுவே. ஆங்கிலேயர்கள் முக்கியமாய்ச் செய்த இலக்கிய வேலை பைபிளின் மொழி பெயர்ப்புகள். ஆனால் நம் இலக்கியத்திற்கு அவர்கள் செய்த பேருபகாரம் அச்சுயந்திர ஸ்தாபனம்தான். அது நம் இலக்கியங்களை எல்லோருக்கும் சுலபமாய்க் கிட்டும்படியாகச் செய்தது. மேலும் அது வசனநடை தோன்றுவதற்கும் சாதனமாயிருந்தது. வசனம்தான் இலக்கியத்தின் அஸ்திவாரம். அதுதான் இலக்கியத்தை நாள்தோறும் உயிரிழக்காமல் காப்பாற்றி வருகிறது. அதுதான் சகல ஜனங்களையும் எளிதில் வசப்படுத்துகிறது; பொதுவாய் அதுதான் அவர்களுடைய புத்தியை ஊட்டி வளர்க்கிறது. வசனம் இதுவரை இல்லாமலிருந்ததால் தான் இந்தியாவில் இலக்கிய வளர்ச்சியும், பொது மக்களிடையே இலக்கிய ரசனையும் குறைவாக இருந்தன. இலக்கிய வளர்ச்சியை ஒரு தொடர்பாய் இருக்கச்செய்வது வசனம்தான். அது இல்லாமற் போனதனால்தான் இந்தியாவில் இலக்கிய வளர்ச்சி அடிக்கடித் தடைபட்டுப் போயிற்று.

19-ம் நூற்றாண்டிற்கு முன்பு நம் பாஷைகளில் வசன நூல்கள் கிடையா. இலக்கிய ஆசிரியர்கள் முற்றிலும் பக்தர்களாயும், வாழ்க்கையைத் துறந்தவர்களாயும் இருந்தனர். வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும் என்று அவர்கள் எழுதவில்லை. அநேகமாய் அவர்கள் தம் பக்தியைத் தான் பாடல்களாய்ப் பாடினார்கள். வெறும் இலக்கிய நோக்கமோ, சுத்தக் கலை நோக்கமோ ("Art for art's sake" என்னும் கொள்கை) அவர்களுக்குக் கிடையாது. இப்பொழுதோ வசனம் பிறந்தது. வசன நூல்கள் தோன்றின. புதிய இலக்கியக் கலைகள்—நாவல், சிறுகதை, புதுமாதிரி நாடகம் முதலியவை—உண்டாயின. புது இலக்கியக் கொள்கைகள்! பாஷையைக் கையாளுவதில் புதிய புதியமுறைகள், ஏற்பட்டன. (ஆனால்இன்றுகூட சரியானவிமர்சன நூல்கள், சரித்திர நூல்கள், சாஸ்திர நூல்கள், ஒன்றும் எழுதப்படவில்லை.) இலக்கிய விஷயங்கள் பக்தியும் சமயங்களும் மாத்திரமாயில்லை. வாழ்க்கையைச் சித்திரிக்கவேண்டும். வாழ்க்கையைத் துறக்க வேண்டாம் மனித உணர்ச்சிகளை உண்மையுடன் விவரிக்க வேண்டும்; மாந்தர்களின் துன்பங்கள், இன்பங்கள், ஆசாபாசங்கள், முதலியவைகளை நித்ய அழகுடன் நூல்களில் நீடித்திருக்கச் செய்ய வேண்டும் என்ற கொள்கைகள் பிறந்தன. நூல்களை எழுதும் விதத்திலும் செட்டு வேண்டும். ஒரு ஒழுங்கானமுறை-நுட்பத்துடன் கையாளும் முறைவேண்டும்—என்று ஏற்பட்டது. இவைகளுக்கு உதாரணங்களாய்ப் பல மேனாட்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். அவர்களுடைய நூல்களைக் 'காபி' செய்யாமல், (அதாவது, திருடி எழுதாமல்) அவர்களுடைய முறைகளை மாத்திரம் கையாண்டு, நம்மவர்களுடைய வாழ்க்கையைத்தான் சித்திரிக்க வேண்டும் என்ற ஞானமும் நம்மவர்களுக்கு உண்டாயிற்று.

ஆனால் இவை எல்லாம் எளிதில் உண்டாகிவிடவில்லை. முதலில் ஒரே குழப்பமாய்த்தான் இருந்தது. வெள்ளத்தின் வேகத்தைக் கண்டு நம்மவர்கள் மிரண்டுவிட்டனர். ஆங்கிலத்தை ஜீரணிக்கும் சக்தி நம்மவர்களுக்கு இல்லாமற் போயிற்று. கடைசியில் அடிமை மனப்பான்மையைத் தேசியம் வென்றது. தேசியத்தினால் நமக்கு ஒரு புது சக்தி பிறந்

தது. ஆங்கிலத்தையும் ஆங்கில நாகரிகத்தையும் ஜீரணித்து, பின்பும் இந்தியர்களாய் இருப்பதற்குப் போதுமான பலமும் ஆண்மையும் நமக்கு உண்டாயின.

ஆகவே நம் தமிழ் நாட்டில் இப்பொழுது ஒரு நவயுகம் பிறக்கும் தறுவாயில் இருக்கிறது. ராமலிங்க சுவாமிகளும் பாரதியாரும் அதன் வருகையை ஏற்கனவே முரசடித்துவிட்டனர். அம் முரசொலியை இந்தியா முழுவதும், உலகம் முழுவதும், கேட்கும்படியான பேரொலியாய்ச் செய்யவேண்டியது நம் பொறுப்பாய் இருக்கிறது. "நம் பொறுப்பு," என்றால், ஆங்கிலம் தெரிந்து, அதன் மூலம் சகல உலக விஷயங்களையும் அறிந்தவர்களின் பொறுப்பில் உள்ளது என்று நான் கூசாமல், சிறிதும் தயங்காமல், கூறுவேன். தமிழ் இலக்கியத்தைச் செழிப்பாய் வளரச் செய்வதற்கு நமக்குத் தமிழ் ஞானம் மாத்திரம் இருந்தால் போதாது, போதவே போதாது. தற்காலம் ஆங்கிலம் தெரியாத ஒருவன் உலகம் முழுவதும் போற்றக்கூடிய தமிழ்ப் பேராசிரியனாய் இருப்பது அசாத்தியம். "ஆங்கிலம் தெரிந்தவன்" என்றால் "ஆங்கிலத்தில் எழுதுபவன்" என்று அர்த்தமாகாது; "ஆங்கிலம் நன்கு தெரிந்தவன்" என்றுதான் அர்த்தம். ஆங்கிலத்தில்தான் நவயுகத்திற்குரிய வேகத்தைத் தமிழுக்கு அளிக்கும் சக்தி இருக்கிறது. ஆங்கிலத்தின் பிரதம ஸ்தானத்தை மறுப்பது போலித் தேசியமாகும். ஆங்கிலம் என்றால், நான் ஆங்கில இலக்கியத்தை மாத்திரம் குறிப்பிட வில்லை; ஆங்கிலத்தினால் நமக்குக் கிட்டும் உலக இலக்கியத்தையும் உலக ஞானத்தையும் சேர்த்துச் சொல்கிறேன்.

இனி நாம் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் குறித்துச் செய்ய வேண்டியது என்ன?

ஆரம்பத்திலேயே நான் ஒரு விஷயத்தைச் சொல்லி விடலாம். "தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக நான் எழுதப்போகிறேன்," என்று ஒருவன் எழுதுவது அசாத்தியம். அப்படி ஒருவன் எழுதினால் அவன் தமிழ்ச் சேவை செய்யக் கூடியவனல்லன். ஏனெனில் எழுதும் சக்தி ஒரு தனி சக்தி. அது எழுதுபவனின் ஆத்மாவில் ஜனிப்பது. அவனுடைய நூல்கள் தெய்விகமாய் அவனுடைய அநுபவங்களின் வேதனைகளிலிருந்து பிறக்கும் அழகு வடிவங்கள்.

உண்மை மேற்கூறியதாயினும், பொதுவாய் நாம் இலக்கிய வளர்ச்சியைக் குறித்துச் செய்யவேண்டிய சில விஷயங்களை இங்கு எடுத்துச் சொல்லலாம்.

நமது இலக்கிய வளர்ச்சி முக்கியமாய் ஒன்றைப் பற்றியது. அதுதான், நாம் ஐரோப்பிய இலக்கியங்களை ஸ்வீகரித்துக் கொண்டு, அவைகளின் சக்தியைத் தமிழாக்கிவிடுவது. அவைகளின் சக்தியைத் தமிழாக்குவது என்றால், அவைகளை மொழிபெயர்ப்பது என்று அர்த்தமில்லை. ஏனெனில் ஒரு சக்திப் பொருள்தானே எல்லா வஸ்துக்களிலும் பல பேதங்களை அடைந்து, பல உருவங்களாய்த் தோன்றுகிறது? ஆயினும் மொழிபெயர்ப்புக்களும் அவசியம். அவைகளால் நாம் அந்நிய இலக்கியங்களை மாத்திரமில்லாமல், அந்நிய தேசங்களது சமூக வளர்ச்சிகளையும், மனித வாழ்வின் நன்மைக் குரியதான பல கருத்துக்களையும் முறைகளையும் நம் நாட்டில் பரவச் செய்யலாம். இப்பொழுது நாம் ஆங்கிலத்தில், பழைய நூல்களில் ஸ்வீகரித்திருப்பது குறைச்சல்; புது நூல்களிலிருந்து எடுத்துக்கொண்டது மட்டமானது; கீழ்த்தரப் பத்திரிகைளில் வெளி வருவது.

மேலும் நாம் ஐரோப்பிய இலக்கியத்தைப் பயன்படுத்திக்கொள்ளவே இல்லை என்று கூறலாம். நம்மவர்களில் அநேகர் ஆங்கிலத்தில் Thomas Hardyக்குப் பின் வந்த நாவலாசிரியர்களைப் படித்தது கிடையாது. வேடிக்கை என்னவெனில், தற்கால ஆங்கில ஆசிரியர்கள் ஐரோப்பிய ஆசிரியர்களிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக்கொண் டிருக்கின்றனர். நமக்கு ஆங்கில இலக்கியத்தைத் தாண்டுவதற்குரிய மனோபலம் கிடையாது. கால்ஸ்வொர்தி (Galsworthy) துர்கானிவ் (Turgeneo) என்னும் ருஷ்ய நாவலாசிரியரைப்

பின்பற்றுகிறார்; ஆங்கில கதாசிரியர்கள் பலர் (Chehov) செஹாவைப் பின்பற்றுகின்றனர். காமோ Katherine Mansfield) காதரின் மான்ஸ் பீல்டைப் படித்துவிட்டால், "சிறு கதைக்கு (Katherine Mansfieldயைப் பார்!" என்று சொல்லத் தயாராயிருக்கிறோம். ஆனால் Mansfield முழுவதும் செஹாவைப் பின்பற்றி எழுதியவர்.

மேலும், நம்மவர்களில் பலர் வங்காள இலக்கியத்தில் நாம் கற்க வேண்டியது சகலமும் இருப்பதாகக் கருதுகின்றனர். எனக்கு வங்காள இலக்கியத்தில் அதிக மதிப்பு உண்டு என்று முன்பே தெளிவாகி இருக்கும். ஆனால் நாம் வங்காள இலக்கியத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை என்று நான் சற்றும் தயங்காமல் கூறுவேன். நாம் பின்பற்ற வேண்டிய முறைகளைத் தானே அவர்களும் பின்பற்றுகிறார்கள்? அப்பொழுது இரண்டாந்தரச் சரக்கு ஏன்? நாம் உலக திருஷ்டியைக்கொண்டு நம்மைச் சுற்றி உலகம் முழுவதையும் நோக்கினால், "நாம் இனிச் செய்யவேண்டியது என்ன? அதை எப்படிச் செய்ய வேண்டும்?" என்ற பிரச்னைகள் நமக்கு உண்டாகாது. நமக்குள் தானாகவே ஒரு சக்தி பிறக்கும். நாம் நம் சுய தர்மப்படி, நம் இலக்கியத்தைப் படைத்துக்கொள்வோம். விஷயம் இப்படி இருக்க "தனித் தமிழ்" என்று பேசுபவர்களின் அறிவீனத்தை என்னவென்று" சொல்வது?

மேனாட்டு இலக்கிய உலகிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளில் சில வற்றை ஏற்கனவே விவரமாய்ச் சொல்லி விட்டேன். இங்கு அவைகளுடன் மற்றவைகளையும் சேர்த்து, சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். மனோதர்மம், வாழ்க்கை, உண்மை; புது இலக்கியக் கலைகளின் அமைப்பு நுட்பங்கள்; மனித உணர்ச்சிகளையும் செயல்களையும் ஹிருதயத்தினால் மாத்திரமில்லாமல், புத்தியினாலும் கூர்ந்து நோக்கி விளக்குவது; இவைகள் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில விஷயங்கள். அத்துடன் நாம் நம் இலக்கியத்தை நமது நாட்டில் சகல ஜனங்களுக்கும் பொதுவாக இருக்கும்படியாகச் செய்துவிடவேண்டும். ஏனெனில் இலக்கியம் என்பது, தன் சுய பூமியில் ஆழமாய் வேரூன்றி, தன் சுய மண்ணின் சத்தை உட்கொண்டு, தன்னைச் சுற்றியுள்ள காற்றைச் சுவாசித்து, எல்லா மக்களுக்கும் தன் கனிந்த பழங்களை அளிக்கும் ஒரு கல்ப தருவாகும்.

காயக சிகாமணி

கு. ப. ராஜகோபாலன்

காயக சிகாமணி ஸ்ரீ முத்தையா பாகவதர் உண்மையில் ஒரு பாகவதர் அல்லர் என்று சொல்லிவிடலாம்; அவர் வெறும் காயக சிகாமணிதான் என்று நான் சொன்னால் சிலர் சண்டைக்கு வரலாம். ஆனால் நான் ஏன் அவரை பாகவதர் அல்லர் என்று சொல்லுகிறேன் என்பதை அறிந்தால் ஒருவருக்கும் கோபம்வராது.

பாகவதர் என்று நாம் தற்காலம் தமிழ் நாட்டில் சாதாரணமாக யாரைக் குறிப்பிடுகிறோம்? ஹரிகதை சொல்கிறவர்களையும் பஜனை பந்தாவில் ஈடுபட்டவர்களையும்தான் அநேகமாக பாகவதர்கள் என்கிறோம். ஸ்ரீ முத்தையா பாகவதரும் ஹரிகதை சொல்கிறார். வாஸ்தவம். அழகாகவும் சாதுரியமாகவும் பேசக்கூடச் செய்கிறார். ஆனால் அவர் மனது மட்டும் ஹரிகதையில் இல்லை. கேட்போரையும் அவர் ஹரிகதையில் ஈடுபடச்செய்வதில்லை.

உதாரணமாக, அவர் "அப்ப, ராம பக்தி எந்தனோ கொப்பரா!" (அடே ராம பக்தி எவ்வளவோ மேலடா!) என்ற பாட்டை பாடும் பொழுது நமக்கு எப்பேர்ப்பட்ட உணர்ச்சி ஏற்படுகிறது! அவரே எப்பேர்ப்பட்ட உணர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது? பந்து வராளி ராகத்தில் அமைந்த அந்தக் கீர்த்தனையின் பல்லவி அமைப்பைத்தான் அவர் 'முழுக்க முழுக்க' அனுபவிப்பதாகப் படுகிறது; அதில்தான் அவர் ஈடுபடுகிறார். நம்மையும் ராகத்திலும் கீதத்திலும் தான் ஈடுபடச் செய்கிறார். அந்தப் பாட்டின் கருத்தான பக்தியில் அவர் ஈடுபடுவதாக எனக்குத் தோன்றுவதே இல்லை.

ஹரிகதையில் முக்கியமான ரஸம் பக்தி தானே? ஹரிகதை சொல்கிறவர் அதில் லயித்து அந்த உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கி எழுந்தால் தானே உண்மையாக ஹரிகதையை உருக்கத்துடன் செய்ய முடியும்? அவருடைய மனது அந்த ரஸப் பெருக்கில் ஊறி இருந்தால் தானே ஸ்வானுபூதியுடன் கூடிய அவர் சொற்கள் வேகமுள்ளவையாக இருக்கும்? காலஞ்சென்ற பழனிபாகவதருக்கு இந்தச் செல்வம் குறைவற்று இருந்தது. ஸ்ரீ முத்தையா பாகவதரிடம் இல்லை. ஹரிகதையில் அவர் லயிக்கவில்லை.

அவருடைய லயிப்பெல்லாம் வேறு இடத்தில். 'ராக சுதா பரனமுனேஜெஸி ரஞ்ஜிலு ஓ மனஸா!' (ராகமென்ற மதுவை யுண்டு மகிழ்ச்சி கொள் மனமே!) என்று தியாகய்யருடன் ஸ்ரீ முத்தையா பாகவதர் பாடுகிறார். அவர் சதா தன்மனதை நாதோ பாஸனை யிலேயே தூண்டிக்கொண்டிருக்கிறார்.

இப்பொழுது உயிருடனிருக்கும் கர்நாடக சங்கீத வித்வான்களுக்கிடையே தலை சிறந்து விளங்குபவர் ஸ்ரீ முத்தையா பாகவதர். லக்ஷண ஞானத்திலும் சரி, அனுபவ ஞானத்திலும் சரி, நிகரற்றவர். ஆனால் அவர் மேடைக்கச்சேரி செய்வதில்லை அவ்வளவுதான்.

அவர் செய்திருக்கும் கீர்த்தனையில் பல இப்பொழுதே தமிழ் நாட்டில் மிகவும் பிரபலமாகப் பாடப்பட்டு வருகின்றன. அவற்றில் அவ்வளவாக சாகித்தியச் செருக்கோ அர்த்தபாவமோ கிடையாது; ஆனால் அவற்றின் மெட்டுகளும் ராகங்களும் அழகாகவும் அபூர்வமாக அமைந்திருக்கின்றன.

மைசூர் சமஸ்தானத்தைச்சேர்ந்த பிறகு அவருடைய நாதோபாஸனை இன்னும் வலுத்துவிட்டது. ராகங்களிலுள்ள பல சுகஸ்தானங்களையும் பிருக்குகளையும் அறிந்து விஸ்தரித்து அனுபவித்து அவர் அவற்றில் அபூர்வமான மெட்டுகளை அமைத்திருக்கிறார். காம்போதியில்பாடியிருக்கும் 'அம்ப! ரத்ன கஞ்சுக தாரிணி!' என்ற பாட்டு சாகித்தியச் சிறப்பு கொள்ளாவிட்டாலும் வெகு அழகாக அமைந்திருக்கிறது. பியாக்கடை, சகானா ராகங்களில் அவர் சாமுண்டேசுவரி மேல் பாடியிருக்கும்

கீர்த்தனைகள் மிகுவும் வேகமும் கொண்டிருக்கின்றன.

ஓர் உத்சவசமயத்தில் அவரை இருமுறை வரவேற்று அவருடைய சங்கீதத்தை நெருங்கி அனுபவித்திருக்கிறேன். சாரீர சௌக்கியம்' அவ்வளவாக இல்லை. ஆனால் அபார சாதகமும் அனுபவமும் சேர்ந்து அதற்கொரு மெருகு ஏற்றியிருக்கின்றன. அந்த ஆழ்ந்த ஞானத்தின் சக்தியால் ராகாலா பனம் செய்யும் பொழுது சாரீரம் கூட உதவாத' இடத்திலும் கற்பனையின் சாமர்த்தியத்தில் சூசனை செய்து காட்டி விடுகிறார்.

ஸ்ரீ முத்தையா பாகவதர் கேவலம் ஒரு கலைஞனாகமட்டு மில்லாமல் பரம ரஸிகனாகவும் இருப்பதுதான் அவருடைய விசேஷகுணம். ரஸனை என்பது கலைத்தொழிலாளியிடம் அபூர்வம். அந்த சக்தியையே தூண்டுதலாக வைத்துக்கொண்டு தொழிலைத்துரும்பாக நினைத்தது, கலையை அதற்கு அடிமைப் படுத்தாமல் இருப்பவர்கள் வெகுசிலரே. அவர்களில் ஸ்ரீ முத்தையா பாகவதர் ஒருவர்; முதன்மை ஸ்தானம் பெற்றவர்.

உயர்ந்த கானத்துடன் உயர்ந்த அனுபவமும் சேர்ந்திருப்பதால் தான் ஸ்ரீ முத்தையா பாகவதர் சங்கீதத்தையே இன்னிசைச் சொரூபமாக்குகிறார்.

கட்டுரையாளர்களுக்கு அறிக்கை

"பாரதமணி"க்கு விஷயம் எழுதுபவர்கள் நல்ல காகிதத்தில் ஒரு பக்கத்தில் மையினால் எழுதியனுப்ப வேண்டும்.

கிராம புனருத்தாரணம், குடிசைக் கைத்தொழில், விஞ்ஞானம், பொருளாதாரம், சுகாதாரம் முதலிய விஷயங்கள் எழுதியனுப்பலாம்.

சிறுவர்க் குரிய கதைகள், நீதி போதனைகள், சிறுகதைகள், உயர்ந்த வியாஸங்கள் முதலிய விஷயங்களைத் தெளிவான நடையில் எழுதியனுப்பலாம்.

கட்டுரை எழுதுபவர் தமது பெயரையும் முழுவிலாஸத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஆசிரியர்
"பாரதமணி" காரியாலயம்
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை

விசேஷத்தின் விளைவு

[சு. வேங்கடசுப்ரமணியம்.]

"என்ன விசேஷம்?" என்றுதான் நாம் யாரைக்கண்டாலும் கேட்கிறோம். நம்மையும் கேட்கிறார்கள். மனிதன் எப்பொழுதும் விசேஷத்தையே விரும்புகிறான். சினிமா பார்ப்பவர் விசேஷக் காட்சிகளும், விசேஷப் படங்களும் கேட்கிறார்கள். பத்திரிகை யாசிரியர்களும் படிப்பவர்களும் விசேஷ மலர்களையும் இதழ்களையும் வெளியிடவும், படிக்கவும் முறையே விரும்புகின்றனர். ஊதாரியாகவும் காமுகனாகவு மிருப்பவர்கள். தங்களுக்கு வேண்டியவற்றில் விசேஷமானது ஏதாகிலும் இருக்கிறதா என்று தங்கள் கண்ணையும் கருத்தையும் செலுத்தித் தேடுகிறார்கள். இவ்விதம் உலக முழுவதுமே விசேஷங்களை விரும்புகிறது. ஆனால் சிலர்தான் அவ் விசேஷங்களின் பயனைக் கருதுகின்றனர்.

* * *

ரகு சரியாகப் பத்து மணிக்குத்தான் காலேஜ் போய்ச் சேர்ந்தான். காலேஜ் எல்லையை யடைந்ததும் அவன் முதலில் கிட்டுவைத்தான் சந்தித்தான். "கிட்டு என்ன விசேஷம்?" என்று கேட்டான் ரகு.

"விசேஷத்துக்கு என்ன குறைச்சல். இன்று நோட்டீஸ் போர்டில் வியாசத்தின் கேள்வியைப் பார்த்தாயல்லவா?" என்று கிட்டு கேட்டான்.

"இல்லையே? என்ன விசேஷம்?"

"இந்தவாரம் நம் 'நான்டீடேயல்ட்' (Non-detailed) புஸ்தகத்திலிருந்து கேட்கப்படவில்லை. பொதுவாகக் கெட்டு இருக்கிறார்கள்."

"எதைப் பற்றியாம்? என்ன கேள்வி?"

"கேள்வி இதுதான்: 'உன் பகைவன் இறக்கும் தறுவாயி லிருக்கையில், நீ என்ன செய்வாய்?"

"கேள்வி விசித்திரமாக இருக்கிறதே?"

"ஆமாம்."

அதற்குள் காலேஜ் மணி யடித்துவிட்டது. அவன் தன் வகுப்புக்குச் செல்லப் பிரிந்தான். நானும் என் வகுப்புக்குச் சென்றேன்.

* * *

இரவு எட்டு மணிக்கு அவ்வியாசத்திற்கு குறிப்பு எடுத்துக்கொள்ளச் சில காகிதங்களுடன் மேஜையின் முன் அமர்ந்தான் ரகு. ஐந்து நிமிஷம் யோசித்தான். அவன் பேனாவின் முனையைக் காகிதத் மேல் வைத்தான். பேனா ஓடத் தொடங்கிற்று. மையும் போட்டியிட்டது.

"அ—என் கொடிய பகைவன். அவன் முகத்தைக் கண்டால் நான்கு நாட்களுக்கு எனக்கு சோறுவேண்டி இராது. அவன் சிரித்தால் எனக்கு உடம்பு பற்றிஎரியும் அவன் வருத்தமுற்றால் எனக்கு கனகாபிஷேகம் செய்ததுபோ லிருக்கும். அப்படிப் பட்டவன் சாகும் தறுவாயி லிருப்பானாகில் அவனை சித்திரவதை செய்வேன். அவன் சகிக்கமுடியாமல் தவிப்பதைக் கண்டு நான் சிரிப்பேன். சந்தோஷமுறுவேன். என் நண்பர்களுக்கு விருந்தளிப்பேன்.........." என்று பல பல எழுதிவிட்டு, மணியைப் பார்த்தான். சரியாகப் பத்து. படுக்கச் சென்றான்.

* * *

"கிட்டு, வா வா. ஏது இங்கே வந்துவிட்டாய் என்ன விசேஷம்" என்று ரகு கேட்டான்.

"விசேஷமில்லாமல் உன்னிடம் வரவில்லை. கோபு தெரியுமோன்னா, பதினைந்து நாளாக படுத்தப் படுக்கையாய்க் கிடக்கிறான். விடாமல் சுரம் அடிக்கிறது."

"என் 'எனிமி' (பகைவன்) கோபுவைத்தானே சொல்கிறாய்?"

ஆமாம். விடாத ஜுரம் அடிக்கிறது. ஒரு தரம் பார்த்துவிட்டு வரக்கூடாதோ நீ. அருகில்தானே இருக்கிறான் அவன் ?"

"என் பகைவன் வீட்டுக்கு நான் போக மாட்டேன்."

கிட்டுவுக்கு இதைச் சொன்னவுடன் கோபம் வந்துவிட்டது. "சாகக்கிடக்கி றான். அப்பொழுது கூட ரகு, ரகு என்று பிதற்றிக்கொண் டிருக்கிறான் பார்த்து விட்டு வாடான்னு, 'பகைவனும், எனிமி யாம்' 'என்ன மனுஷ்யன் டா நீ ?" என்று சொல்லிவிட்டு அதி விரைவாக நடந்தான்.

சிறிது நேரம் யோசித்தான் ரகு. ஹிருதயத்தின் ஆழத்திலிருந்து ஒருதாகம், ஒரு பசி, ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அது தான் ரகுவைப் பார்க்கவேண்டு மென்ற தாகம், பசி, உணர்ச்சி.

அப்பொழுதே, அந்த வினாடியே, ஒரு சிறியதுண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு ஓடினான் கோபுவின் வீட்டிற்கு. ஓடியவன், அவன் வீட்டுவாயிலே அடைந்த வுடன் நின்றுவிட்டான். திரும்புவதற்கல்ல! "தான் திடீரென்று சென்றால் கோபு சந்தோஷத்தின் மிகுதியால்..........." என்று நினைத்து மெள்ள நடந்தான். அந்த நடையில் அவன் பூனையையும் தோற்கடித்துவிட்டான்.

கட்டிலில் கோபு தூங்கிக்கொண்டிருந் தான். சிறிது தைரியம் வந்தது. அவன் கால்பக்கம் சென்று மெள்ள மெள்ளப் பிடித்தான். பதினைந்து நிமிஷத்திற்கெல் லாம் கோபு விழித்துக்கொண்டான். நண் பர்கள்,— இல்லை பகைவர்கள்—ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

ஒரே சமயத்தில் இருகுரல்கள் வந்தன. ஒன்று "கோபு." மற்றொன்று "ரகு" நண்பர்களாகிவிட்டனர். ஆனால் அந்தக் கண்ணீருக்குப் பொறுமை பொறுக்க முடியவில்லை. இருவர் கண்களிலும் ததும்பி ஒருவரை யொருவர் பார்க்க முடியாதபடி திரைகள் போட்டுத் தடுத்து விட்டது.

* * *

சூரிய கிரணங்கள் ஜன்னலின் வழி யாக தவழ்ந்து வந்து சுளீரென்று ரகு வின் முகத்தில் அடித்தது. எழுந்திருந்து கண்களைக் கசக்கினான். கைநிறைய நீர். அப்பொழுதுதான், தான் கண்டது கனவு என்றும், தூக்கத்தில் அழுதிருப்ப தாகவும் உணர்ந்தான்.

சிறிது தூக்கம் தெளிந்தவுடன் கிட்டு கேட்ட கேள்விக்கும் ("என்ன மனுஷ் யண்டா நீ ?")உபாத்தியாயர் கேட்ட வினா விற்கும் விடை ஒன்றுதான் என்பதை யுணர்ந்தான். அவ்விடை தான் அவன் கன வில் செய்த செய்கை.

மனிதன் உள்ளத்தை யுணர்ந்தபின், ரகு அன்றிரவு தான எழுதியவற்றைச் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்தான்.

கோகிலா

[ஸ்ரீமதி ஞானம்பாள்]

"என்ன மூர்த்தி அப்பொழுதெல்லாம் விதவா விவாகம் வேண்டும் என்று பிரசங்கம் பண்ணினாயே. அதை நீயே அநுசரித்தும் விட்டாயே" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் நரசிம்மன்.

"என்ன!"

"என்னவா? என்னடா முழுப் பூசணிக்காயைச் சோத்திலே மறைக்கிறே. உன் மனைவி பால்ய விதவை என்பதை நான் நன்றாயறிவேன்."

"என்ன நரசிம்மா! ஜாக்கிரதையாகப் பேசு. யாரிடத்தில் உளறுகிறாய்?" என்று கோபமாக கர்ஜித்தான் மூர்த்தி.

"நான் நன்றாக யோசித்துத்தான் சொல்லுகிறேன். உனக்குத் தெரியாதா? இவள் எங்கள் கிராமத்துக்காரிதானே. ஆனால் இவள் ரொம்ப பழக்கமில்லை. இவள் தகப்பனை நான் நன்றாக அறிவேன். இவளுக்கு ஐந்து வயதிலேயே கல்யாணமாகிவிட்டது. இவள்கணவன் ஐந்தாறு மாதங்களுக் கெல்லாம் இறந்துவிட்டான். நான் இவளை அநேகந் தடவை பார்த்திருக்கிறேன். அதன்பின் ஊராரின் ஏச்சுக்கு இடமாகாமல் வேதகிரி தன் நிலபுலன்களை விற்றுக்கொண்டு இவளோடு எங்கேயோ ஓடிவிட்டார். அதன்பின் இவளை இன்றைக்கு உன் மனைவியாகப் பார்க்கிறேன்." என்றான் நரசிம்மன்.

"தவறு, நீ நினைப்பது மகாதப்பிதம்; யோசிக்காமல் சொல்லிவிட்டாய். என் மனைவி அப்படிப்பட்டவளல்ல. மாசற்றவள். என்னிடத்தில் ஒன்றையும் மறைக்கமாட்டாள்" என்று உறுதியான குரலில் மொழிந்தான் மூர்த்தி.

"உன்பேரிலுள்ள பிரேமையால் சொல்லாம லிருக்கலாம். அவரும், உன் மேல் உயிரையே வைத்திருக்கும் அவளை நீ நிராகரித்துவிட்டால் தன் பெண்ணின் மனம் கஷ்டப்படுமென்றும், சீர்குலைந்த தன் பெண்ணின் வாழ்க்கையை உன்னால் சரிப்படுத்திவிடலாமென்றும் சொல்லாமல் இருந்துவிட்டார். இவள் பெயர் கோகிலம் தானே. தகப்பனார் பெயர் வேதகிரி, இல்லையா?" என்று படபடப்புடன் கூறினான்.

2

தாயற்ற தன் ஒரே மகள் கோகிலாவை வேதகிரி தன் உயிர் நாடியாக மதித்து வந்தார். கோகிலமும் பார்ப்பவரை வசீகரப்படுத்தும்படியான அழகும், இளமையும் கொண்டு அன்றலர்ந்த ரோஜா புஷ்பம்போலிருந்தாள். அவள் ஒரு பால்ய விதவை என்பதை அவளிடம் சொல்ல அவருக்கு மனந்துணியவில்லை. அந்த ஊரிலும் அவள் விதவை என்பதை யாரிடமும் தெரிவித்ததில்லை. அநேக வாலிபர்கள் அவளை விவாகம் செய்துகொள்ள வந்தார்கள். அவர் அவர்களை எல்லாம் நிராகரித்துவிட்டார். ஆனால் ராமமூர்த்தி மட்டும் விடாக்கண்டனாக இருந்து அடிக்கடி அவரைத் தொந்தரவு செய்தான். கோகிலாவும் அவனை மனப்பூர்வமாகக் காதலித்தாள். அவர்கள் தனிமையாக இருந்தபொழுது ஒருவர்க்கொருவர் தங்களுள்ளத்தை வெளியிட்டுக்கொண்டார்கள்.

ஒருநாள் அவர்கள் வேதகிரியிடம் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து அவருடைய சம்மதத்தை வேண்டினார்கள். வேதகிரியின் முகம் வெளுத்து துக்கச் சாயலைக் காட்டிற்று. வெகுநேரம் மௌனமாக இருந்தார். மறுபடியும் ராமமூர்த்தி அதைப்பற்றி கேட்டபொழுது "அது முடியாதது. அவளுக்கு நான் கல்யாணம் செய்யப்போவதில்லை. என்னைத் தவிர அவளுக்கு உரிமையாளன் ஒருவனும் ஏற்படக்கூடாது" என்றார். மூர்த்தி வெகு நேரம் அவரோடு மன்றாடியும் அவர் பிடிவாதமாக இருந்ததால் வெகு வருத்தத்

தோடு வெளியில் சென்றான். கோகிலா அழ ஆரம்பித்தாள்.

வேதகிரி 'கடவுளே' புத்தியில்லாமல் அவளைச் சிறுவயதிலேயே கல்யாணம் செய்து அவள் வாழ்வைக் கெடுத்துவிட்டேனே. அவள் சுகசந்தோஷத்திற்குக் குறுக்கே நிற்கும் இச் செய்தியை அவளிடம் எப்படியுரைப்பேன். அவளுடைய கள்ளமற்ற உள்ளம் இச் சொல்லைப் பொறுக்குமா? அவன்தான் அறிந்தால் இவளை மணக்க முன்வருவானா? என்று கதறினார். இதே வருத்தத்தால் ராப் பகல் ஊண் உறக்கமின்றி வியாதி வசப்பட்டார். அப்பொழுதும் மூர்த்தி அடிக்கடிவந்து தொந்தரவுசெய்தது அவர் தேகநிலையை அதிக மோசத்தில் கொண்டுவிட்டது. அப்பொழுது அவர் தன் மகளை நிராதரவாக விட்டுப்போக மனமில்லாமல் மூர்த்தியையும் சம்சாரத்தில் பிணைத்துவிட்டு நிர்சிந்தையாக உயிரைவிட்டார். கோகிலா விதவை என்பதை அவர் ஒருவருக்குமே தெரிவிக்கவில்லை.

3

ராமமூர்த்தியும் கோகிலாவும் சுக சுவப்பனம்போல் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்த இன்பக் கனவைக் கலைப்பதற்கு வந்து சேர்ந்தான் நரசிம்மன். பால சிநேகிதனான நரசிம்மன் மூர்த்தியின் வீட்டிற்கு வந்தான். அவன் கோகிலாவைப் பார்த்தவுடன் எங்கோ அவளைப் பார்த்திருந்ததாகத் தோன்றிற்று. நன்றாக நினைவுபடுத்திக்கொண்டதும், ராமமூர்த்தி தனியாக இருக்கும்பொழுதுமுதல் அத்தியாயத்தில் சொன்னபடிசம்பாஷணை நடந்தது. அவன் சொல்வதை மூர்த்தியால் மறுக்கமுடியவில்லை.

"அவன் கூறிய அடையாள மனைத்தும் உண்மைதான். வாஸ்தவமாக அவளுக்கும் தெரிந்திருக்கலாம். அவன் சொன்னது போல் எனக்குப் பயந்து கொண்டு சொல்லாமல் இருக்கிறாளோ? என்ன! என் மனைவியே என்னிடம் ஒளிவு மறைவு வைத்துக்கொள்கிறாளா? அவள் ஒரு விதவையா?" இப்படி எல்லாம் நினைத்து கோகிலத்தை முற்றிலும் வெறுத்தான். நரசிம்மன் போனதும் அவளிடம் கோபமாக அதட்டி உண்மையை கூறும்படி கேட்டான். அதைக் கேட்டதும் கோகிலா நிலைதடுமாறினாள். "என்ன அவன் அப்படி சொன்னானா? எனக்கு ஒன்றுமே தெரியாதே" என்றாள்.

"நிஜமாகவா உனக்கு ஒன்றுமே தெரியாதா? பொய் சொல்லாதே" என்று மிரட்டினான். அவள் பொய்சொல்கிறாளென்று நினைத்தான். அது அவன் கோபத்தை அதிகப்படுத்தியது. கோகிலத்திற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு நாள்கூட மூர்த்தி அவளிடம் கடிந்து கொண்டது கிடையாது.

'சத்தியமாகச் சொல்லுகிறேன். நினைவு தெரிந்தது முதல் எனக்குக் கல்யாணமாகவில்லை. என் தந்தையும் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை' 'உன் அப்பனும் நீயும் சேர்ந்துதான் என்னைப் பெரியமடையனாக்கிவிட்டீர்களே. தெரிந்துகொண்டே இங்கு யாரை தபாய்க்கிறாய். நீசி. உன்னை என் உயிரினும் மேலாக நேசித்தேன். என் புத்தி மழுங்கிப்போயிற்று. என் முன்னால் நிற்காதே. அந்தண்டைபோ' என்று அதட்டினான். கோகிலா கெஞ்சும் பார்வையில் அவனை நெருங்கினாள். மூர்த்தி அவளைக் கரகரவென்று இழுத்து உள்ளே தள்ளிவிட்டு வாசற்கதவை தடாரென்று சாற்றிக்கொண்டு வெளியில் போய்விட்டான். கோகிலாவிற்கு ஆதிமுதல் எல்லாம் தெரியும். தன்னை ஏமாற்றிவிட்டாள் என்பதுதான் அவனுடைய எண்ணம்.

4

அன்றிலிருந்து அவளிடம் மிகவும் உதாசீனமாக இருந்தான். அவளோடு பேசுவதில்லை. அவள் ஏதாவது கேட்டால் சரியாகப் பதில் அளிப்பதில்லை. சிற்சில சமயங்களில் அவள்மேல் அவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. என்றாலும் அவள் ஒரு விதவை என்ற நினைவுவந்ததும் 'அவன் உயிரோடிருந்தால் அவனோடுதானே வாழ்வாள்' என்று எண்ணி வெறுப்புற்றான்.

கோகிலாவிற்கு இதே கவலையால் நாளுக்கு நாள் உடம்பு இளைத்துவிட்டது. தனக்கு இதைப் பற்றி ஒன்றுமே சொல்லாத தந்தையை நொந்துகொண்டாள். அப்பொழுதுதான் எதற்தாகத் தனக்கு அவர் கல்யாணம் செய்து கொடுக்கத் தயங்கினார் என்று தெரிந்தது. சிலநாளில் படுத்தபடுக்கையாகிவிட்டாள். நாளுக்கு நாள் உடம்பு அதிகரித்து பிரக்ஞையற்றுக்கிடந்தாள். மனோவியாதிக்கு மருந்து உண்டா? டாக்டர்களெல்லாம் கைவிட்டு விட்டார்கள். யமன் அவளை நெருங்கிக்கொண்டிருந்தான்.

கடைசியாக கோகிலா கண்ணைத் திறந்து நான்குபுறமும்சுற்றிப்பார்த்தாள். தன்னைத் தேடுவதையறிந்த மூர்த்தி, அவள் அருகில் போய் நின்றாள். அவ்வளவு கேவலமான நிலைமையில் கூட அவளுடைய அன்பொழுகும் வதனத்தின் சௌந்தர்யம் குறையவில்லை. அவனைக்கெஞ்சும் பார்வையில் "இப்பொழுதுதாவது நம்புகிறீர்களா? சத்தியமாக எனக்கு ஒன்றுமேதெரியாது. என் வார்த்தையைப்பூரணமாக நம்புங்கள். நான் பொய் சொல்லவில்லை "என்றாள். அவள் கண்களில் நீர் வழிந்தோடிற்று. மூர்த்தி அவள் கரங்களை இறுகப்பற்றித் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். "கோகிலா" என்றாள் குரல் தழுதழுத்தது, நாக்குழறிற்று. கோகிலா புன்சிரிப்புடன் அவனை ஒரு முறை நோக்கினாள். மறுநிமிஷம் அந்தப் பார்வைமங்கி இமைகள் ஒன்றையொன்று நெருங்கின. கண்களை இறுகமூடிக்கொண்டாள். அந்த ஆழ்ந்தநித்திரையிலிருந்து மீளவே இல்லை.

பொருளாதாரம்

[எஸ். வைத்தீஸ்வரன்]

பொருளாதாரம் என்பது சிக்கனத்தைக் குறிக்கும் மொழி. ஆங்கிலத்தில் Economics என்று பெயர். அதற்குச் சரியான மொழி பெயர்ப்பு "சிக்கனம்" ஆனல் Economics நிபுணர்கள் பொருளுக்கு எது ஆதார மென்று தேடித்திரிவதால் தமிழில் இம்மாதிரி மொழிபெயர்க்கலாயிற்று.

காங்கிரஸார் எவ்விதம் தங்கள் மனம் நோகாதிருத்தலையே அஹிம்ஸை என்று கொள்கிறார்களோ அவ்விதமே மேல் நாட்டாரும் தங்கள் தேகம் நோகாதிருத்தலையே பொருளுக்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் கொள்கையும் இதுவே. மேல் நாட்டில் முதலாளிகள் அதிகமாக இருப்பதுடன் தொழிலாளிகளும் வாழ்க்கை வசதிகளை ஏறக்குறைய முதலாளிகளுக்குச் சமமாகச் செய்துகொண் டிருக்கிறார்கள். இதனல் தொழிலாளர் 'இதா தேசத் தொழிலாளருக்குப் பரிந்து பேசினல் "உங்கள் வசதிகள் மேலும் மேலும் விருத்தியாவதின் காரணத்தைக் கவனியுங்கள். கிளர்ச்சி செய்தால் வசதி போய்விடும்" என்று அவர்களைப் பயமுறுத்த முடிகிறது. அவர்கள் வாயாலேயே வரும் இந்தக் காரணம் என்ன?

சுமார் 18-வருஷங்களுக்கு முன் இரும்புச் சாமான்கள் தயார்செய்யும் மேல் நாட்டுக் கம்பெனி ஒன்று (We look to India to keep our works going) "எங்கள் ஆலைகளில் நிரந்தரமாக வேலை நடப்பதற்கு நாங்கள் இந்தியாவையே எதிர் பார்க்கிறோம்" என்று கடிதம் எழுதியிருந்தது. இரும்புச் சாமான்கள் இங்கே அதிகமாக விற்பனையானல் கம்பெனிக்கு அதிக லாபம். மேல் நாட்டுத் தொழிலாளருக்கும் அதிகச் சம்பளம். 15-20வருஷங்களுக்கு முன் வட இந்திய மாகாணத்தில் கூடிய அகில இந்திய கோவாபரேடிவ் கிரெடிட் ஸொஸைடியில் "கிருஷி முதலான தொழில் செய்யும் இந்தியர் தலைக்கு ஒரு ரூபாய் அதிகம் செலவழிக்கக் கூடிய உபாயம் செய்தாலோ, ஆகா! உலகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்குமா!" என்று ஒரு நிபுணர் பேசினர்.

தற்காலம் ஒரு விவசாயிக்கு எவ்வளவு நிலம் இருக்கிறதோ அதற்கு மேல் கடனிருக்கிறது. கிராமாந்திர கிரெடிட் ஏற்படுவதற்கு முன் சாதாரண சொத்து உள்ளவர் கடன் வாங்குவது மிகவும் சிரமம். அது ஏற்பட்ட பிறகு சொத்தே இல்லாதவர்கூடக் கடன் வாங்குகிறார். இவ்விதம் கடனைச் சுமத்திக்கொண்டு கண்ட பலன் என்ன? தண்டவாளம், தகரம், ஸிமெண்ட் வீடுகள் கட்டுவதும், பட்டு சரிகைத் துணி உடுப்புகள், ஜோடு, ஸோப்பு, பவுடர், ஸெண்ட், ஸேப்டிரேஸர், உபயோகிப்பதும், காபி, டீ, கொக்கோ, ஓவல்டின், சாராயம், டானிக் முதலிய பானங்கள், பிஸ்கோத் பெப்பர்மிண்ட் சாக்கலேட் முதலிய தின்பண்டங்கள், சிசுக்களுக்கென்று அயல் நாடுகளில் தயாரித்த பால் வகைகள், இவை சாப்பிடுவதும், கிராம போன் ரேடியோ கேட்பதும், சினிமா டாக்கி பார்ப்பதும், போடோ, ஸ்திரீகளின் படம், கை கடியாரம், பவுண்டன் பேனு, விளையாட்டுச் சாமான்கள் வைத்துக் கொள்வதும், லாட்டரி பந்தயங்களில் ஈடுபடுவதும், மோடார் பஸ் சவாரியும், மின்சார வசதி முதலியவைகள், அவசியமே இல்லாதவைகளில் செலவு செய்வதாகும். இப்படிச் செலவாகிற தெல்லாம் அனவசியம் என்பது மாத்திரமல்ல. அந்தப் பொருள் அயல் நாடுகளுக்குப் பறக்கிறது.

கூரைவீடாயிருந்தால் வெயில்காலத்தில் குளிர்ச்சி. மண் தரை வழுக்காது. தேகத்

திற்கு ஆரோக்கியம். சாணியால் சுத்த மாகி ஈ மொய்க்காது. சுவர்களுக்கும் மண் சாணங்களால் மெழுகுவதைவிட "டிஸ்டெம்பர்" என்னும் வர்ணம் அனுவசியம்.

உடுப்புகளால் தையல் மெஷீன் அவசிய மாகிறது. மெஷீனை அயல் நாட்டார் விற்கும் வழி (Hire purchase)"வாடகைக் கிரயம்" என்பது. விலை ரூ 100 ஆயின் மாதம் ரூ 5 வீதம் இருபது மாதங்களில் கொடுக்கவேண்டு மென்றும் அது வரையில் மெஷீன் தையற்காரனிடம் இருந்தாலும் கம்பெனிக்கே சொந்தமென்றும் உடன்படிக்கை. ஒருவன் பதினைந்து மாதங்கள் கட்டிப் பிறகு எந்தக் காரணத்தால் தவறினும் மெஷீனைக் கம்பெனி எடுத்துக்கொண்டு போய்விடும்.

விதவிதமான துணிகள் லேஸ்கள் தோல்களிலும் உடை வகைகள் அத்தியாவசியமா? கதர்பிரசாரத்தால் உண்டான லாபம் இந்த உடைகளாலேயே போய்விட்டது. வேஷ்டியும் உத்தரீயமும் வியர்வை துடைக்கத் துண்டும் தினம்சுத்தப்படுத்தப் படுவதால் எவ்வளவு சுகாதாரமுள்ளவை. வயலில் உழைப்பவன் வேஷ்டியைத் தலைப் பாகையாகச் சுற்றிக்கொண்டு பகல் முழுவதும் வேலை செய்கிறான். தலைப்பாகை உஷ்ணத்தைத் தாங்குவதோடு வியர்வை உண்டானால் உறிஞ்சிவிடுகிறது. குளிர் காலத்தில் அடக்கமாகவும் இருக்கிறது. மேல் நாட்டாரைப் போல் தொப்பி அணிந்தால் இந்த சௌகரியங்கள் உண்டா? அழுக்கு மெழுகுபோல் ஏறும் தொப்பி அவசியமா? கொழுந்து மண்ணை விட ஸோப்பு வகைகள் அழுக்கு எடுக்கிறதா, நாற்றம் போக்குகிறதா? முக க்ஷவரமும் கிராப்பும் நமக்கு அவசியமா? புருஷர்களுக்கு முன் கிராப்பு ஏறுவதும் ஸ்திரீகளுக்கு ரவிக்கை கௌன்கள் கைகால்களுக்கு மேல் ஏறுவதுந்தான் முன்னேற்றமா! கிராமங்களில் கூட "ஸலூன்" வந்துவிட்டது. அதிலிருக்கும் ஸாமக்கிரியைகள் நிலைக்கண்ணாடி, மேஜை, க்ஷவர நாற்காலி, கிளிப்பு கத்தி, வாசனை திரவியங்கள், டர்கிஷ் துண்டுகள் எல்லாம் குறைந்தது 150 ரூ ஆகும். இரண்டு மூன்று ரூபாயில் ஆகக்கூடிய அடைப்பத்திற்கு இவ்வளவு செலவு ஆடம்பரங்கள்! பல் தேய்க்க ஊரெல்லாம் ஆரோக்கியமுள்ள ஆலும் வேலும் இருக்க, மெழுகும் 'ப்ரஷ்'ஷும் எதற்கோ!

நீராகாரம், கஞ்சி, கூழ் இவை புஷ்டியுள்ளவை. உழைப்பவர்களுக்கு வலுவுண்டு. காப்பி வகைகளால் செலவு அதிகம். வியாதியும் தேகத் தளர்ச்சியு முண்டாகின்றன. இங்கே குடிப்பதற்குப் பாலோ உணவிற்கு அவசியமான நெய்யோ கிடைப்பதரிது. வட இந்தியாவில் மாட்டு விலையும் குறைவு. பாலும் நெய்யும் அதிகம். தென்னிந்தியாவில் அல்லும் பகலும் காப்பி வேண்டியிருப்பதால் எல்லாம் கிராக்கி. காப்பிக் கடைகளும் விசித்திரமாகப் பெருகி யிருப்பதோடு எச்சில் மூலம் வியாதி பரவச் செய்யும் நிலையங்களாயிருக்கின்றன. அடுத்தடுத்து க்ஷவர ஸலூன், ஸலவைச் சாலை, காப்பிகிளப் இருப்பதால் ஒருவன் க்ஷவரம் செய்து கொண்டு, உடுப்பு மாற்றி, உண்டு, ஆபீஸ் போவதற்காக ஏற்பட்டனபோலும்! ஸ்நானம்தான் அவசியமில்லை.

நீராகாரத்தில் மனமில்லாதவர்கள் பச்சைப் பயறு கரையவிட்டுச் சாப்பிடலாம். காப்பிக்காகவே கிராக்கியான சீனி அவசியமாகிறது. இல்லாவிடின் விலை சரசமான வெல்லமே எல்லாவற்றிற்கும் உபயோகப்படுத்தலாம். இருபது முப்பது வருஷங்களுக்குமுன் நெல் குத்தியும் மாவு அரைத்தும் எவ்வளவோ பேர் ஜீவனம் செய்தார்கள். இப்பொழுது கிராமங்கள்தோறும் மெஷீன் ஏற்பட்டதினால் ஜீவனமில்லை. அரிசியிலிருந்து விடமினும் போய்விடுகிறது என்கிறார்கள். வட இந்தியாவில் மெஷினில் மாவு அரைத்தாலும் மெஷினுக்குள் பாறுங்கல் யந்திரமிருந்து அரைக்கும் "சக்கி ஆட்டாவே" ஆரோக்கியமுள்ளதென்றுவிரும்பப்படுகிறது. அவல், பொரி, கடலை, முறுக்கு, சீடை இவைகளெல்லாம் செலவில்லாத நல்ல தின்பண்டங்கள். இப்பொழுதோ பிஸ்கோத், சர்க்கரைப் பாகு, பால் வகைகள் முதலிய ஆரோக்கியமற்றவை! குழந்தைகளுக்குப் பலவித வியாதிகள்—லிவர் உபத்ரவம் அதிகம்.

முன்னர் பாடகர்கள் கச்சேரி செய்து சம்பாதித்தனர். இப்பொழுது சம்பாத்யத்தில் குறைவில்லை. கொடுப்பவரிலும் குறைவில்லை. ஆனால் எல்லாம் கிராமபோன், ரேடியோ மூலமாயிருப்பதால் இடக்கொள்ளை. ஸினிமா, டாக்கிகளிலும் அம்மாதிரியே இடக் கொள்ளை. அதுமாத்திரமல்ல. காம, குரோத, சூது, களவு உணர்ச்சிகளைக் கிளப்புவதும் சாஸ்திரங்களையும் பிராம்மண வகுப்பினரையும் இகழ்வதுமாயிருக்கிறது. தவறுகளை இகழ்வதால் திருந்தக்கூடுமென்றாலும் தவறல்லாதவைகளையும் வருப்பையுமே இகழ்வது ஒரு உல்லாஸ வழக்கமாயிருக்கிறது. வீடுகள், கடைகள், காப்பிக் கிளப்பு முதலான இடங்களில் காமவிகாரம் நிறைந்த படங்கள் அதிகமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

பன்றித் தோல் பணப்பையும், பசுங்கன்றுத் தோல் கைகடியார வாரும், பசுந்தோல் பெல்டும் சதாகாலமும் உபயோகிப்பதோடு தேவாலயங்களுள் சென்று ஹரஹரா வென்று கன்னத்திலும் போட்டுக்கொள்கிறார்கள். கோவிலானாலும் கால் சராயும், 'ஷர்ட்டும்' உபயோகிக்கிறார்கள். முஸ்லீம்களிடம் பன்றி என்ற பேச்சே கூடாது. அதுகூட இல்லை இவர்களுக்கு. இம்மாதிரி வடஇந்திய ஹிந்துக்கள் தோலை உபயோகிப்பதில்லை. எப்பொழுதும் ஜோடு தரிப்பவர்கள்கூட வீட்டில் உபயோகிப்பதில்லை. உத்யோகத்திற்கோ வியாபாரத்திற்கோ கால்ச்சராய் முதலியன உபயோகித்தாலும் மற்ற சமயங்களில் வேஷ்டியே தரிக்கிறார்கள். தென்னிந்தியர்களுக்கு இந்த வியவஸ்தைகள் கிடையா. பொதுவாக எல்லாருக்குமே பாதரக்ஷை மாத்திரந்தான் அவசியமானது. நிமிஷக் கணக்காகச் சம்பாதிக்கும் வியாபாரிகளுக்குப் பலவிடங்கள் போகவேண்டி யிருக்குமாகையால் கைகடியாரம் அவசிய மிருக்கலாம். மற்றவருக்கு அவசியமேயில்லை.

நமது நாட்டிலேயே பலவித விளையாட்டுச் சாமான்களிருக்க அயல்நாட்டுச்சாமான்களில் மோகம் அதிகம். "சோத்துக்கு லாட்டரி" என்று சொல்வதுண்டு. அம்மாதிரி கடன் வாங்கியோ திருடியோ லாட்டரி போட்டிப் பந்தயங்களிலும் சிட்டுக் கட்டுக்கும் செலவு செய்கிறார்கள்.

புளி மாதிரி அடைபட்டாவது "பஸ்" பிரயாணம் செய்வது வழக்கமாகிவிட்டது. மோட்டாரும் அதற்கு எண்ணெய்களும் அநாவசியச் செலவு. முதலாளிகளுக்கு லாபம். அதிக பாரம் ஏற்றாதிருக்க பாராக் கொடுக்கிறவனுக்கும் சிறிது லாபம். மோட்டார்களால் உயிர்ச்சேதம் வேறு. மோட்டார் வருவதற்கு முன் வண்டி மாடு, குதிரை வைத்துப் பிழைத்தவர் அநேகர். இப்பொழுதோ நாட்டு வண்டிகள் அதிகமில்லை. இருப்பவைகளிலும் இரும்பும் ரப்பர் சக்கரமும் உபயோகித்துப் பிறர் பிழைப்பைக் கெடுத்ததாகிறது. மோட்டாரில் அவசர அவசரமாகப் போய் நாம் சம்பாதிப்பதென்ன?

மண் எண்ணெய் தீபங்களே இந்தியா முழுவதும் உபயோகப்படுகின்றன. வசதி உள்ள இடங்களில் மின்சார விளக்குகள் இருக்கின்றன. சாதாரண விளக்கெண்ணெய் விளக்கே கண்ணுக்கும் நன்மை தரும். செலவும் குறைவு. மற்றவை மலிவு என்று எண்ணெய்க் கணக்கு மாத்திரமோ எலக்டிக் கரண்ட் செலவு மாத்திரமோ பார்த்து லாப நஷ்டம் சொல்லக்கூடாது. ராந்தல், கண்ணாடி, பல்பு, திந்திக் கம்பிப் பிரதிஷ்டை, தீப்பிடிக்கும் அபாயம், மின்சார விபத்துகள் முதலானவைகளையும் சேர்த்து லாபநஷ்டம் பார்க்கவேண்டும்.

இவ்வளவும் இந்தியாவிலேயே செய்யப்பட்டாலும் செய்வதற்கு வேண்டிய ஆலைகளும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டாலும் தேசத்திற்கு நன்மை யில்லை. ஏனெனில் எல்லாம் அநாவசியமானசெலவுகளே. பலருக்குப் பிழைப்புக்கெட்டு வெகு சிலர் கொழுக்கிறார்கள், ஜனங்களுக்கு அநாவசியமான செலவுகளால் துரப்பியாஸம் பழகுவது பெருங் கேடு. ஏழைகள் பணம் சிறுகச் சிறுக முதலாளிகளிடம் இந்தத் துரப்பியாஸங்களால் சேருகிறது. யுத்தத்திற்கு முன் மிகவும் சிறு தேசமான இங்கிலாந்தில் பத்துப் பேர்களில் ஒருவர் வேலையில்லா திருந்தனர். அங்கே எவ்வளவோ ஆலைகள், யந்திரங்கள்

இருந்தும், வருமானமில்லாத கப்பல் யுத்த தளவாட வேலைகள் செய்தும், உலக முழுவதும் வியாபாரமும் செல்வாக்கும் சலுகைகளு மிருந்தும், வேலையில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன? (Labour saving appliances) வேலையாட்களைக் குறைக்கக்கூடிய யந்திர ஸாதனங்களே!

இந்தியாவிலும் இதைக் காபியடித்து யந்திர ஸாதனங்கள் ஏற்படுத்தி வருவது வருந்தத்தக்கது. ஒரு கிராமத்தில் ஒரு "ரைஸ்மில்" இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அது நான்கு கிராமங்களில் விளையும் நெல்லை அரைக்கக்கூடும். அப்படி அரைப்பதானால் அந்த நான்கு கிராமங்களில் நெல் குத்தும் ஜீவனமிருக்காது. அதோடு அவர்களே சோம்பலால் தங்கள் நெல்லையும் மெஷீனில் அரைக்கப் போவார்கள். இவ்விதம் பல கூலிகளுக்குச் சேரவேண்டிய கூலியை ஒருவரே அடைவதும் அந்தக் கூலிக்காரனிடமிருந்தும் கூலி பறிப்பதும் அந்த ஒருவருக்கு நன்மையே. தான் மெஷீனுக்கு செலவு செய்ததைப்போல் பல மடங்கு அதிகம் அவர் சம்பாதித்துவிடுகிறார் என்றால் அது எங்கிருந்து வந்தது? அந்த நான்கு கிராமத்தார் கொடுத்ததுதான். அதிலிருந்து ஒரு சிறு பாகம் மெஷீன் வேலை செய்யும் இரண்டொரு கூலிகளுக்குச் சம்பளமும் ஒவ்வொரு சமயம் மெஷீனில் அகப்பட்டு மாண்டவர்கள் ஊனமடைந்தவர்களுக்குப் பண ஈடும் கிடைக்கிறது. இதனால் உள்ள லாப நஷ்டம் கவனிக்கத்தக்கது.

ஒரு முதலாளியைப் பார்த்து இன்னொருவர் மில் வைக்கிறார். போட்டி உண்டானால் லாபம் குறைகிறது. மெஷீனுக்குப் போட்ட பணம் கிடைப்பதில்லை. வட்டிக்கு மாத்திரம் கட்டி வருகிறது. பிறகு மெஷீன் பேரிலேயே Detenture என்னும் கடன்வாங்க நிர்ப்பந்தமுண்டாகிறது. அப்படிக் கடன்வாங்கி எல்லா வட்டிகளும்போக பாக்கி லாபமாகிறது. எல்லாத் தேசங்களிலும் ஆலை யந்திரங்கள் வைத்திருக்கும் எல்லா கம்பெனிகளும் இவ்விதமே நடக்கின்றன. போட்டி மெஷீன் வைக்காதபடி சூழ்ச்சிகள் செய்ய வேண்டி யிருக்கிறது. இதர கிராமத்தார்களை வசப்படுத்த வேண்டியிருக்கிறது. மீறிப் போட்டி மெஷீன் வைக்கப்பட்டால் முதலாளிகளுக்குள் சண்டை. அதனால் விநாசம். இந்தச் சண்டை விநாசங்களிலும் முதலாளிகள் ஒதுங்கி நின்றுகொண்டு இதர ஜனங்களைப் பல முறைகளில் வசப்படுத்திப் பலியிடுகிறார்கள்.

எங்கும் பொருளுக்கு உண்மையான ஆதாரம் சாதாரண ஜனங்கள். அவர்கள் சிக்கனமாயிருந்தால் உலகத்தில் பொருள் நாசமடையாதிருக்கும். ஔதாரிகளாயிருந்தால் முதலாளிகளிடம் சேர்ந்து வேட்டும் குண்டுமாகப் புகைந்து போவதோடு சிக்கனமில்லாத குற்றமே அந்த ஜனங்களையும் அழித்துவிடுகிறது.

முந்நூறு வருஷங்களுக்கு முன்னர் இந்தியாவின் நிலைமை எப்படி இருந்தது? பொன் விளைந்தது பூமியில்! சிக்கனமிருந்தது ஜனங்களிடம்! மோகரும் ரத்னமும் நிறைந்திருந்தன அரசர்களிடம்! இவைகள் அயல் நாட்டார் மனத்தைக் கவர்ந்தன. சிக்கனத்திற்கு யந்திர சாதனங்களே இருக்கக் கூடாது.

யந்திர சாதனங்கள் இல்லையானால் வாழ்க்கை வசதிகள் எவ்விதம் ஏற்படும் என்று கேட்கலாம். இந்த வசதிகளை முக்யமாக அனுபவிக்கிறவர்கள் முதலாளிகள். மாண பண்டு இருக்கிறது. நெற்றி வியர்வை சொட்டச் சொட்ட ஜனங்கள், உழைத்துக் கிடைத்த பணத்தை அதில் போடுகிறார்கள். அதை நிர்வாகம் செய்யும் அதிகாரி மோட்டாரும், சீதோஷ்ண சமகாரி(Air conditioned room) அமைத்த அறையும் அனுபவிக்கிறான். மாண பண்டுக்குக் கட்டும் ஜனங்கள் அதற்கேற்பட்ட சட்ட முறை தவறினால் கட்டிய பணமெல்லாம் பறிமுதலாகிறது. ஏதோ சிலவேலைக்காரர்கள் ஆபீஸில் பிழைக்கிறார்கள் என்றால் அதுவும் ஜனங்கள் பணம். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசிகிறது.

'ஒன்றென்றிரு தெய்வ முண்டென்றிரு
உயர்செல்வ மெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லற
மும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமேயுனக்கு உபதேசமிதே."

என்றார் பட்டினத்தடிகள். எல்லாரிடமும் ஆத்மா ஒன்று என்ற ஜீவகாருண்யம் வேண்டும். தெய்வ பக்தி வேண்டும். இந்திரிய வியாபாரங்களில் ஈடுபடுவதால் ஒருவித சுகமுமில்லை என்று அறியவேண்டும். ஐயமிட வேண்டும். நல்லொழுக்கம் வேண்டும். எல்லாரிடமும் நட்பு வேண்டும். சாஸ்திரத்திலும் பெரியோர் சொல்லிலும் நம்பிக்கை வேண்டும். இப்படி இருந்தால் ஜனங்களுக்கு நன்மையுண்டு.

கடன்கூடாது. ஏவல் தொழில் செய்யக்கூடாது. ஒரே வேளையானாலும் தன் பரிசிரமத்தால் கிடைக்கும் கீரையானாலும் அதை உண்டு திருப்தி அடையவேண்டும். வீண்பொழுது போக்காமல் சாஸ்திர ஆராய்ச்சி செய்யவேண்டும்.

இதுவே சிக்கனம். இதுவே பொருளாதாரம்.



சமதரிசனம்

[ஸ்ரீஸ்வாமி துரியாநந்தர், சேந்தமங்கலம்]

சமதரிசனம் என்பது சாமான்யமாய்ச் சொல்லுமிடத்துச் சமமான பார்வை என்று பொருள்படும். பார்வை என்பதில் அநேக வகையுண்டு. ஒரு புத்தகத்தைப் பார்ப்பவன் அறிஞனானால் உண்மையில் அப் புத்தகம் கூறுவது யாதென ஆராய்கிறான். அஞ்ஞானியானால் புத்தகம் கூறும் விஷயங்களின் பொருளைக் கவனியாமலே விபரீத பாவனையில் பார்க்கிறான். ஓர் ஆட்டைப் பார்ப்பவன் அஞ்ஞானியானால் இவ்வாடு தேக போஷணைக்கு இனியதெனக் கவனிக்கிறான். ஞானியானால் அவ்வாட்டினிடம் பரிதாபம் கொள்வதுமல்லாமல் அதில் ஆத்மஸ்வரூபத்தையும் பார்க்கிறான்.

ஆத்ம ஸ்வரூபமாக வஸ்துவைப் பார்ப்பதுதான் உண்மைப் பார்வையாகும். இதற்கு வேறானவை யெல்லாம் மோகப் பார்வையாகும். உண்மைப் பார்வையைப் பிம்பப் பார்வையாகவும் மோகப் பார்வையைப் பிரதிபிம்பப் பார்வையாகவும் கூறலாம். ஆகவே பேதமற்ற நிலையில் ஏற்படும் பார்வை உண்மைப் பார்வையென்றும் நாம ரூபத்தோடு பார்ப்பது மோகப் பார்வை என்றும் நாம் அறியலானோம்.

உண்மைப் பார்வையில் இரண்டு வகையுண்டு. அவை முக்யதரிசனம்—கௌண தரிசனம் எனப்படும். முக்யதரிசனம் மனத்துக்கும் பார்வைக்கும் எட்டாததாகும். முக்யபக்ஷ சமதரிசனத்தில் சமம் என்பது ஏகம் என்றும் தரிசனம் என்பது சாக்ஷாத்காரம் என்றும் பொருள்படும். அதாவது ஏகமான பிர்ஹ்மஸ்வரூபத்தை ஸ்வாநுபவத்திலே சாக்ஷாத்கரிப்பது. இதைத்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையில்—

"வித்தியா விநய ஸம்பந்நே"—என்று தொடங்கும் ஸ்லோகத்தில் விளக்கி யிருக்கிறார்.

உலகம் த்ரிகுணாத்மகம். இவை முறையே ஸத்வ, ரஜஸ், தமஸ் என்கிற உத்தமாம்சம், மத்யமாம்சம், அதமாம்சம் எனப்படும். உத்தமாம்சமான ஸத்வகுண ப்ரதான வித்யா விநயஸம்பந்ந பிராமணனிடத்திலும் மத்யமாம்சமான ரஜோகுண ப்ரதான பசு (Cow) வினிடத்திலும் அதமாம்சமான தமோகுண ப்ரதான—யானை, நாய், சண்டாளன் முதலானவர்களிடத்திலும் த்ரிகுணாத்மகமான பார்வையிலே வித்யாச மிருந்தாலும் இவைகளின் சரீரத்திலே அநுப்பிரவேசம் செய்திருக்கும் த்ரிகுணாதீதமும் ஏகமும் நாம ரூப மற்றதும் அகண்டமுமான பிர்ஹ்மத்தை ஞானிகள் தங்கள் ஸ்வாநுபூதியில் ஸாக்ஷாத்காரம் செய்கிறார்கள்.

சிவப்பு, வெள்ளை, கறுப்பு, நீலம், பச்சை முதலிய நிறமுடைய பல்பில் (Bulb) எலக்டிரிக் கர்ரெண்டு (Electric current) பல்புகளின் நிறத்தை அநுசரித்தாலும் ஸ்வயமான ஸ்வப்ரகாசம் தவிர வேறு நிறம் அந்த (current) கர்ரெண்டுக்குண்டாவதில்லை. ஆத்ம சக்தியானது கர்ரெண்டு (current) மாதிரி சுத்தமானதேயானாலும் அந்தக்கரணங்களிலுள்ள குணத்ரயங்களை அநுசரித்ததுபோல் காணப்படுகிறது. பல்புகள் பலவிதமாயிருப்பதுபோல் ஸ்தூல சரீரமும் ஸூக்ஷ்ம சரீரமும் மாறி இருக்கின்றன. பல்பினுள் கர்ரெண்டு (current) ஏகமாயிருப்பதுபோல் ஆத்மா தேகத்தில் ஏகமாய் இலகுகிறது. அதனாலேதான் வர்ணாச்ரம தர்மமும் குணத்துக்குத் தக்கபடி தேவதா ஆராதன மயக்கமும் வித்யாசப்படுகின்றன. இவைகளில் இப்படிப்பட்ட வித்யாசம் காணப்படினும் மோக்ஷம் எல்லோருக்கும் ஒன்றுதான். ஆனால் மோக்ஷமடையும் வழிகளில் வித்யாசமுண்டு. பல்புகளெல்லாம் எப்படி ஒன்றாகாவோ அப்படியே சரீர பாவனையில் பார்க்கிறபோது எல்லாம் ஒன்றாகா. ஏனென்றால்—அநுலோம, பிரதிலோம ஜாதிவிபாகப் பிரகாரம் ஜன்மஸ்தானபேதமுண்டல்லவா? மூத்ரமும் கங்காஜலமும்

பார்வையில் பேதமில்லாம லிருந்தாலும் மூத்ரத்துக்கு ச்ரேஷ்டம் கிடையாது. இதுபோல், சூரிய ரஸ்மியானது மூத்ரம், சாக்கடை, கங்காஜலம் முதலியவைகளிலே படிந்தாலும் அதனல் சூரியன் எந்த வித மான மாசுமடைவதில்லை. அதுபோல் ஆத்ம ஸ்வரூபம் பஞ்சமன் முதலான சரீரங்களில் அநுப்பிரவேசம் செய்திருந்தாலும் அதுவும் மாசடைவதில்லை.

மூத்ரம், சாக்கடை, கங்காஜலம் என்பவற்றில் சூரிய ரஸ்மி படிந்தாலும் கங்கா ஜலத்தைப்போல் மூத்திரத்தையேனும் சாக்கடை ஜலத்தையேனும் நாம் பரிசுத்தமாகக் கொள்வதில்லை. இதுபோல்—ஆத்மா சகல ஜீவராசிகளிடத்திலும் விளங்கினலும் எல்லா ஜீவராசிகளையும் ஒன்ருகக் கொள்வதற் காகாது. ஜன்ம பேதங்கொண்டு வேருகப் பாவித்தல் சகஜம். இதனுலேதான் — ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில்-பண்டிதா சம தரிசன:—என்ருர்—இல்லேயேல் பண்டிதா சமாவர்த்தின:—என்று சொல்லி யிருப்பார். (சமாவர்த்தின—ஒன்ருகப் பாவித்து நடத்தல்.)

இக் காலத்துச் சிலர் "எல்லாம் ஒன்று எனக் கருதி எல்லோரையும் எல்லா விவகாரத்திலும் ஒரே விதமாக நடத்துவது தான் சம தரிசனம்"—என்று கூறுகிருர்கள். அது தவறு. அது சம தரிசனமாகாது. அது சமாவர்த்தனம். இது கருத்தான் — சங்கரர் — பாவனுத்வைதம் ஸதா குர்யாத், க்ரியாத்வைதம் நகரிஷிசித் என்று (அத்வைதம் பாவனையில் ஏற்படவேண்டுமே தவிர விவகாரத்தில் வருவது கூடாது) என்ருர். இதுதான் முக்ய தரிசனம். இதுதான் கீதையில் கூறியுள்ள சமதரிசனம்.

இந்தச் சமதரிசனமானது சித்த சுத்தி யடைந்தவர்கட்கும் சாதன சதுஷ்டய ஸம்பந்நரான உத்தம அதிகாரிக்குந்தான் முடியும். சாமான்யர்களுக்கு முடியாது. இந்த முக்ய தரிசன அநுபவம் வருகிற வரையில் கௌண தரிசனத்தையே யாவரும் அநுஷ்டிக்கவேண்டும்.

கௌண தரிசனம் என்ருல் என்ன?

எல்லாம் ஆத்ம ஸ்வரூபமென்று கருதிப் பிறருக்குச் சுகம் வந்தபோது அது தனக்கு வந்ததாகக் கருதுவதும், பிறருக்குத் துக்கம் வந்தபோது அந்த துக்க நிவர்த்திக்காகக் கஷ்ட மெடுத்துக்கொள்வதும் கௌண தரிசனமாகும். அவ்வாறு பிறருடைய துக்க நிவிர்த்தியின் பொருட்டுக் கஷ்ட மெடுத்துக் கொள்ளும்போது அதிகாரி, காலம் முதலியவைகளைக் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

அதிகாரி.

ஒரு நியாயவாதி சட்ட ஞானம் பெருதவனிடம் சட்ட ஞானத்தைப்பற்றிப் பேசும் நூலை ஆராயும்படி கொடுப்பதில்லை. சாஸ்திர ஞானத்தை அல்லது வேதாந்த ஞானத்தை எவனெருவன் வகிக்க அருகனே அவனுக்கே பெரியோர்கள் அதனைப் போதிக்கிருர்கள். அதுபோல் எந்த அதிகாரி எதனை வகிக்கத் தகுதி யுடையவனே அதனை யுணர்ந்து செய்தல்வேண்டும்.

காலம்.

கோடைக் காலத்தில் ஏற்படும் வெப்பம் நீங்க விசிறிக்கொள்கிருேம். அதுபோல் ஸந்நிபாத ஜுரமுடைய ஒருவனுக்கு அக் காலத்தில் விசிறுவது சரியாகுமா? ஆகாது. ஏன்? அது அவனுக்கு அச் சமயத்துக்கு ஏற்றதல்ல. அச் சமயத்துக்கு எது செய்தால் தகுமோ அதனைச் செய்வதுதான் ஞானியின் லக்ஷணம். போஜனம் செய்துவிட்டுச் சுகமா யிருக்கிற சமயம் ஓர் அதிதி வந்தால் அவ்வதிதிக்குத் தன்னைப் போலவே வயிறு நிரம்பி யிருக்குமென்று கருதாமல் உணவிட்டு உபசரிப்பதுதான் கௌண தரிசனம். நமக்கு ஓர் ஆரஞ்சுப் பழந் தின்ருல் பசி நீங்கும்படியான சமயமுண்டு. அச் சமயத்தில் நம் முன் பசியுடைய பசு ஒன்று வந்து நின்ருல் அப் பசுவையும் நம்மைப்போல் எண்ணி ஓர் ஆரஞ்சுப் பழம் கொடுத்தால் சமதரிசனமாகுமா? ஆகாது. அதற்குப் பசி தணியத் தக்க தீனி போடுவதே சமதரிசனமாகும்.

பாவனையைப்போல் நடத்தையிலும் ஒத்திருக்கவேண்டு மென்று சிலர் கூறு கிறார்கள். அது தவறு. எல்லோரிடமும் ஆத்ம பாவனை கொள்வது நியாயமே யானாலும் அவரவர் தகுதிக்குத் தக்கபடி செய்யவேண்டியவைகளைச் செய்யவேண் டுமே யொழிய ஒருவர்க்கு எது செய்வது உசிதமோ அதனை இன்னொருவருக்குச் செய்வது உசிதமாகாது. அப்படிச் செய் வதை உசித மென்பது—ஒருவன் தன் மனைவி மக்கள், தாய், மருமகள் இவர்க ளிடம் தன் மனைவியிடம் கொள்ளும் பாந்தவ்ய பாவனை கொள்வது தகுமென்று கூறுவது போலாகும். ஓர் அரசன் எல் லோரையும் தன் குடிகள் என்று பாவனை செய்யலாம். ஆனால் தன்னிடம் வந்த வித்வானை ஸங்மானிக்காம லிருப்பதும் திருடனைத் தண்டிக்காம லிருப்பதும் சம தரிசனமாகுமா? ஆகாதன்றோ? இந்தச் சமதரிசனத்தை அப்யாசத்தில் அடைப வனுக்குக் காலக்ரமத்தில் முக்ய தரிசனம் கைகூடும்.

சாமான்ய தர்மத்தோடு கூடாத விசேஷ தர்மம் மோக்ஷத்தை அளிக்காது. இரா வணன் ஸ்ரௌதஸ்மார்த்தாதிகளான விசேஷ தர்மங்களைச் செய்தான். ஆனால் ஜீவகாருண்யம்—பச்சாத் தாபம் முதலிய சாமான்ய தர்மங்களை மறந்திருந்தான். அக் காரணத்தினால் மனுஷ்யத்வ மில்லா மல் இராக்ஷஸனாகி ஈச்வர கோபத்திற்கு ஆளானான். ஸாமான்ய தர்மம், விசேஷ தர்மம் என்று இரண்டுவித தர்ம மிருந் தாலும்—"ஆசார்யவான் புருஷோ வேதா—" என்கிற சுருதியின்படி ஆசாரி யன் இல்லாத புருஷன் பரபிர்ஹ்மத்தை அடையமாட்டான். (தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது) பாறையி லிருந்து உடைத்து எடுக்கப்படும் கல்லைத் தச்சன் விக்ரஹமாக்கினால் அக் கல்லைச் சிற்பி எவ்வளவோ விதத்தில் உளியினால் அடித்து அடித்துத் திரட்டு கிறான். அது விக்ரஹமாகிற வரையில் சிற்பியினால் ஏற்படும் ஹிம்சைகளைப் பொறுத்துக்கொள்கிறது. அப்பால் விக் ரஹமாகத் திரண்டவுடன் அது அந்தக் கல் தச்சனும் வணங்கும்படியான உயர்வை அடைகிறது. இதுபோல் ஒரு மாணவன் பல கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு குருகுல வாசஞ்செய்து பக்குவ மடைந்த பின்புதான் பரபிர்ஹமத்தை அடையத் தகுதி யுடைய புருஷனாகிறான்.

பவர் (Power House) ஹௌஸி லிருந்து எலக்டிரிக்கர்ரெண்டு வெளிப்பட்டு மெயின்லைன் (Main Line) பிராஞ்சு லைன் (Branch Line) இரண்டிலும் பரவுகிறது. ஆனால் அது பல்பில் (Bulb) தானே பிரகாசிப்பதில்லை. ஸ்விச்சை (Switch) ஒருவன் தட்டினால்தான் பிரகாசிக்கிறது. இதுபோல் சகல ஜீவராசிக ளிடத்திலும் விளங்கும் ஆத்ம சக்தியானது ஸுஷும்னை முதலாகச் சகல நாடிகளிலும் பரவு கிறது. ஆயினும் அந்த ஆத்ம சக்தி பிரஹ்ம ரந்தரத்தில் குரு வின் உபதேசமும் அஸ்தமஸ்தக சை யோகமாகிற தீக்ஷை யென்கிற ஸ்விச்சி னாலேதான் பிரகாசிக்கும்.

இக் காலத்தில் சிலர் மனம் சுத்த மடைந்தபோது கர்மத்தை ஏன் அநுஷ் டிக்கவேண்டு மென்று வினவுகின்றனர். அதனைக் கவனிப்போம். மனம் சுத்த மடைந்தது என்பது எப்படி? மனம் சுத்த மடைந்தது என்பதைத் தெரிந்துகொள்ள (1) ஹேது, (2) காரியம், (3) பலம், (4) அவதி என்கிற நான்குவித வழிக ளுண்டு.

ஹேது:—என்பது கர்மங்களை விதிப் படி செய்து அதன் பலனை ஈச்வரார்ப் பணம் செய்வதனை லறியத் தக்கது.

காரியம்:—சுருதி ஸ்மிருதிகளுக்கு விருத்த மில்லாதபடி காரியம் நடத்துவது.

பலம்:—ஞான பூர்வமாகக் கைவல்ய முத்தி யடைதல்.

அவதி:—பிர்ஹ்ம லோக பரியந்தம் சகல விஷயங்களிலும்—வாந்தி பண்ணிய உண வைப்போல் வெறுப்படைதல்.

சித்த சுத்தியின் லக்ஷணம் இவ்வாறி ருக்கிறது. இதனை யடைந்தவனுக்குக் 'கர்மம்' வேண்டாம். ஸந்யாஸம் தானே சித்தித்ததாகும். இது சித்தியாகாத வரை யில் கர்மத்தைச் செய்தே தீரவேண்டும்.

"மனது சத்வ ஸ்வரூப மற்றிரண்டும் வந்து கலந்தன, அவற்றை மாற்றினுற் போம்"

என்று கைவல்யம் கூறுகிறது. இத னுண்மை உணராது பலர் மனது ஸத்வஸ்வ ரூபம்—கர்மம் எதற்கு? என்று வாதாடு கிருர்கள். மனது ஸத்வ ஸ்ரூபந்தான்.

முதலில் போட்டோ (Photo) விற்குரிய ப்ளேட் சுத்தமான வெண்மை நிறமுடைய தாகவே இருக்கிறது. அப்பால் அது போட்டோ காம்ராவில் (Photo Camera) வைக்கப்படும்போது கறுப்பு நிறத்தை யடைகிறது. அப்பால் அதனை ஒரு ஸொலூஷன் (Solution) போட்டு இருட் டறையில் வைக்கப்படுகிற காலத்தில் அது போட்டோ ரூபமாக விருத்தியாகிறது. அப்பால் அதனை Fix ஆக்குவதற்காக ஒரு Solution போடப்படுகிறது. அப்போது அதில் நெகடீவ் (Negative) ஏற்படுகிறது. அதன் பிறகு அதிலிருந்து எத்தனையோ பிரதிகள் எடுக்கப்படுகின்றன.

இதுபோல் ஈச்வரனுல் சகல ஜீவராசி களுக்கும் கொடுக்கப்படும் அந்தக் கர ணம் என்கிற கண்ணுடி ஆதியில் சுத்த மாகவே இருக்கிறது. பிறகு அந்த அந் தக்கரணம் துர்ஜன சகவாசமாகிற காம்ரா வின் சம்பந்தத்தினுல் ரஜஸ், தமஸ் என் கிற கறுப்பை (அழுக்கை) அடைகிறது. அப்பால் நிஷ்காம கர்மா என்கிற ஸொலூ ஷனில் கொஞ்ச காலம் வைத்திருந்தால் ஆத்மாவின் சுத்தத் தன்மை விருத்தி (Develop) ஆகிறது. அப்பால் பேரின் பம் என்கிற ஸொலூஷனில் போட்டால் தான் Fix ஆகிறது; திடமாகிறது. அத் தகைய திடமடைந்தவரே ஞானியாவர். அந்த ஞானியாரிடமிருந்து அநேகம் பேர் நன்மை யடையலாம்.

முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்
மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

சாயம் வெளுத்தது

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L. அண்ணாமலை நகர்]

நான் சமீபத்தில் ஒரு கதை வாசித்தேன். அதைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். ஸீதாவுக்கு ஐந்து வயதிருக்கும். பாக்கியம் ஒன்பது, பத்து வயதுப் பெண் விளையாடும் கோஷ்டியில் எல்லோருக்கும் அவளே மூத்தவளாதலால் தலைமைவகித்து அவளே மரப்பாச்சிக் கல்யாணத்தை நடத்திவந்தாள். ஐந்தாறு வயதுக் குட்பட்ட பையன்கள் இரண்டு, மூன்றுபேர்கள் மேளம் வாசித்தார்கள். ஒருவன் கன்னங்கள் உப்பும்படி பாதி மூடிய கண்களுடன் கம்பத்தில் சாய்ந்துகொண்டு ஒத்து ஊதினான். மற்றொருவன் தலை உடம்பெல்லாம் ஆட்டிக்கொண்டு விரல்களசைய ரூல்கழியில் நாயனம் வாசித்தான். மூன்றாவது பயலாகிய தவல்காரன் ஒரு தகரடப்பாவை வைத்துக்கொண்டு சடபடவென்று அமர்க்களம் செய்துகொண் டிருந்தான்.

பாக்கியம் முதலில் வைதிக உபாத்யாயர். பரதேசம், மாலைமாற்றல், திருமங்கலியதாரணம், ஹோமம் ஒன்றையும் விடவில்லை. பின்பு நலங்குக்கும் உபாத்தியாயர்—சமீபத்தில் அவளுடைய ஒன்றுவிட்ட அக்காவுக்கு கல்யாணம் ஆயிற்று. அதனால் இவளுக்கு அப்பளாம் எடுத்துக் கொடுக்கவும் செண்டு எடுத்துக்கொடுக்கவும் பரிஹாஸங்கள் செய்யவும் பாடவும், பாடச்சொல்லவும் பத்யம்சொல்லிப் பாக்கு வெற்றிலை கொடுக்கச்செய்யவும் ஹாரத்தி எடுக்கவும் தெரிந்துவிட்டன.

நான் கதை வாசித்துக்கொண் டிருந்தவன், இக் குழந்தைகளின் விளையாட்டில் ஒரு கண் செலுத்தினேன். கோபு என்ற குறும்புப்பயல், "பாக்யம், இப்போது ஊர்கோலம் விடவேண்டும்" என்றான். மரப்பாச்சிகள் மோட்டாரிலேறின—அதாவது மருந்து பார்ஸல்வந்த ஒரு மூடியில்லாத கள்ளிப்பெட்டியில். சோமு மோட்டார் ஓட்டுபவன். சில குழந்தைகள் சந்தனம் வெற்றிலைபாக்கு முதலியன கொடுப்பவர்க ளானார்கள்.

கோபு "பாக்கியம், இந்தப்பெண் மரப்பாச்சிதான் சாரதாவாம். இந்தப் பிள்ளை மரப்பாச்சிதான் சீனிவாசனும்" (சாரதாவும் சீனிவாஸனும் மேற்சொன்ன சமீபத்தில் கல்யாணம் நடந்த தம்பதிகள்.) என்ன கவனிக்கிறாயா? அன்றைக்கு ஊர்கோலத்தில் நடந்ததே அதை மறக்கப்படாது. ஊம்" என்று கண் சிமிட்டி ஜாடை காட்டினான்.

பாக்கியம்,அதுவரை நான் இருந்ததைச் சற்றும் கவனிக்காதவள், சுருக்கென என் பக்கம் ஒரு பார்வை பார்த்துவிட்டு "சீ, அதெல்லாம் என்னடா. பெரியப்பா இருக்கிறார்." என்று சிறிது குனிந்து பூமியைப் பார்த்தவண்ணம் குசுகுசு வென்று ஏதோ சொல்லிவிட்டுத் தலை நிமிர்ந்து ஊர்வலத்தை நடத்தலானாள். கோபு போக்கிரிப்பயல்; விடுகிறவழியாயில்லை. "பாக்யம், 'பாக்யம், அத்திம்பேர் சொன்னதைச் சொல்லமாட்டாயே. இல்லாதபோனால் என்ன விளையாட்டு வேண்டியிருக்கு. நான் வரவில்லை போ" என்று அலுத்துக் கொண்டவன்போல திரும்பினான். பாக்கியம் நான் இவர்கள் பேசுவதை யெல்லாம் கேட்காததுபோல் கேட்டுக்கொண்டிருப்பதை நன்கறிந்தவளாய் இந்த வெட்கக் கேட்டிலிருந்து விடுவித்துகொள்ள என்ன சாக்கு அகப்படும் என்று யோசித்துக் கொண் டிருந்தவள் சரேலென்று எழுந்து, "ஆனால் நானும் போகிறேன் போ" என்று கூறிவிட்டு ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து உள்ளே போய்விட்டாள். சிறிதுநேரத்தில் குழந்தைகள் மூலைக்கு ஒன்றாக ஓடிவிட்டன.

ஸீதா விளையாட்டு பாதியில் நின்றுவிட்டதில் திருப்தியில்லாதவளாய், முணுமுணுத்துக்கொண்டு மரப்பாச்சிகளையும் மற்றும் உள்ள சாமான்களையும் எடுத்துப்

பத்திரப்படுத்தலானுள். நான் சற்றுப் பொறுத்து கோபுவை கூப்பிட்டேன். அந்தப் பயல் பம்பரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கயிறு சுற்றிக்கொண்டிருந்தான். இலகுவில் என் அழைப்புக்கு இணங்கவில்லை நல்ல வேளையாய் அவனுக்குக் கயிறு சுற்றசுற்ற நழுவிக்கொண்டே இருந்தது. "எலே இங்கேவா. நான் சுற்றித்தரேன்" என்றேன். பக்கத்தில் வந்து கயிறையும் பம்பரத்தையும் என் கையில் கொடுத்தான். அதை வாங்கிவைத்துக் கொண்டு, "எலே! சாரதாவின் ஊர்வலத்தில் அத்திம்பேர் என்னடா சொன்னுர்?" என்று கேட்டேன்.

பயல் ஒரேயடியாக சிரிக்கத் தொடங்கினுன். விழுந்து விழுந்து சிரிக்கிறுன். இவனையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் மற்ற பையன்களை ரகஸ்யப் பார்வை பார்க்கிறேன். மறுபடி சிரிக்கிறுன். உடனே பாதி சிரிப்பும் பாதி கோபமுமாக, "அதெல்லாம் சொல்லப் படாது. பம்பரத்துக்கு கயிறு சுற்றிக் கொடுக்கிறீர்களா? இல்லையா?"

"அதைச் சொல்லாமற்போனுல் சுற்றிக் கொடுக்கமாட்டேன். பம்பரத்தைத் திருப்பியும் கொடுக்கமாட்டேன்.

"ஐயோ"

"ஐயோவது அப்பாவாவது! அதெல்லாம் பலிக்காது."

"முதலிலே கயிற்றைச் சுற்றிக் கொடுங்கோ. அப்புறம் சொல்ரேன்."

"நீ போக்கிரிப்பயல் ஏய்த்துவிடுவாய்"

"இல்லை நிஜம்மா சொல்றேன்."

"சரி, இந்தா சுற்றியாயிற்று."

"வாங்கிக்கொண்டு இதை விட்டுவிட்டு வருகிறேன்."

"அதுதானே வேண்டாமென்றேன், சொல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்."

"சொல்லத்தான் வேண்டுமோ"

"ஆமாம்."

"அன்னிராத்திரி ஊர்கோலம் நடந்ததோ இல்லையோ? மோட்டாரிலே பாக்கியமு மேறிக்கொண்டாள். எல்லாக் குழந்தைகளும் ஏறிக்கொண்டன. பாதி வழியிலே எல்லாம் தூங்கிப்போச்சு. பாக்கியத்துக்கும் தூக்க கலக்கம்தான். ஆனுல் அவள் மட்டும் தூங்கவில்லை. அத்திம்பேர் அவளும் தூங்கிபோய் விட்டாள் என்று நினைத்துக்கொண்டு மெள்ள சாரதா கையைப் பிடித்து இழுத்துத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார். சாரதா புன்சிரிப்புடன் சற்று நிமிர்ந்து பார்த்தாள்—"

"இனிமேல்தான் வேடிக்கை" என்றுன் பக்கத்திலிருந்த ஒரு குறும்புப் பயல் மிதமிஞ்சிய உத்ஸாஹத்துடன்.

"அத்திம்பேர் சொல்ரார் சாரதாவிடம். நீ ஏன் இன்று நலங்கிடும்போது சரியாய் பாடவில்லை? "இந்த ஸௌக்யம்" பாடுவாய் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இனிமேல் அப்படி யிருக்கப்படாது தெரியுமா? என்று எச்சரித்தார். அதற்குள் 'பாலம் மோட்டாரில் இருக்கிறுளா' என்று தேடிக்கொண்டு அத்தை வந்து போட்ட சத்தத்தில் எல்லாம் கெட்டுப் போய்விட்டது. அந்தப் பயத்திலே அத்திம்பேர் சாரதா கையைக்கூட விட்டுவிட்டார்."

"செட்! இவ்வளவுதானு" என்றேன்.

இதைச் சொல்லிவிட்டு ஓடினுன் கோபு.

* * *

மிஸ்டர் ரகு "ஸ்கௌட்" ளப்பில் நிகழ்த்திய சொற்பொழிவிற்கு காலேஜ் மாணவி மிஸ். செல்லம் வந்திருந்தாள். பின்பு மிஸ்டர் ரகு ஆரம்பித்த தேச முன்னேற்ற யுவர் சங்கத்தில் மிஸ் செல்லம் மெம்பரானுள். சுடர் ஒளிபோன்ற மிஸ் செல்லம் அச் சங்கத்தில் பிரகாசித்ததால் அச் சங்கத்தின் வேலைகள் மிக விமரிசையாக நடந்தேறின. ரகு பிரஸிடெண்டாக விருக்கும் அச் சங்கத்திற்கு செல்லம் வைஸ்பிரஸிடெண்டாக வானுள். லோகோபகாரத்திற்காக அவர்கள் செய்த தியாகத்தினுல் சங்கத்தின் பெருமை பெருகித் தனரத்தனத்தாரும் அச் சங்கத்தை முக்கிய இயக்கமென அங்கீகரித்தனர்.

ரகுவுக்கும் செல்லத்திற்கும் டீ பார்ட்டிகள் முழங்கின. ரகு முனிஸிபல் எலக்ஷனுக்கு யுவ ஸங்கத்தின் சார்பாக நின்றான். செல்லம் நயந்து ஓட்டு வாங்கினள். எலக்ஷனில் வெற்றி. வெற்றிக் கொண்டாட்டம் நடந்தது. காரில் டீ பார்ட்டிக்கு ரகு தனியே செல்லத்துடன் போகும்போது "செல்லம், எனக்கு வரும் வெற்றிகளெல்லாம் உன்னாலேதான். நான் உன்னை என் செல்லம் என்று எப்போது சொல்லிக் கொள்வேன் ?" என்று வினவினன்.

"அடுத்த பார்ட்டி நம் 'மாரியேஜ் பார்ட்டி.' அதற்கென்ன தடை" என்றாள் செல்லம்.

'ஸபாஷ்' என்றான் ரகு.

விவாகத் தேதி குறிப்பிட்டு "இன்விடேஷன்"கள் அனுப்பப்பட்டன. மத்தியில் ரகுவின் வீட்டு 'டிராயிங்' ரூமில் செல்லம் அவனைச் சந்திக்கிறாள்.

செல்லம் :—'நீங்கள் தரப்போகும் இன்பத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் ?'

"அப்படிச் சொல்லாதே செல்லம். 'மிஸ்ஸஸ் செல்லம் ரகு' என்று என்னைச் சேர்த்துக்கொள்வதே சிறந்தகைம்மாறும்."

செல்லம்—"ஆமாம். இப்போது தெரிந்துகொண்டேன். இதில் எவ்வளவோ அடங்கியிருக்கிறது. பார்த்தீர்களா ! காதலனும் காதலியும் ஒரு ஆத்மாவின் இருதோற்ற மல்லவா. நான் உடல்; தாங்கள் உயிர் ; உங்கள் நலம் என் நலம் ; உங்களின்பம் எனதின்பம். தங்கள் மாசற்ற காதல் கிடைத்ததே இதுவே எனது ஸுகிர்தம். தங்களை மணக்காவிடில் இறப்பது மேல்."

ரகு—எனக்கும் அப்படியே நம்மிருவருக்கும் ஒரே உயிர். ஒரே மனம். ஒரே கொள்கை. ஒரே ஆத்மா."

"நாதா"

"என் ஆருயிர்க்கனியே"

"என்னுயிர் உடல் ஆவிபொருள் எல்லாம் தங்களுடையது"

"காதற் களஞ்சியமே, கல்விக் கற்பகமே, நான் வேறு நீ வேறு அல்லவே"

"நாம் நாளை சந்திப்போம்"

"அப்படியே, ஆறு மணிக்குச் சாயங்காலம்"

* * *

சங்கத்தார் மகிழ, மோதிரம் மாற்றிக் கல்யாணம் நடந்தது. நாற்காலிகளில் வீற்றிருந்த மஹா ஜனங்கள் கரகோஷம் செய்தனர். தாம்பூலம் வழங்கப்பட்டது. ராத்திரி "டின்னர்". உருவப் படம் (தம்பதிகளது) பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டது.

* * *

நான் படித்துக்கொண் டிருக்கும்போது கடுமுடுவென்று வசைமொழிகள் காதில் பட்டன ; எழுந்துபோய்ப் பார்த்தேன். வண்ணான் வந்திருந்தான். ஸீதாவின் சிவப்புப் பாவாடையை அவன்வெளுத்து-அதாவது வெள்ளை நிறமாக்கிக் கொண்டு வந்ததற்காக வீட்டு எஜமானி அவனைக் கடிந்துகொண் டிருந்தாள். பாவாடை சிவப்புக் கலர்—அழகான பூச்சித்திரங்கள் போட்டது, வேண்டுமென்று பொறுக்கி எடுக்கப்பட்டது. இப்போது பட்டை பட்டையாய் வெளுத்துப்போய் விட்டது. பூக்கொடிகள் மறைந்தன. சிகப்பு ரங்கு தொட்ட ஜாடையே இல்லை. பார்க்க கோரம், வெள்ளாவியில் வெந்து எல்லாம் வெட்ட வெளிச்ச மாகிவிட்டது. "ஆம் சாயம் வெளுத்து விட்டதே"ன்று சொல்லிக்கொண்டு நான் புஸ்தகமும் கையுமாய்த் திரும்பினேன்.

ஆநந்த உத்ஸவம்

[ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்]

மணி இரவு பதினேன் ,றடித்தது; பன்னிரண்டு மடித்தது. ராஜாராமன் புத்தகத்தின் ஏடுகளைச் சும்மா திருப்பிக் கொண் டிருந்தானே தவிர, அவன் புத்த கத்தின்மீது கவனம் செலுத்தி வாசித்துக் கொண் டிருப்பதாகத் தோன்றவில்லை. அவன் ஒரு சிக்கலான விஷயத்தில் சிக் கிக் கொண்டு திண்டாடிக்கொண் டிருப் பதைப்போல் தோன்றிற்று.

ப்ரஸிடென்ஸி காலேஜ் ஹாஸ்டலின் பெரிய கடியாரமும் மணி பன்னிரண்டான தின் அறிகுறியாக "டாண்" என்று மணி யடித்தது. ராஜாராமனும் தான் ஒரு முடிவிற்கு வந்தவனைப்போல் புத்தகத்தை மேஜைமீது வைத்துவிட்டு, ஒரு காகிதத் தில் என்னவோ எழுதிக் கவரில் போட்டு ஒட்டி மேஜைமீது வைத்துவிட்டுப் பெரு மூச்செறிந்தான். விளக்கை அணைத்த பிறகு படுக்கையில் படுத்துக்கொண்ட வன் வெகு நேரம் வரைக்கும் தூக்கம் வராமல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் தத் தளித்தவாறு இருந்தனன்.

*　　*　　*

ராஜாராமனின் தந்தை சித்தூரில் முனி சிப் கோர்ட் குமாஸ்தாவாக இருந்தார். அவருடைய சொற்ப சம்பாத்தியத்தில் குடும்பத்தை நடத்துவதும் பிள்ளையைப் படிக்க வைப்பதும் மிகவும் கஷ்டமாக விருந்தன. தனது சொற்ப சம்பாத்தி யத்தைத் தவிர ஐயருக்கு நெல்லளவு பூமியாவது வேறு பிதிரார்ஜித சொத்தா வது ஒன்றும் கிடையாது. பையனைப் படிக்கவைப்பதற்கே கொஞ்சம் கடனும் வாங்கியாய்விட்டது. பெண்ணின் கலி யாணத்தைக் கடன் வாங்கித்தான் நடத்த வேண்டும். அதுவும் கொஞ்சம் நல்ல வரன் என்று பார்க்கப்போனல் ரூபாய் இரண்டாயிரத்திற்குக் குறைச்சலாக ஒரு வரும் வரதக்ஷிணை வாங்குவதாகக் காணோம்.

ஐயரின் பெண் பஞ்சவர்ணக் கிளியைப் போன்ற அழகுடையவள். குணத்திலும் அப்படியே. குணத்திற் குத் தகுந்த படிப்பும், பாட்டும், கெட் டிக்காரத்தனமும் அவளிடம் குடிகொண் டிருந்தன. ஐயருக்கு அவள் ஒரே ஒரு பெண்ணும், ராஜாராமன் ஒரே ஒரு பிள் ளையும்தான் சந்ததிகள். தமது செல்வப் புதல்வியைத் தகுந்த வரனுக்குக்கொடுக்க வேண்டுமென்று ராமரத்தினம் ஐயர் மிக வும் பாடுபட்டார். ஆனல் ஐந்நூறு ரூபா கடன் வாங்குவதே மிகவும் சிரமமாக விருக்கும்பொழுது ரூபா இரண்டாயிர மும் மூவாயிரமும் அவரால் எப்படிக் கடன்வாங்க முடியும்?

பாவம்! அவருடைய ஆசை யெல்லாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்ட கதையாயிற்று. கடைசியாக ஐய ருக்கு ஓர் உபாயம் புலப்பட்டது. ஒரு பணக்கார இடத்தில் நிரம்ப வரதக்ஷிணை யுடன் ராஜாராமனுக்கு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து வைத்துவிட்டால் அந்தப் பணத்தைக் கொண்டு மாலினி யின் கலியாணத்தை விமரிசையாகச் செய்துவிடலா மென்று ஐயரும் அவரது மனைவியும் ஓர் முடிவிற்கு வந்தனர்.

ஏற்கனவே ராஜாராமனுக்குப் பல நல்ல இடங்களிலிருந்து பெண்கள் வந்திருந் தன. ஆயினும் ராமரத்தினம் அய்யர் மதுரையில் வக்கீலாக விருக்கும் ஸ்ரீனிவா சய்யர் புதல்வியை மூவாயிரம் ரூபா வர தக்ஷிணையுடன் ராஜாராமனுக்கு நிச்சயம் செய்துவிட்டு, முகூர்த்த நாளையும் நிர்ண யித்துவிட்டார்; இந்தத் தகவல் ராஜாராம னுக்கு எழுதித் தெரிவித்தார்; இந்தக் கடிதம்தான் அன்று மத்தியானம் அவ னுக்குக் கிடைத்தது.

வெள்ளிக்கிழமை முகூர்த்தம். ஆகையால் திங்கட்கிழமையே ராஜா ராமன் சித்தூர் வந்துவிடவேண்டுமென் றும், புதனன்று காலையே எல்லோரும் மதுரைக்குப் புறப்படவேண்டு மென்றும் அவனது தகப்பனர் எழுதியிருந்தார்.

ராஜு தன் படிப்பு முடிந்து ஒரு உத்தியோகத்தில் அமரும் அளவும் மணம் புரிந்து கொள்வதில்லை என்று உறுதி செய்துகொண் டிருந்தான். அல்லாமலும், வரதக்ஷிணை வாங்கும் கொடிய வழக்கத்தை நமது நாட்டிலிருந்து ஒழித்துவிட வேண்டு மென்று அவன் அநேகந் தடவை கலாசாலையில் 'டிபேடி'ல் (Debate) கூட பேசி யிருக்கிறான். வரதக்ஷிணையை ஆக்ஷேபித்து அநேகம் கட்டுரைகள் கூட பல பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பிப் பிரசுரம் செய்திருக்கிறான்.

ராஜாராமனும் அவனது பிராண சிநேகிதனை சசிதரனும் தங்களுடைய பிராணம் போனால்கூட வரதக்ஷிணை வாங்குகிறதில்லை என்று சத்தியம் செய்திருந்தார்களாதலால், அன்று ராஜு தகப்பனாரின் கடிதத்தைக்கண்டு மிகவும் தத்தளித்தான். சத்தியம் தவறி நடப்பதற்கு அவன் மனம் இடந்தரவில்லை.

இதுகாறும் ராஜாராமன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைப்போல் தகப்பனார் கிழித்த கோட்டைத் தாண்டாமல் மிக்க வினயத்துடன் நடந்துவந்தவனதலால் இப்பொழுது அவருடைய பேச்சை மீறி அவருடைய கோபத்திற்கு ஆளாகித் தன் குடும்பத்திற்கும் பலவித கஷ்டங்களைக் கொண்டு வரவும் துணியவில்லை; தன்னுடைய பிரியமான தங்கையின் கலியாணத்தை நன்றாக நடத்த முடியாமல் போய்விடுமே என்கிற கவலையும் சேர்ந்தது.

ராஜு இந்த விவாகத்திற்குச் சம்மதியாமற்போனால் மாலினியை ஒரு கிழவனுக்கு கொடுத்துக் கலியாணம் செய்யவேண்டியிருக்கு மென்று அவனுடைய தந்தை எழுதி யிருந்தார். அதனால் அவன் "அந்தோ! பிரதிக்ஞைப்படி நடந்தால் சகோதரியின் சுகத்தைப் பாழாக்கின பழியை சுமக்க நேரிடுமே!" என்று மிகவும் வருந்தினான். கடைசியில் அபலையாகிய தனது பிரிய சகோதரியின் நிமித்தமாகவும் தனது தாயார் தகப்பனருக்குத் தன்னால் ஏற்படும் இந்த அற்பமான உபகாரத்திற்காகவும் தனது பிரதிக்ஞையை மீறி நடப்பதென்று நிச்சயித்தான்.

ராஜாராமன் தனது தகப்பனாரின் கடிதத்தை விவரித்தும், தனது உறவினர்களுக்காகத்தான் தன்னுடைய பிரதிக்ஞையை மீறி நடக்க நிச்சயித்திருப்பதாகவும் சசிதரனுக்குக் கடிதம் எழுதினான். அதில் "சசிதர, நீயாவது நமது பிரதிக்ஞையைத் தவறி நடவாமல் நம்முடைய உத்தேசத்தையும் நிறைவேற்றுவா யென்று நம்பி இருக்கிறேன்"—என்றும் குறிப்பிட்டிருந்தான். அக் கடிதத்தை எழுதி வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாதலால் கலாசாலை திறக்கப்படவில்லை. ராஜு ப்ரின்ஸ் பாலின் வீட்டிற்குச் சென்று ரஜா வாங்கிக் கொண்டு மைலாப்பூரில் வசிக்கும் சசிதரனுக்குக் கடிதத்தை போஸ்ட் செய்துவிட்டுச் சித்தூருக்குப் புறப்பட்டான்.

ராஜுவின் தாய் தந்தையரும், சகோதரியும் அவனை அன்புடனும் ஆனந்தத்துடனும் வரவேற்றனர். அவனுடைய தாயார் தன் மைந்தன் சாக்ஷாத் ஸ்ரீ ராமசந்திரனின் அவதாரமென்றும், தன் தங்கையின் நிமித்தம் தனது பிரதிக்ஞையைக் கூட மீற உத்தேசித்திருப்பது மிகவும் புகழத்தக்க விஷயம் என்றும் மைந்தனைப் பலவிதம் புகழ்ந்தாள். ராமரத்தினமையரின் சந்தோஷத்திற்கும் அளவே கிடையாது.

மாலினி தமையனிடம் "அண்ணு உனக்கு நான் என்றென்றைக்கும் நன்றியுடையவள். நீ எனக்கு இந்தப் பெரிய உபகாரத்தைச் செய்யாமல் போயிருந்தால் பட்டுக்கோட்டை தாசில்தாரும் ஐம்பது வயதுக் கிழவருமான சுப்பராம அய்யருக்கு என்னைக்கொடுத்து விடுவதென்று அம்மாவும், அப்பாவும் நிச்சயித்திருந்தார்கள். அப்பொழுது என்கதி என்னவாயிருக்குமோ அண்ணு" என்று விம்மி விம்மி அழுதாள். ராஜு அவளைச் சமாதானம் செய்தான்.

மறுநாள் மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அனைவரும் நடுக்கூடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு சம்பாஷித்துக்கொண் டிருந்தனர். அப்பொழுது தபால்காரன் ராமுவிற்கு ஒரு கடிதம்

கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். அந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்தவுடன் ராஜு மிகவும் மகிழ்ச்சியுடன் மாலினியை இறுகத் தழுவிக் கொண்டு "என் அருமை மாலினீ, நீதான் பாக்கியசாலி" என்றுரைக்க எல்லோரும் ராஜுவைப் பார்த்து "திகைத்துப்போய் என்னடா ராஜு இது! யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது? என்ன விஷயம்?" என்று கேள்விமேல் கேள்விகள் கேட்டனர்.

ராஜு "அம்மா உன் பெண்ணிற்கு மகத்தான அதிருஷ்டம் பிறந்திருக்கிறது. சத்குணவானும், வாலிபனும், இஞ்சினியருமான ஓர் நல்ல வரன் வரதக்ஷிணை இல்லாமலே கிடைத்திருக்கிறான்" என்று கூறிவிட்டுக் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தான்.

சென்னை, 18-2-38

அன்பார்ந்த நண்பா,

உன் கடிதத்தைப் படித்து நான் மிகவும் வருந்துகிறேன். நான் கீழே கண்ட விஷயத்தைக் கொஞ்சமும் வெட்கமில்லாமல் எழுதுகிறேனென்று என்னைக் கேலி செய்யாதே. இப்பொழுது என்னமோ நாமிருவரும் வெவ்வேறு கலாசாலைகளில் படித்துக்கொண் டிருந்தாலும் கூட நாமிருவரும் இன்டர்மீடியட் வகுப்பிலிருந்து ஒருமிக்கப் படித்த பொழுதிலிருந்த உற்ற நண்பர்களல்லவா? நான் போனவருஷம் பெங்களூருக்குச் செல்லும் வழியில் உன்னுடன் உங்கள் ஊருக்கு இ ர ண் டு நாட்கள் வந்திருந்தேனே, அப்பொழுதே உன்னுடைய தங்கை என் மனத்தைக் கொள்ளைகொண்டு விட்டாள். எங்களுடைய காதல் விவாகத்திற்கு என் தாயாரைச் சம்மதிக்கும்படி செய்துவிட்டேன். உனது பெற்றோரும், நீயும், மாலினியும் சம்மதித்துவிட்டால் ஒரு தம்பிடி கூட வரதக்ஷிணையின்றி விவாகம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறேன். நீயும் உனது பிரதிக்ஞையி லிருந்து நழுவாமல் சந்தோஷத்துட னிருக்கலாம்.

இப்படிக்கு உன்னுடைய பதிலை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கும் பிரிய நேசன்,

சசிதரன்.

அந்தக் குடும்பத்திற்கு இதைவிட அதிகமாக ஸந்தோஷம் தரும் சங்கதி வேறேதாவதும் உண்டோ!

ஏற்கனவே நிச்சயித்திருந்த மாதிரியே ராஜாராமனுக்கும் அதே வெள்ளிக்கிழமையன்று வரதக்ஷிணை வாங்காமலேயே விமரிசையாகக் கலியாணம் நடந்தது. இருபது நாட்களுக் கப்பால் மாலினி சசிதரனின் கலியாணமும் அதிக ஆடம்பரமின்றி விமரிசையாக நடந்தது. இரண்டு வருடங்களுக்கப்புறம் சசிதரனும் பரீக்ஷையில் பாஸ்செய்து மேட்டூரில் ஓர் உத்தியோகத்திலும் அமரவே மாலினி அவனை வந்தடைந்தாள்.

தம்பதிக ளிருவரும் மிகவும் அன்னியோன்னியமாக விருந்தனர். மாலினியின் அழகு, சத்குணம், பணிவு, புத்திசாலித்தனங்களைக் கண்டு அவளுடைய மாமியாரான மங்களாம்பாளும் மகிழ்ந்தாள். ஆனால் மங்களாம்பாளின் மனத்தில் தன்னுடைய ஒரே ஒரு குழந்தையான சசிதரன் கண்யமான ஒரு பணக்காரக் குடும்பத்திலிருந்து கைநிரம்ப வரதக்ஷிணையுடன் ஒரு பெண்ணை மணந்து கொள்ளாமல், இந்த ஏழைப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டானே என்கிற எண்ணம் உள்ளுக் குள்ளாகவே உறுத்திக்கொண் டிருந்தது.

மாலினி நன்றாய்ப் படித்த பெண். ஆதலால் அவ்வப்பொழுது பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதியனுப்பித் தமிழ் நாட்டு ஸ்திரீ எழுத்தாளரில் தானும் ஓர் உயர்ந்த ஸ்தானம்பெற்று விளங்கினாள். இவள் தனக்குக் கிடைத்த ஒழிவு நேரத்தில் வாசித்துக்கொண்டோ, ஏதாகிலும் எழுதிக்கொண்டோ இருந்தால் மங்களாம்பாளுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் தனது மனைவியின் உயரிய குணத்தைக் கண்டு சசிதரன் மகிழ்வான்.

"கலியாணம் ஆவதற்கு முன் 'அம்மா, அம்மா' என்று நம்மிடம் அவ்வளவு பிரியமாக விருந்தானே இப்பொழுது அவன் மனைவியினிடத்திலேயே சதாகாலமும் சரச சல்லாபம் செய்தவண்ண மிருக்கிறானே" என்று மங்களாம்பாள் புத்திரனின்மீது அசூயைப்படவும் துணிந்தாள்.



இன்ஷ்யூர் செய்யுங்கள் !

ஜூபிடர் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும் :
ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல்,
தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம் :

ஒன்றரைக்கோடி ரூபாய்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ் :

99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர் : N. வெங்கடராம அய்யர்.

பச்சிளங்குழந்தைப் பருவத்திலேயே தனது தகப்பனர் பரமபதமடையவே, தனது தாயார்படாதபாடெல்லாம் பட்டுத் தன்னைப் பெரியவனுக்கிய விஷயத்தைச் சசிதரன் மட்டும் மறக்கவில்லை. அவனுக்குத் தாயார்மீது விசேஷமான மரியாதையும், பக்தியும், பிரியமும் நாளுக்கு நாள் பிறைச்சந்திரனைப்போல் அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. ஆனல் மனித குணத்திற் கனுகுணமாக அவன் தனது மனைவியைப் பிரியமாகக் கண்டு பேசிவந்தது மங்களாம்பாளுக்குப் பொருமையை ஊட்டிற்று. தன்மேல் தன் புத்திரனுக்கு இருந்த அன்பு மறைந்தே போய்விட்டதென்று அவள் நம்பியவளாய்ப் புத்திரனுடைய ஒவ்வொரு காரியத்திலும் தப்புக் கண்டுபிடிக்க வாரம்பித்தாள். நாட்டுப் பெண் உட்கார்ந்தாலும் தப்பு, நின்ருலும் தப்பென்று அச் சிறுமியையும் துன்பப் படுத்த வாரம்பித்தாள்.

சத்குணவதி மாலினி மாமியார் மனதைக் குளிரச்செய்து, அவளுடைய அன்பைப் பெறவேண்டுமென்று மிகவும் நயமாகவும், அடக்க ஒடுக்கத்துடனும் மாமியார் இட்ட கட்டளைகளைச் செய்து வந்தனள். ஆனல் மாலினியின் வேலைகளனைத்தும் மங்களாம்பாளின் கண்களுக்குத் தவறுதலாகவே பட்டன. சசிதரனுக்கும் தாயார் வரவர வேறுவிதமாக மாறிப்போய்த் தன் மனைவியைக் கஷ்டப் படுத்துவது பிடிக்கவே இல்லை. ஆனல் தாயார்மேல் அவனுக்கு இருந்த அபாரப் பிரீதியானது அவனைப் பொறுமையில் அழுத்தி மௌனியாக்கிவிட்டது.

ஏற்கனவே மாமியாரின் கொடுமையால் மனம் புண்பட்டு, தேகம் மெலிந்து அசௌக்கிய மடைந்திருந்த மாலினி கர்ப்பம் தரித்தாள். அவள் தேகஸ்திதி முன்னிலும் பதின்மடங்கு கெட்டுப்போய் விட்டது. அவளை உடனே அழைத்துச் சென்று சிகித்சை செய்யாவிட்டால் பெண்ணைக் காணுவதே துர்லப மென்று மூன்ரும் மனிதர்கள்மூலம் கேட்டறிந்த மாலினியின் பெற்ருேர்கள் உடனே ஓடோடியும் வந்து சம்மந்தியிடம் நயமாகக் கேட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டுபோய் நல்ல வைத்தியரை அழைத்து வந்து அவளது உடம்பைக் காண்பித்துச் சிகித்சை செய்யலானர்கள்.

மாலினி பிறந்தகம் சென்ற பின் தன் புத்திரனைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து தன் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மங்களாம்பாள் பல விதங்களிலும் முயற்சி செய்தாள். தினம் பலவித பக்ஷணங்களும், சாப்பாடுகளும் செய்து புத்திரனுக்குப் பரிமாறி உபசரித்தாள். அவனுடன் மிருதுவாகவும், நயமாகவும் பேசிப்பேசி அவனைக் களிப்புறச் செய்யப் பார்த்தாள்.

ஆனல் அவனது மனக்கோயிலைப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்த ஜோதியாகிய மாலினி ஊருக்குப் போனதிலிருந்து சசிதரன் உற்சாகமற்றுச் சோர்வுற்று விளங்கினன். மங்களாம்பாள் "அந்தச் சனியனை மாலினியைச் சீக்கிரமாவது வரவழைக்க வேண்டும். குழந்தை இளைத்துப் போகிருனே" என்று அவனையும் அறியாமல் நினைக்கலானள்.

இதன் நடுவில், மங்களாம்பாளின் தோளில் ஒரு கட்டி புறப்பட்டுப் பெருந் தொந்திரவுக்குள்ளாக்கியது. அவ்வூர் வைத்தியர் அவளை உடனே சென்னைக்கு அழைத்துச்சென்று ஓர் பெரிய டாக்டரிடம் காண்பித்து ஆபரேஷன் செய்தாலொழிய மங்களாம்பாள் பிழைப்பதே கஷ்டமென்று சொல்லிவிட்டார்.

கடவுளை ஸ்மரித்தவண்ணம் தனது தாயாரின் படுக்கையருகில் வந்து உட்கார்ந்தான் சசிதரன். அப்பொழுது வீதிக் கதவண்டை தபால்காரன் கூப்பிடும் சப்தத்தைக் கேட்டு சசிதரன் போய்த் தபாலை வாங்கிப் பிரித்துப் பார்த்தான். அதில் ஒரு கடிதமும் செக் ரூ-75 க்கும் இருக்கக் கண்டு கடிதத்தைப் படித்தான். இந்த ஸந்தோஷச் செய்தியைத் தாயாருக்குத் தெரிவித்தான்.

மாலினிக்கு வெகுமதிப் பணம் அன்று கிடைத்திராவிடில், இன்று மங்களாம்பாள் இந்த மட்டில் குணமடைந்து பேரக் குழந்தையுடன் கொஞ்சி விளையாட முடிந்திருக்குமா?

வில்லியின் நகைச்சுவை

[வித்வான் ச. கு. கணபதிஐயர், பி.ஓ.எல்.]

வேறுபாடான வடிவம், வேடம், செயல் வார்த்தைகளைக் கண்டபோது ஒருவரிடம் தோன்றும் சிரிப்பு நகை எனப்படும். மனத்திலே தோன்றும் இந்த நகை வெளிப்பட்டுப் புறத்திலே காணப்படும்போது அதனை நகையாகிய மெய்ப்பாடு என்பர் தமிழர். வடநூலார் மெய்ப்பாட்டைப் பாவம் (மனநிலை) என்கிறார்கள். நகை காரணமாக மெய்ம்மறந்து ஆனந்திக்கும் நிலை நகைச்சுவை யாகும்.

நகைச் சுவையை விரும்பாதவர்களே இல்லை என்று கூறலாம். எட்டு ரசங்களில் இதனையே தொல்காப்பியர் சிரோரத்தினமாக முதலில் வைத்துக் கூறுகிறார்.*

நகையும் சிருங்காரமும் அதிகமாகப் பயின்றுள்ள நூல்களே மக்களால் மிகவும் மதிக்கப்படுவன வாகும்.

வில்லி பாரதத்தில் இந்த நகை சம்பந்தமான பாவமும் சுவையும் நூல்நெடுக அங்கங்கே காணப்படுகின்றன. அவை, ஒவ்வொருவரும் படித்து இன்புறற்குரிய செய்திகளாகும். அவற்றுள் சிலவற்றை இங்கே காட்ட விரும்புகிறேன்.

கலைமகளும் திருமகளும் தம்முள் சேர்ந்திருக்க மாட்டார்கள் என்பது உலகத்தார் சொல்வது மட்டு மன்று; நூல்களும் கூறுவனவாகும். வில்லியார் இச் செய்தியை எடுத்துக்கொண்டு தம் நகைச் சுவையைக் குறிப்பிடுகிறார். துரோணரிடம் படித்து வந்த ஐவர் நூற்றுவர் என்ற அரசிளங்குமரர் சிறந்த செல்வவான்களா யிருந்தும் கல்வியில் பூரண ஞானத்தைப் பெற்றனர் என்ற கருத்துத் தோன்ற

'கல்வியில் நிரம்பினர் வரம்பில் நிதியோர்'
—(வாரணாவத. 48)

என்கிறார்.

அடுத்தபடியாக நம் கவனத்துக் குரியது பகாசுரனுக்காகத் தான் ஓட்டிச் சென்ற வண்டியில் அடங்கியுள்ள உணவை வீமன் உருண்டைகளாக்கித் தன் வயிற்றினுள் தள்ளும் காட்சியாகும்.

"......................................வரை முழையுளே
அன்பி னல்லடையு மன்ன மென்ன நிறை
அன்ன முற்றவும் அருந்தினான்"
—(வேத்திர. 54)

என்பது அக் காட்சியின் ஒரு பகுதி யாகும்.

வீமன் இந் நிலையில் உணவருந்தி வரும் சமயத்தில் பகன் அங்கே பசியோடு வருகிறான். 'புலிக்குரிய உணவை ஒரு பூனை புசிப்பதா?' என்று சினங்கொண்டு வீமனைப் பக்கங்களிலும், முதுகிலும், பிடரியிலும் பலதடவை குத்துகிறான். இக் குத்துக்களால் வீமன் உண்ட அன்னம் நன்றாக வயிற்றுக்குள் சென்றுவிட வயிற்றுள் அதிக இடம் ஏற்பட்டு மேலும் மேலும் கவளங்களை அவ் வீமன் வாய்க்குள் போட்டு விழுங்கலானான். மூட்டைகளில் தானியங்களை நிரப்புவோர் செயல் இங்கே நினைவிற்கு வருகிறது. பகனுக்குக் கைகள் இளைத்துப் போயின; 'சரி இவ்வுணவு எங்கே போகிறது! நன்றாக உண்ணட்டும்; பிறகு இவனையும் சேர்த்து இவன் உண்ட உணவோடு புசித்துவிடலாம்! என்றெண்ணித் தன் கோபத்தை ஆற்றிக்கொள்ளுகிறான். இக் காட்சியை விளக்கும் செய்யுள் வருமாறு.

"பக்க மும்பிடரும் ஒக்க முட்டிகள்
படபடக் கவள பாரமாய்
விக்க நின்றன வயிற்றி ரண்டருகும்
விழ விழமுன் விழுங்கலும்
'புக்க பண்டமுடன் உன்னு டல்தசை
புசிப்பன் எங்ஙன்இவை போவ'தென்

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென் றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப."

7

றக்க டுங்கையும் இளைத்து வெஞ்சினமும்
ஆறி நின்றனன் அரக்கனே."
—(வேத்திரயேச். 56)

* * *

அடுத்தது ஒரு கவிச் சித்திரம். திரௌபதியின் சுயம் வரத்திலே அந்தண வடிவோடு வந்து மண்டபத்திலிருந்த விஜயன் வில்லேற்று வெற்றி பெறுகிறான். அரசர்களுக் கெல்லாம் பொறாமை மேலிடுகின்றது. "ஒரு பார்ப்பான் வந்து கோடி அரசரை ஒருசேர அவமானப்படுத்திப் பாஞ்சாலியைத் தன் வலியால் கொண்டு போவதா!" என்று திரண்டு அர்ஜுனன் மேல் போருக்கு எழுகிறார்கள். இச் சமயத்தில் அம் மண்டபத்திலிருந்த அந்தணர்களுக் கெல்லாம் கோபாவேசம் தோன்றி விடுகிறது. அவர்கள் கண் சிவந்து உதட்டை அதுக்கி எழுந்து தம் தோள்களைத் தட்டிக் கையிலுள்ள தண்டுகளை ஓச்சி ஓச்சி அரசர்களை, அவர்கள் ஓட ஓடத் துரத்தித் தங்கள் வலிமையைக் காட்டுகிறார்கள்.

"..........................மறையோ ருள்ளார்
உருத்துவாய் மடித்தெழுந்து கோகுதட்
[டிட்
டுன்றியதன் டெதிரோச்சி உடன்ற வேந்தர்
கருத்துவார் தகவெருக்கொண் டோட
[வோடக்
கையுரங்காட் டினர்வளர்த்த கனலே யன்
[னர்"
—(திரௌபதி மாலையிட். 60)

என்பது அவர் வாக்கு.

* * *

அடுத்தபடி நாம் கவனிக்கவேண்டியது அர்ஜுனன் சுபத்திரையை மணக்குமிடம். சுபத்திரையை விஜயனுக்குக் கொடுப்பதைப் பலராமன் விரும்பவில்லை. அர்ஜுனன் மாதவ னுருவில் வந்து பலராமனால் உபசரிக்கப் பெற்று அவனையறியாது கண்ணன் உதவியால் சுபத்திரையை மணக்கிறான். விஜயன் தான் கொண்ட தவ உருவிற்கு ஒவ்வாத மணவினையை மேற்கொள்வதைக் கண்ணுறும் போது கண்ணனுக்கு நகை மேலிடுகின்றது. அவன் அர்ஜுனனைத் தழுவிக்கொண்டு.

"அன்ன மென்னடை அரிவையர் பொருட்டு
[நீ யின்னம்
என்ன என்னமா தவவுருக் கொள்ளுதி
[என்றான்."
—(தீர்த்த. 78)

மாதவ உருக் கொள்வது அரிவையர் பொருட்டே, பின் எதற்கு மன்று என்று ஹாஸ்யமாகக் கூறுகிறான்.

* * *

அடுத்தது திரௌபதியின் துகிலுரியும் கட்டம்: துச்சாதனன் அவள் துகிலை உரியத் தொடங்குகிறான். கண்ணன் அவளுக்கு எவர்க்குந் தெரியாமற் கருணை செய்கிறான். துகில் ஒன்றற் கொன்று அடுத்து அடுத்து நிறம் பற்பல பெற்று ஆயிரம் ஆயிரம் கோடியாகப் பெருகுகின்றன. அந்தக் கூடத்தில் இடமில்லை என்று கூறும்படித் துகில்கள் குவிந்து விடுகின்றன. காவலர்கள் பற்பலர் அவற்றை ஓடி எடுத்து அப்பால் சேர்க்க முயலுகிறார்கள். உரிந்தோனாகிய துச்சாதனனும் சலித்து இருகை யிணைத்து நிற்கிறான். அச் சமயம் வில்லிபுத்தூர் இவனை எள்ளல் நகை தோன்றும் படி,

"துகிலினை யுரிந்த வன்கைச் சூரன்"
(சூது. 268)

என்கிறார்.

* * *

வில்லியார் கூறும் எல்லா ஹாஸ்யங்களையும் கூறுவது இக் கட்டுரையின் நோக்கமன்று; ஓடும் ஓட்டத்தில் வில்லிபாரதத்தில் மற்றொரு பக்கத்தைப் புரட்டுவோம். வந்தது விராட பருவம். விராட நகரத்தில் ஆண்களை இல்லை என்னும் படியாகச் சேனையுடன் விராடன் பகைவரை எதிர்க்கத் தென்பால் சென்றிருக்கிறான். அச் சமயம் பார்த்து வடபாலில் துரியோதனன், கர்ணன், அசுவத்தாமா, துரோணர், பீஷ்மர் முதலிய வில்லாளிகள் தோன்றினர். அவர்களை எதிர்க்கப் பேடிக் கோலத்தி லிருந்த அர்ஜுனனும் விராடன் புதல்வனான உத்தரனும் செல்கிறார்கள். இச் சமயம் கவி,

"உத்தரன் உத்தர திசையை வந் தடைந்
[தான்"

என்கிறார். மேலும், "தேரை ஊர்பவன் சிறு பிள்ளையாகிய உத்தரன்; அத் தேரை ஓட்டுபவள் ஒரு பேடி; இந்த உத்தரன் ஒரு பெண்ணின் பிள்ளை" என்ற கருத்தைப் புலப்படுத்த வில்லியார்,

"பேடி தேர்விடச் சென்றனன் சுதேட்
டிணை பிள்ளை"

(நிரைமீட்சி 32)

என்கிறார். சிறிது நேரத்தில் பெருஞ் சேனையை உத்தரன் கண்ணிற் காண்கிறான். கைநடுங்குகின்றது, கால் ஒடுங்குகின்றது, நாப்புலர்ந்து உயிர்ப்பு மேலிடுகின்றது, சொல் ஒடுங்குகின்றது. இவ்வாறு நடுக்க முற்றவன் "மைந்நெடுங் களிற்றுரனுடை விராடர்கோன் மைந்தன்" என்கிறார். அங்கே சுதேட்டிணை பிள்ளை என்றவர் இங்கே வீரனுகிய விராடனது பிள்ளை என்பதில் நகைச்சுவை தோன்ற வில்லையோ! இதே சந்தர்ப்பத்தில் இன்னொருகாட்சி: அதாவது உத்தரன் தேரினின்றும் குதித்து ஓடத் தொடங்குவது அது. எப்படி ஓடுகிறான்? பாதங்கள் தன் பிடரியிலே (கழுத்தின் பின்புறத்திலே) படும்படி ஓடுகிறான். இங்கே வில்லியார் கூறுவது.

"கொடித் தடந் தனித் தேரினின்
றுகைத்து முன் குதியா
அடித்தலம் பிடரடித்திட ஓடலும்"

என்பதாகும்

* * *

பன்னிரண்டாம் நாட்போர், துரோணர் படைத்தலைமையில் கௌரவர்கள் போர்புரிகிறார்கள். பாண்டவ சேனுதிபதியாகிய திட்டத்துய்ம்மன் தன் சௌரியம் காட்டி முன்னேறுகிறான். கௌரவர் சேனை அல்லோலகல்லோலப் படுகிறது. அப் பக்கத்திலுள்ள க்ஷத்திரிய சிகாமணிகள் எல்லாம் திட்டத்துய்ம்மன் முன் நிற்கமாட்டாது துரோணரைப் புகலடைகிறார்கள். அச் சமயத்தில் வில்லியார்,

"மன்முகவெம் பெருஞ்சேனை மறைய
வன்பா லடைந்தனவே"

என்கிறார். தோள்வலி மிக்க க்ஷத்திரியர் மறையவன்பால் புக்கனர் என்பதில் ஹாஸ்ய ரஸம் ததும்புகிறது.

* * *

வேறொரு ரஸமான பாகம்! பாண்டவர்களில் தருமர் போர்புரிவதைப் பற்றிக் கூறுமிடங்கள் மிகச் சிலவே. அவற்றுள் ஒன்று தருமர் சகுனியுடன் போர்புரிவதைத் தெரிவிப்பது. "சகுனியே, கோரத்துடன் நீ பொருது எதிர்த்த சூதன்று இவை; உடலைத் துளைக்கும் வீரம் பொருந்திய அம்புகளாகும்; இவற்றால் உன்னை வெல்வேன்" என்று கூறி தருமர் அம்பு தொடச் சகுனி அவற்றுக்கு எட்டாமல் பின்னிட்டோடுகிறவர்களில் முதல்வனுகி அவர்களை யெல்லாம் முன்னிட்டான் என்கிறார் வில்லியார்.

"சோரத் துடன்நீ பொருதடர்த்த
சூதன் றிவைமெய் துளைத்துருவும்
வீரப் பகழி யுளையிவற்றல்
வெல்வேன் எனப்போர் வில்வாங்கி
ஈரக் கருணை முகத்தண்ணல்
எய்தான் அவற்றுக் கெட்டாமல்
பேரப் பேரத் தேர்கடவிப்
பின்னிட் டவர்க்கு முன்விட்டான்."

(பன்னிரண்டாம் 72)

என்பது அவர் வாக்காகும்.

ரஸங்களை அனுபவித்தல் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வில்லி பாரதத்தை முதலிலிருந்து கடைசி வரையில் படிப்பவர்க்கு அங்கங்கே நகைச் சுவை எளிதில் புலனுவதுடன் பிற ரஸங்களும் செறிந்திருப்பது தெரியவரும்.

மனக் குதிரை

எஸ். சந்திரசேகர சாஸ்திரி

மனம் என்பது உருவமற்ற குதிரை. கடிவாளமற்ற குதிரை. நினைத்தவிடமெல்லாம் இக் குதிரை மனிதனை இழுத்துச் செல்லும். இக்குதிரைக்கு அறிவாகிற கடிவாளத்தைப் போட்டுப் பிணைத்து வைக்காத மனிதன் இக் குதிரையின் இடக்குகளுக்காளாகிப் படுகுழிகளில் விழுந்து மீள வழியின்றி உழல நேரிடும். மனக் குதிரை, மனிதனை, கண்ட மேடு பள்ளங்களிலெல்லாம் புரட்டி இழுப்பதற்குள்ளாகவே, கடிவாளம் போட்டு வைக்கும் மனிதன் குதிரையை அடக்கியாளச் சக்தியுள்ளவனுவான். ஒரு வழியில் செலப் பழக்கமும் வாய்க்கும். ஒரு நிலையில் தரித்திருக்கச் செய்ய நாம் முயற்சியெடுத்துக்கொள்வோமாகில் பல கிளைகள் தாவ நேரிடாது.

கண்டபடி யெல்லாம் மனத்தைச் செலுத்துபவன் ஒன்றுக்கும் உதவாத வீணனுகவேயிருப்பான். மனத்தையடக்கியிருப்பவன் எல்லோருக்கும் முதல்வனுகவே யிருப்பான். ஒவ்வொரு காரியங்களையும், நன்கு ஆராய்ந்து ஈடுபடுவதே, அறிவின் மூலம் மனத்தை யடக்கும்முறையாகும். அறிவுக்குப் பிழையாகத் தோன்றும் மார்க்கங்களிலிருந்து, மனத்தைத் திருப்பி, உண்மையாகத் தோன்றும் அழிவற்ற மார்க்கங்களில், மனதைச் செலுத்துவதே, மனத்தை யடக்கியாளுவதற்கு அறிகுறியாகும். உள்ளும் புறமும், மனமும் சரீரமும் ஒரே வழியில் செல்லும் முறையைக் கைக்கொண்டவன், மனத்தையடக்கியாளுபவன்.

அவரவர் தன்னைச் சேர்ந்த மனமென்னும் குதிரையைத் தன் வசத்தில் என்றுமிருக்கப் பழக்கி வைத்திருக்க வேண்டும். இல்லையேல், அவ்வப்பொழுது, இக் குதிரையை வெவ்வேறு காஸாரிகள், தங்களிஷ்டப்படி தங்கள் சாமர்த்தியத்திற்குத்தகுந்தபடி, தங்கள் பாதைகளில் ஓட்டிச் செல்வார்கள். அப்பொழுது ஒவ்வொரு காஸாரியின் சாமர்த்தியத்திற் கேற்ப, குதிரையும் செல்லும். குதிரையைச் சேர்ந்த மனிதனும் செல்லவே நேரிடும். மனிதன் க்ஷணே க்ஷணே வெவ்வேறு காஸாரிகள் கையில் இருப்பான். மனிதர்களிடம், மிருகங்களுக்கில்லாத பகுத்தறிவு ஒன்று அதிகமாக இருக்கிறது. ஆராய்ந்தறியும் அச் சக்தியை, நன்ருகப் பயன்படுத்தி எக் காரியத்தையும் ஆழ்ந்து நோக்குவதே அறிவின் வளர்ச்சியாகும். பகுத்தறிவை உபயோகப்படுத்தும் மனிதன், குதிரையைப் பல காஸாரிகள் கையில் வைத்திருக்கமாட்டான். நன்ருக ஆராய்ந்து சரியான மார்க்கத்தில் தானே செலுத்துவான். அல்லது இஷ்டப்படி அவ்வப்பொழுது நல்ல காஸாரிகள் கையில் ஒப்புவிப்பான்.

சகல மனிதர்களும் பெரும்பான்மையாக அறியக்கூடும் விஷயத்தைக் காட்டிலும், புதிதான ஓர் உண்மையை எடுத்துரைப்பதும், சகலரும் அறிந்திருக்கும் ஓர் உண்மையை, மறுமுறையாகப் பச்சை மரத்தில் ஆணி பதியவைப்பது போல் எடுத்துரைப்பதும், புதிய விஷயமாக மாறும். எவரும் இன்றுவரை உணர்ந்திராத புதிய விஷய மொன்றைக் கண்டு பிடித்து, எல்லோருக்கும் விளங்கும்படி செய்யும் மகானே முதல்தரமான அறிவு படைத்தவராவார். தானும் தன் செய்கையை அறியாது, பெரிய மகான்கள் கூறும் உண்மையையும் பொய் யெனக் கருதி, தன் அஞ்ஞானத்தையே உண்மையாகக் கொண்டு, கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் பகுத்தறியும் சக்தியைத் துருவேறச்செய்துகொண் டிருக்கும் மனிதரே, மனிதராகப் பிறந்து, மிருகத்தனத்தைக் கொண்ட உயிருள்ள பிராணி யாவார். யான் பிடித்த முயலுக்கு இரண்டு கொம்பென்று சாதிக்கும் இந்த வர்க்கத்தாரை மிருகத் தன்மையிலிருந்து மீட்டு, மனிதத்

தன்மையுடன் விளங்கச் செய்வது பெரிய மஹான்களின் காரியம்.

முதலாவதாக, மனித சமூகத்தில் பழகக் கற்றுக்கொள்வதும், இரண்டாவதாகத் தான் ஆராய்ந்து கண்ட உண்மை மார்க்கத்தில் மனித சமூகத்தைத் திருப்பித் தன் வசமாக்கிக்கொள்ள, எவ்விதத்திலும் உண்மை வழியில் முயன்று பிறகு சமூகத்தையே திருப்பி விடுவதும் மனிதனின் இரண்டு உயரிய குணங்கள். முதலாவது குணத்தைப்பெற்ற மனிதனே, பகுத்தறிவின் முதற் படியை அடைந்தவனாகவும், இரண்டாவது குணத்தைப் பூர்ணமாகக் கொண்டவனே, பகுத்தறிவின் முழு உருவையும், கடைசிப் படியையும் தாண்டியவனாகவும் பெரிய மகானாகவும் இருப்பான். தவறான மார்க்கத்தில் தானும் சென்றுகொண்டு பிறரையும் இழுத்துச் செல்பவன், தீர்க்க காலம் வெகுதூரம் சென்றுகொண்டிருக்க முடியாது. முடிவில் ஒருநாள் எவ்வழியுமின்றித் திண்டாட நேரிடும். இவனை நம்பியவர்களும் திக்கற்றவர்களாவார்கள். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் தான் செல்லும் மார்க்கம் எத்தகையது என்பதை அறிந்துகொள்ள, அன்றிருக்கும் பல பெரியார்களின் மார்க்கங்களையும், சரித்திர பூர்வமாக நாமறியும், பல பெரியார்களின் மார்க்கங்களையும், அவர்கள் கொண்ட கொள்கைகளின் பலன்களையும், தனதறிவுக் கெட்டியவரையில், தினசரி பல தடவைகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிறகுதான், தான் செய்யப்புகும் காரியம் பயன்படக்கூடியதா, அல்லது பயனற்றதா என நன்கு விளங்கும்.

மேற்கூறியபடி நாமே முடிவிற்கு வந்து ஈடுபடும் ஓர் காரியத்தில் நம்மைப் பிறர் முதலில் ஏளனம் செய்யலாம். பிறர் ஏளனம் செய்வதையே கவனியாதிருப்பதே அறிவு படைத்ததற் கறிகுறியாகும். பிறர் தன்னை ஏளனம் செய்வதையும், தனக்குத் தீங்கு விளைவிப்பதையும், சிறிதளவும் அறிந்துகொள்ள முயற்சியாது விலகியிருப்பதும், தான் பிறரை ஏளனம் செய்யாமல் பிறருக்கு ஒருவித தீங்கு விளைவிக்க மனத்தாலும் நினையாதிருப்பதுமே, மனிதனின் உயர்வுக்குப் பிரதானமான இரு காரணங்கள்.

புத்தக விமர்சனம்

நிர்மலா:—[ஹிந்தி ஆசிரியர்:—பிரேம் சந்த். மொழிபெயர்த்தவர்:—கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார். பிரசுரம்:—கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.]

நல்ல மனிதர் ஒருவர் இரண்டாந்தாரம் விவாகம் செய்துகொள்கிறார். முதல் மனைவி மூன்று பிள்ளைகளைப் பெற்றுவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள். நாற்பது வயதான முன்ஷி தோதாராமுக்கு வாழ்க்கைப்பட்ட நிர்மலா தன் இளம் உள்ளத்தில் எழும் உற்சாக எண்ணங்களுக்கு அணை போட்டு ஒரு குழந்தையைப் போல் வாழ்க்கையை நடத்த வாரம்பிக்கிறாள்; மூத்ததாரத்தின் பிள்ளைகளோடு மாசற்ற மனத்துடன் அன்பு பாராட்டுகிறாள்.

வாழ்க்கைப் பாதையில் அலுப்புற்றுச் சோர்ந்து நடக்கும் அவள் கணவன் முன்ஷி தோதாராமுக்குப் பொறாமை ஏற்பட்டுவிடுகிறது. அவர் மனத்தில் சந்தேகப் பேய் தலைவிரித் தாடுகிறது. நிர்மலமாய் விளங்கும் நிர்மலாவினிடம் சந்தேக மேற்படுகிறது. நிர்மலா முதலில் இதை யறியாமலிருந்தாளாயினும் பிறகு அறிந்து மிகவும் வருந்துகிறாள். முன்ஷி தோதாராமின் வாழ்க்கை—ஆநந்த வாழ்க்கை—துன்பக்கேணியாக மாறுகிறது. தந்தையின் சந்தேகப் பேய்க்கு மகன் பலியாகிறான். நிர்மலா கடைசியில் தன் வாழ்க்கை நாடகத்தை மனம் பிளந்த நிலைமையில் முடித்துவிடுகிறாள். சிதைந்த ஹிருதயத்துடன் முன்ஷி தோதாராம்—மகனைத் தேடிக்கொண்டு ஊரெல்லாம் சுற்றிவிட்டு நிர்மலாவின் அந்திமக்ரியைகளைச் செய்வதற்கு வந்துவிடுகிறார்.

இதுதான் கதைக் கோப்பு. ஒவ்வொரு பாத்திரத்தையும் ஆழ்ந்த உழைப்பில் சிருஷ்டி செய்திருக்கும் பிரேம்சந்தின் மூலத்துக்கு இம் மொழிபெயர்ப்பு அழகைத்தான் கொடுக்கிறது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

“வக்கீல் கோர்ட்டிலிருந்து வந்தபோது நிர்மலாவின் குறுநகை வாய்ந்த வடிவம் தம் அறைவாயிலில் நிற்பதைக் கண்டார். அந்த மாசற்ற ஒளியைக் கண்டு அவர் கண்கள் திருப்தி யடைந்தன. வக்கீல், அறையில் அடியெடுத்து வைத்தவுடன் அவர் பார்வை நிலைக்கண்ணாடியின்மீது விழுந்தது. தம் உருவம் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவரது உள்ளத்தில் ஒரு தழும்பு தோன்றியது. புஷ்டி தரும் பதார்த்தங்களைப் புசித்துவந்த போதிலும், கன்னத்திலிருந்த சுருக்கங்கள் தெளிவாகத் தெரிந்தன. இழுத்துக் கட்டப்பட்டிருந்த போதிலும் வயிறு பந்தயக் குதிரைபோல் முன்னால் வந்திருந்தது. கண்ணாடியின் எதிரிலேயே, ஆனால் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றிருந்தாள் நிர்மலா. இரண்டு வடிவங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்? ஒன்று இரத்தினங்களிழைத்த விசாலமான மாளிகை; மற்றொன்று இடிந்து விழுந்த பாழ் மனை....” என்று படிக்கும்பொழுது அந்தக் காட்சி சித்திரம்போல், நம் மனத்தில் படிந்துவிடுகிறது.

தமிழ் நடை மிகவும் அழகாக இருக்கிறது. மொழிபெயர்ப்பின் சாயல் இந்நூலில் படியாமல் மொழிபெயர்த்திருப்பது ஆசிரியரின் திறமையைக் குறிப்பிடுகிறது.

புத்தகத்தின் அமைப்பு மிகவும் நன்றாயிருக்கிறது; உயர்ந்த தாளில் பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கிறது. இந்நூல் தமிழுலகத்தில் ஒரு நூதன உணர்ச்சியை எழுப்பும் என்பதில் ஐயமில்லை. தமிழர்கள் இதை விரும்பி வரவேற்பார்கள்.

தஞ்சைத் திருக்கோயில்கள்—[ஆசிரியர்:— ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., பிரசுரம்—ஸ்ரீ கோமளாம் பாள் பதிப்பகம், கும்பகோணம்.]

விலை அணா 4.

பழங்காலத்திலிருந்தும் சரித்திர கால முதற் கொண்டும் தஞ்சை நகரம் எல்லாத் துறைகளிலும் சிறப்புற்று விளங்குகிறது. வீரர்களாகிய மஹாராஷ்டிர அரசர்கள் அந் நகரத்தை யாண்டு மிகவும் சிறப்புற்று விளங்கினர். மஹா வீரனும் யுத்த தந்திர நிபுணனுமாகிய சிவாஜி மஹா ராஜாவினுல் வெற்றியுடன் ஆளப்பட்ட அழகிய நகரம் அது.

அந்த அற்புத நகரத்தில் விளங்கும் கோயில்களைப் பற்றிய விரிவான குறிப்பு இந் நூலில் காணப்படுகிறது.

தஞ்சை ஸ்தலமான்மியம், புராண வரலாறு முதலிய விஷயங்களெல்லாம் அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. பிரும்மாண்ட புராணத்தை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் இந் நூலை யியற்றியிருக்கிறுர் என்பதற்கு அடையாளமாக ஸம்ஸ்கிருத ஸ்லோகங்களை அபரிமிதமாகக் கையாண்டுள்ளார்.

தஞ்சையிலுள்ள கோயில்களெல்லாவற்றையும் பற்றி வெகு சுலபமாக இந் நூலைப் படிப்பவர் அறிந்துகொள்ளலாம். ஆசிரியரின் இம் முயற்சி பாராட்டுக்குரியதுதான் என்பதில் ஐயமில்லை. ஆனுல் மொழி பெயர்ப்புச் சாயல் இந் நூலில் நன்கு படிந்திருக்கிறது. வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பாக இல்லாமல், வடமொழி மூலத்தின் கருத்தைத் தழுவித் தமிழ் நடை அழகுடன் விளங்கும்படி செய்திருப்பின் அது "பொன்மலர் நாற்றமுடைத்து"—என்பதுபோல் இருக்குமென்பது மறுக்க முடியாததாகும். இந் நூல் தமிழர்களின் ஆதரவைப் பரிபூர்ணமாகப் பெறும்.

மூர்த்தி ஜோதிஷ போதினி—[ஆசிரியர்- எம். பி. வேங்கடராம சாஸ்திரி. பிரசுரம் —மூர்த்தி ஜோதிஷசாலா, டவுன்ஸ் ஸ்டேஷன் ரோடு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி விலை—அணு 5]

இந் நூலில் இவ் வருஷ பலன் முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது; தாராபலன், சந்திரபலன், முதலிய விஷயங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் சில முக்கியமான விஷயங்களும் இந் நூலில் இல்லாமற் போகவில்லை. இத் தகைய உபயோகமான நூலின் விலை எவ்வளவோ என்று நாம் யோசிக்க வேண்டியதில்லை. மேல் அட்டையில் விலை அணு 5 தான் என்று போடப்பட்டிருக்கிறது. அணு ஐந்துதான் என்று அழுத்திக் கூறியிருப்பதன் நோக்கம் விளங்கவில்லை. ஆசிரியர் அவ் விலைக்கு இந் நூல் மலிவு என்று கருதுகிறுர் போலும்!

ஸூ. ஸோ.

நாரி கல்யாண்

அல்லது

சர்வ ரோக நிவாரண ஔஷதம்

மஹாத்மாக்களான நம் தேசத்து ரிஷிகள் நம்மிடம் கொண்ட கருணையினால் ஆயுர்வேத்தை யருளிச்செய்தனர். ஆயுர்வேதம் பூர்வத்தில் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது. இப்பொழுது புத்தக ரூபத்தில் நமக்குக் கிடைத்திருப்பவை மிகவும் சொற்பமாகும். ஆயுர்வேதம் அக்காலத்தில் எழுதப்படாமல் வாயினாலேயே பயிலப்பட்டு வந்தது. பண்டைக் காலத்து ஓலைச் சுவடிகளிலொன்று எங்களிடம் கிடைத்திருக்கிறது. அதுதான் நாரி கல்யான் என்னும் மருந்து. நாரி கல்யாண் வியாதிகளை ஆச்சரியப்படும்படி சொஸ்தப்படுத்துகிறது. நாரி கல்யாண் வைத்ய உலகத்துக்கே இது வரையில் புலனாகாத அபூர்வ மருந்து. நாங்கள் இம் மருந்தை எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் குறைந்த விலையில் விற்கிறோம். ஆயுர்வேத வைத்யர்களும் ஆங்கில வைத்யர்களும் இந்த மருந்தைப் பரீக்ஷிக்க வேண்டுகிறோம்.

நா்ரி கல்யாண்

மாதவிடாய்க் காலத்தில் அதிகத் தொந்தரவேற்படுதல் (Dysmenorrhoea) மாதவிடாய் நின்று போதல் (Amenorrhoea) வெள்ளை, மாதவிடாய்த் தவக்கம், ஸ்திரீகளின் மலட்டுத்தன்மை, முதலியவைகளுக்கு ஏற்றது என்று பரீக்ஷை செய்து உபயோகப்பட்டிருக்கிறது.

நாரி கல்யாண் Menorrohogia, Metrohogia, நரம்புத்தளர்ச்சி, மயக்கம், அடிவயிற்றிலும் அரையிலும் வலி காணுதல் முதலியவைகளுக்கு நிகரற்ற உத்தமமான மருந்து.

நாரி கல்யாண் ஆயுர்வேத மருந்துச் சாக்குகளையும் பச்சிலைகளையும் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பதனால் தொடர்ந்து அநேக நாட்கள் சாப்பிட்ட போதிலும் சரீரத்துக்குத் தீங்கு செய்யாது. உலோகப் பொருள்கள் இதில் சேர்க்கப்பட வில்லை.

நாரி கல்யாண் மாதவிடாய் சிரம மில்லாமல் ஏற்படச் செய்கிறது. ஆயாச முண்டாதல், ஹிஸ்டீரியா; தூக்க மின்மை முதலியவைகளுக்கு இணையற்றது. ஒரு டானிக்கைப் போலவும் உபயோகிக்கலாம். இரத்த விருத்தி, சரியான பசி, சரியான மலப்பிர விர்த்தி முதலியவைகளைக் கொடுத்து ஸ்திரீகளின் வாழ்க்கையை ஸந்தோஷ முள்ளதாகச் செய்கிறது.

விவரங்களுக்கு :

பரசுராம் சித்த ஔஷதாச்ரமம்

59-A லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை மதராஸ்

தலைமை ஆபீஸ் : திருவண்ணாமலை.

ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2)

[கா. சி. வேங்கடரமணி]

பாடம் 9

காக்கை	**மயில்**	**வாத்து**
குருவி	**குயில்**	**அன்னம்**
கழுகு	**கோழி**	
கருடன்	**ஆந்தை**	
கொக்கு	**வௌவால்**	

இவைகளெல்லாம் பக்ஷி வர்க்கங்களைச் சேர்ந்தவை.

முதல் வரிசையில் கண்டவைகள் ஆகாயத்தில் உலாவித் திரிந்தாலும் கண்களின் பார்வையை எப்பொழுதும் பூமியில் செலுத்தி வீடுகளிலும் வயல்களிலும் குளங்களிலும் குட்டைகளிலும் குப்பைகளிலும் உள்ள தங்களுக்கு ஏற்ற ஆகாரங்களைப் பொறுக்கித் தின்று ஜீவிக்கும்.

இரண்டாவது வரிசையில் கண்ட பறவைகள் ஆகாயத்தில் அதிகமாகப் பறக்கமாட்டா. தரையிலே ஆடிப் பாடித்திரிந்து தங்கள் காலத்தைக் கழிக்கும்.

மூன்றாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள பறவைகள் ஜலத்தில் நன்றாக நீந்துமே யொழிய அதிகமாகப் பறக்கமாட்டா.

மணி, உனக்குத் தெரிந்த வரையில் இன்னும் சில பறவைகளின் பெயர்களைக் குறிப்பிடு. ஆகாயத்தில் மிகவும் உயரமாகப் பறக்கும் பக்ஷி எது? அதனுடைய அதிசய குணங்களை யெடுத்துக் காட்டி ஒரு கட்டுரை நாளையதினம் எழுதிக்கொண்டுவா.

நவீன நாகரிகத்தில் பக்ஷியைப் போல் பறக்கும் ஓர் அதிசயத்தைக் குறிப்பிட்டுச் சொல்லு. இந்தப் பக்ஷிக்கும் உண்மைப் பக்ஷிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்துச் சொல்லு. இதனால் நமது நாகரிகத்துக்கு விளையும் பயன்களையும் குறிப்பிட்டுச் சொல்லும்படி உன் உபாத்தியாயரைக் கேள்.

மயிலின் பிறர் வியக்கும் குணமென்ன? குயிலின் பிறர் வியக்கும் குணமென்ன? அப்படியே மேலே காணும் எல்லாப் பறவைகளினுடைய முக்கிய குணங்களையும் குறிப்பிடு. அப்படியே ஒரு மாணவனின் முக்கிய குணம் என்னவாயிருக்க வேண்டும் என்று யோசித்துச் சொல்.

யானை கையில் பூமாலை

[பெ. நா. அப்புஸ்வாமி]

முன்னொரு காலத்தில் மத்திய தேசத்தில் ஓர் அரசன் அரசாட்சி புரிந்துகொண்டிருந்தான். அவன் நல்லவன்; தெய்வ பக்தி உள்ளவன்; ஏழைகளிடத்திலே அன்புடையவன். தன்னுடைய பிரஜைகளை மிகவும் பிரியமாக நடத்துபவன். கொலையும், போரும், அக்கிரமமும், அநீதியும் அவனுக்குப் பிடிப்பதில்லை. ஆதலால், அவன் தன்னுடைய சேனாபலத்தைப் பெருக்கவில்லை: அயல் நாடுகளைப் படையெடுத்து வெல்ல முயலவில்லை.

ஆனால், அவனுக்கு அயல் நாட்டிலிருந்த அரசன் யுத்த வெறி பிடித்தவன். அவன் ஏராளமான படைகளைத் திரட்டி, அவற்றிலுள்ள வீரர்களுக்கு நல்ல ராணுவப் பயிற்சி செய்வித்து, அவர்களுக்கு நல்ல ஆயுதங்களைக் கொடுத்து, எப்பொழுதும் அவர்களைச் சண்டைக்குத் தயாராக வைத்திருந்தான். அவன் திடீர் திடீர் என்று அக்கம் பக்கத்திலுள்ள அரசர்களைத் தாக்கி, அவர்களைத் தோற்கடித்து, அவர்களுடைய ராஜ்யங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு வந்தான்.

ஒரு சமயம் அவன் மத்திய தேச அரசனைத் தாக்கவே, அவன் தன்னுடைய ஜனங்களைக் காப்பதற்காக மிகவும் வீராவேசத்துடன் போர் புரிந்தான். ஆனால் சண்டைசெய்து செய்துபழகியிருந்த எதிரியின் மிகப் பெரிய சைன்னியத்தோடு எவ்வளவு நேரம் பயிற்சியில்லாத சைன்னியத்தால் போர் செய்ய முடியும்? ஒரு நாள் முழுதும் போர் செய்த அவன் காயம் பட்டுக் களைத்துப் போர்க்களத்திலே இருட்டிய வேளையிலே மூர்ச்சையாய் விழுந்தான். அவனுடைய மெய்காப்பாளன், அருகிலிருந்தவன், உடனே அவனைத் தன் தோளின் மேல் தூக்கிச் சாத்திக்கொண்டு, இருட்டையே துணையாகப் பிடித்து, வெகு தூரம் சென்று, அவன் உயிரைக் காப்பாற்றினான்.

பிறகு அவ்விருவரும் பகல் நேரத்தில் காட்டிலும் புதரிலுமாக மறைந்து பதுங்கிக் கிடந்து, அகப்பட்ட காயையோ, கனியையோ தின்று கொண்டு, இரவெல்லாம் மெல்ல மெல்ல வழிநடந்து, அந்நிய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். போகிறவழி நெடுக அந்த அரசன் கண்ட கண்ட கோயில்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டும், புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானம் செய்துகொண்டும், தன்னுடைய இராஜ்ஜியம் தனக்கு மறுபடியும் கிடைக்க வேண்டுமென்று தெய்வங்களை வேண்டிக் கொண்டும் இருந்தான். அவனு

ண்டைய காவற் காரனே என்றால் நல்ல அரசனுக்குக் கேடுவிளைத்த தெய்வங்களை எல்லாம் பழித்துக் கொண்டே வந்தான்.

அவர்கள் இருவரும் அந்நிய நாட்டின் தலைநகரைப் போய் அடைந்தார்கள். அந்த நகரத்திலே அரசன் இறந்துபோயிருந்தான். அவனுக்கு மக்களும் இல்லை. நெருங்கின பந்துக்கள் ஒருவரும் இல்லை. ஆதலால் வேரோர் அரசனைத் தேர்ந்தெடுக்க அந்த நகரத்திலே ஏற்பாடு ஆகிக்கொண்டிருந்தது.

'இறந்துபோன அரசனுடைய பட்டத்து யானையைக் குளிப்பாட்டி, அதை அலங்கரித்துப் பூஜை செய்து, தூப தீபங்கள் காட்டி, அதன் துதிக்கையில் ஒரு பூமாலையைக் கொடுத்து, அதைப் பட்டண முழுதும் தன் இஷ்டம் போல் திரியவிட வேண்டும். அப்போது அது யார் கழுத்தில் அந்தப் பூமாலையைப் போடுகிறதோ அவனையே அரசனாக எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அவனுடைய சொற்படி எல்லாரும் நடந்து கொள்ளவேண்டும்' என்று ஜனங்கள் தீர்மானித்தார்கள். தீர்மானித்து, அந்தப்படி நடத்துவதற்கு மங்களகரமான நல்ல நாளைப் பார்த்து, நிச்சயப்படுத்தி, நகரம் எங்கும் முரசறைந்தார்கள்.

இவை யாவற்றையும் பார்த்த நாடிழந்த அரசன் முன்னிலும் அதிகமாகத் தெய்வங்களை வேண்டிக்கொண்டு, யானை வரும் போது கழுத்தை நீட்டித் தயாராயிருந்தான்.

அரசனைத் தேர்ந்தெடுக்கும் குறிப்பிட்ட தினம் வந்தது. நகரத்திலுள்ளவர்கள் அனைவரும் வீட்டிற்கு வெளியே வந்து 'நம்முடைய கழுத்தில் மாலை விழாதா?' என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு தெய்வங்களை வேண்டிக் கொண்டும், தமக்குப் பட்டம் கிடைத்தால் தெய்வங்களுக்கு ஆலயங்களைக் கட்டுவிப்பதாக நேர்ந்து கொண்டும் நின்றனர். அவற்றையெல்லாம் கேட்ட அந்த அரசனுடைய மெய்காப்பாளன், அவர்களுடைய பேராசையையும் அதனால் தோன்றிய போலித் தெய்வாபிமானத்தையும் வெறுத்து, "தெய்வங்களே! நீங்கள் சாக்ஷியாகச் சொல்லுகிறேன் நான் அரசனானால், நான் உங்களுக்குக் கோயில்கள் கட்ட மாட்டேன். பழங் கோயில்களைப் புதுப்பிக்க மாட்டேன். கட்டிய கோயில்களையும் இடிப்பேன். சத்திரம் சாவடிகளைப் பிரிப்பேன். இது உங்களுக்குச் சம்மதமானால் யானையைக் கொண்டு என் கழுத்தில் பூமாலையைப் போடச்செய்யுங்கள்' என்று புரளியாக வேண்டிக் கொண்டான். பக்கத்திலுள்ளவர்கள் யாவரும் அவன் சொல்லைக் கேட்டு, அவனை வெறித்துப் பார்த்தார்கள். ஆயினும், அவனுடைய திடத்த காத்திரத்தைக் கண்டு அஞ்சி, அவனோடு ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டார்கள். தெய்வங்கள் அவனைத் தண்டித்துவிடும் என்ற உறுதி அவர்களுக்கு இருந்தது.

இதற்கிடையில் அலங்கரித்துப் பூஜை செய்யப்பட்ட யானையானது துதிக்கையில் பூமாலையை ஏந்தித் தெருத் தெருவாய் அலைந்து கொண்டு வந்தது. வெகு நேரம் ஒய்யாரமாய் நடந்து திரிந்துவிட்டுப் பிறகு நாடிழந்த அரசனும் அவனுடைய காவற்காரனும் நின்று

கொண்டிருந்த வீதிக்கு அது வந்தது. அரசன் ஒரு அடி முன்னே வந்து கழுத்தை நீட்டினன். யானை அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, அவனைத் துதிக்கையால் தள்ளிற்று. பிறகு அவனுக்குப் பின்னே நின்று கொண்டு, எல்லா வற்றையும் பார்த்துப் பரிகாசம் செய்துகொண் டிருந்த அவனுடைய காவற்காரன் கழுத்திலே பூமாலை யைப் போட்டது.

போட்டதும் மந்திரிகள் பிரதானி கள் முதலியோர் ஓடோடியும் வந்து, அவனைப் பலவகையாக உபசாரம் செய்து, அலங்கரிக்கப் பட்டிருந்த பட்டத்துக் குதிரையின் மீது அவனை ஏற்றி, ஊர்வலமாக அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

அரசனை மெய் காப்பாளன் தன்னுடைய அரசனை அழைப் பித்து அவனுக்கு 'அரசாங்கத் திலே பெரிய பதவியைத் தருகி றேன்' என்று சொன்னன். ஆனல், தன்னுடைய வேலைக்காரனிடம் வேலைபார்க்கச் சம்மதியாத அரசன், ஊர் ஊராய் யாத்திரை செய்யப் போய்விட்டான்.

பிறகு, புதிதாய்ப் பட்டம் பெற்ற காவற்காரன் பல விதமான கொடு மைகளையெல்லாம் செய்யத்தொடங் கினன். கோயில்களை இடித்தான், படித்தனங்களைக் குறைத்தான், சத்திரங்களைப் பிரித்தான், அவற் றுக்கு வைத்த நிலங்களின் வரு மானத்தைத் தானே கைப்பற்றிக் கொண்டு செலவழித்தான். அவனு டைய கொடுங்கோல் அரசை ஜனங் களால் தாங்கமுடியவில்லை.

ஆதலால், நாட்டிலுள்ள பிரபுக் களில் சிலர் அவனுடைய யஜமான னகிய ராஜா புத்திமதி சொன்னல் அவன் ஒருவேளை நீதி முறைப்படி நடப்பானென்று எண்ணி அவனைத் தேடிப்பிடித்து அழைத்து வந்தார்கள். காவற்காரனுக்குப் புத்தி சொல்லும்படி வேண்டிக் கொண்டார்கள். அவன் முதலில் எவ்வளவோ மறுத்தான். பிறகு ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து இரங்கி, தன்னுடைய வேலைக்காரனுக்குப் புத்திமதி சொல்ல இணங்கினன்.

அவன் அரண்மனையை அடைந்த தும், காவற்கார அரசன் தன்னு டைய சிங்காதனத்திலிருந்து இறங்கி, அவனை எதிர் கொண்டு அழைத்து, அவனை உயர்ந்த ஆசனத்தில் உட்கார்த்தித் தான் நின்று கொண்டே அவனுக்குப் பலவிதமான உபசாரங்களையும் செய்தான். அதைக் கண்டு அங்குள் ளவர்கள் எல்லாரும் வியப்படைந் தார்கள்.

பிறகு அரசன் ஜனங்களுக் குள்ள குறைகளையும் தெரிவித் தான். நீதியாகத் தெய்வங்களுக்குப் பயந்து ராஜ்ஜிய பரிபாலனம் நடத்துவதுதான் முறை என்று போதித்தான்.

அதைக் கேட்ட காவற்கார அரசன் கோபங்கொண்டு சீறுவா னென்று எல்லாரும் நினைத்தார்கள். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அதற்கு நேர் எதிரிடையாக, அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அவன் அரசனைப் பார்த்து, "நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனல் நடந்த விஷயத்தை நினைப் பூட்ட விரும்புகிறேன். யானை வரும்போது நீங்கள் எல்லாரும் தெய்வங்களை வேண்டிக்கொண்டு

பலவித நல்ல காரியங்களைச் செய்வதாக நேர்ந்துகொண்டீர்கள்,— உங்களுக்குத் தெய்வம் பட்டம் கொடுக்குமானால். உங்கள் ஒப்பந்தம் தெய்வங்களுக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் பட்டம் கிடைத்தால் கோயிலை இடிப்பேன் என்று தெய்வங்களுக்கு வாக்குறுதி செய்தேன். கொடுங்கோலனாக நடப்பேன் என்று பிரதிக்ஞை செய்தேன். தெய்வங்கள் எனக்கே பட்டத்தைக் கொடுத்தன. ஆதலால் அவை என் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன என்றுதானே நினைக்கவேண்டும்? அதனால் நான் என் ஒப்பந்தத்தை நிறைவேற்றினேன்" என்றான்.

எல்லாரும் திகைத்துப்போனார்கள். அவன் மறுபடியும் சொல்லத் தொடங்கினான். "என் ஒப்பந்தத்தை நிறைவேற்றியாய் விட்டது. இனிமேல் எனக்குப் பட்டம் வேண்டாம். நீங்கள்தாம் பட்டத்துக்கு ஏற்றவர்கள். ஆதலால் ராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று அரசனைவேண்டிக்கொண்டு, அவனைத் தன் சிங்காசனத்தில் ஏற்றி வைத்து, அவனுக்கு அடிபணிந்து கைகூப்பி நின்றான்.

★ உங்கள் ஆயுள் ★ உங்கள் வீடு ★ உங்கள் மோட்டார்	}	இவைகளுக்கு இன்ஷூரன்ஸ் பாதுகாப் பிருக்கிறதா?

இல்லையேல்

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(ஸ்தாபிதம் 1906)

நேஷனல் பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:—கல்கத்தா)

இவைகளைக் கலந்து ஆலோசியுங்கள்!

பிராஞ்சு ஆபீஸ்

நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்

362, சைனா பஜார் தெரு, சென்னை.

நாம் ஏன் சங்கீதம் கற்கவேண்டும்?

[ஸ்ரீமதி பத்மாவதி]

இது பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்துக்குச் சம்பந்தமுடையது.

ஆஸ்திகர்களென்றால் யார்?

வேதங்களையும் இதிகாஸபுராணங்களையும் பிரமாணமாக ஒத்துக்கொண்டு வேதோக்த கர்மங்களை நம்பி அவைகளில் சொல்லுகிறபடி ஸர்வேசுவரன் ஒருவர் இருக்கிறார், பரலோகம் ஒன்று உண்டு என்று நம்புகிறவர்களே ஆஸ்திகர்கள். வேதங்களை நம்புவது மட்டும் போதாது. பரலோகம் ஒன்று உண்டு என்று நாம் நம்புகிறோமல்லவா?

அந்தப் பரலோகத்துக்கும் நமக்கும் மத்தியில் இந்தப் பிரபஞ்சமாகியஸம்ஸார ஸமுத்திரம் பெரியதாக இருக்கிறது. இது பரலோகத்துக்குப்போக வொட்டாமல் தடுக்கிறது. அதை தாண்டி அக் கரை போவதற்கு உபாயமாக **கர்மமார்க்கம் பக்திமார்க்கம் ஞானமார்க்கம்** என்றும் மூன்று வழிகளை நமக்குபகவான் காட்டியிருக்கிறார். எந்த வழியாய்ப் போவது என்பது மட்டும் புரியாமல் நாம் திண்டாடுகிறோம்.

ஸம்ஸாரத்தை ஸமுத்திரம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஓர் ஆற்றையோ கடலையோ தாண்ட வேணுமானால் அநேக உபாயங்கள் உண்டு.

மிக **தைரியசாலிகளும்** பலிஷ்டர்களும் நீந்தி விடலாமென்று முயற்சிசெய்கிறார்கள். அவர்களில் சிலர் நீந்தி, கரையும் சேர்கிறார்கள். சிலர் மாளாமல் திரும்பிவிகிறார்கள். சிலர் ஜலத்தோடு போய்விடுகிறார்கள். இதுதான் கர்மமார்க்கம். இது மிகவும் கஷ்டம். நாம் ஸ்திரீ ஜாதிகள். நம்மால் நீந்தமுடியுமா?

நீந்தமுடியுமானால் எவ்வளவு தூரம்தான் நீந்தலாம். நம்முடைய சரீர அமைப்புக்கும் தன்மைக்கும் அது முற்றிலும் தகாதகாரியம். நமக்குத் தகாதகாரியங்களைப் புருஷர்களுக்கு விட்டுவிடுவோம். ஆனால் அயலூர்களுக்குப் போகிறவர்களுக்குக் கட்டுச் சாதம் கொடுப்பது போல் அவர்களுக்குப் பின் நின்று சகாயம் செய்துவிட்டுநின்றுவிடுவது தான் உசிதம்.

புத்திமான்களும் படிப்பாளிகளும் ஆகாயக்கப்பல், ஆகாய விமானம் இவைகளில் ஏறிக்கொண்டு ஸமுத்திரத்தைத் தாண்டிவிட எத்தனிக்கிறார்கள். அதற்கு எவ்வளவு ஸாமான்கள் வேண்டும் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன பாருங்கள். கப்பல் ஓட்டை உடைசல் இல்லாமல் இருக்கவேண்டும். மாலுமி மிக ஸமர்த்தனாக இருக்கவேண்டும். ஏராளமான பெட்ரோல் வேண்டும். அதற்கு எவ்வளவு பணம் வேணும் இது மட்டு மல்ல புயற்காற்று மழைகள், இடிகள் இல்லாமல் இருக்கவேண்டும். கழுகுகள் முதலான கொடியபட்சிகள்கொத்தாமல்இருக்கவேண்டும். இவ்வளவு அபாயங்கள் நிரம்பியிருக்கின்றன. இந்த ஆகாயக் கப்பல் வழி பகவானால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிற ஞானமார்க்கம். இந்த வழியிலும் நம்மால் செல்ல முடியாது. இதையும் நாம் புருஷர்களுக்கு விட்

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர்.நெ.1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

M. K. கிருஷ்ண செட்டி
கோயமுத்தூர்.

மதராஸ் விற்பனையாளர் :—

V. கனகய்ய செட்டி & Co.,
நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்
மதராஸ்.

டுவிடுவோம். சில ஸ்திரிகள் மட்டும் இவ்வழியைக் கைப்பிடித்தார்கள் என்றும் தெரிகிறது. நமக்கு இது கட்டோடே வேண்டாம். நீந்துவதற்கும் ஆகாயக்கப்பல் விமானத்துக்கும் மத்தியில் ஒரு வழியிருக்கிறது. அதைச்சற்று கவனிப்போம். அதாவது தெப்பம் கைப்படகு நீராவிக் கப்பல் முதலானவை தெப்பத்திலும் படகிலும் ஏறிக்கொள்ளலாம். ஆனால் ஒன்று கவனிக்கத்தக்கது. தெப்பத்தையும் படகையும் எடுத்துக் கொள்வோம். தெப்பமும் படகும் எவ்வளவு? இந்த ஸமுத்திரம் எவ்வளவு. எவ்வளவு தூரம்தான் தெப்பத்தில் படகில் ஏறிப்போகலாம். தூரமும்போய் அக்கரை சேரமுடியுமா? கொஞ்சம் தூரம் மட்டும் போகலாம். அப்பால் கப்பல் வேண்டும். சில்லரை தேவதைகள் உபாசிப்பது முதலாவது, இந்தத் தெப்பம், பரிசல், தோணி, படகில் ஏறிச்செல்லுவதற்கு ஸமானம். ஆகையினால் இந்த அற்ப தேவதாபக்தியையும் தள்ளிவிட வேண்டும். புகைக் கப்பலில் ஏறிச்செல்லலாம் என்ற வழி ஒன்றுதான் பாக்கிநிற்கிறது. இந்த வழிதான் பகவானால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற உத்த பக்திமார்க்கம். பரமேச்வரன், மகாவிஷ்ணு அம்பிகை. இந்த மேலான தேவதைகளை உபாசிப்பது நாம் ஸங்கீர்த்தனம் செய்வது, தியானம்செய்வது உத்தமபக்திமார்க்கம். இந்தப் பக்திமார்க்கமே நமக்கு உரியது இதை ஒவ்வொருவரும் தனியே செய்யலாம். சேர்ந்தும் செய்யலாம். சுலபமாயும் செய்யலாம். காசு பணம் செலவும் இல்லை. இந்த உத்தம பக்திமார்க்கத்துக்கு முக்கியஸ்தானம் சங்கீதம்,இந்தப் பக்தியை உண்டாக்குவதே ஸங்கீதத்தின் முக்கிய பிரயோசனம். இந்த உத்தம பத்தியை உண்டாக்கவும் விருத்தி செய்யவும் இந்த ஸங்கீதத்தை உபயோகப்படுத்த வேண்டும். இந்த ஸங்கீதத்தினால் நமது மனது நேர்மைப்பட்டு ஒரே இடத்தில் குவியும். மனது நேர்மைப்பட்டு ஸர்வேசுவரனிடத்தில் குவிந்து நிற்றலே பக்தி. இதற்குத்தான் ஏகாக்கிர சித்தம் என்று பெயர். ஸங்கீதத்தினால் என்ன பிரயோஜனம் ஏற்படுகிறது பாருங்கள்? நமது மனது அதில் லயித்துப்போகிறது. நாம் நம்மையே மறந்துவிடுகிறோம். துக்கத்தையும் மறக்கிறோம். தாய்தந்தை, புருஷன், மக்கள், எல்லாவற்றையும் மறக்கிறோம். துக்கத்தையும் மறக்கிறோம். தூக்கமும் ஓடிவிடுகிறது. மனம் சாந்தி அடைகிறது. ஆனந்தத்தை அனுபவிக்கிறோம். நமது நிஜஸ்வரூபம் ஆநந்தம்தான். அதனாலே நாமே ஆனந்த ரூபமாக ஆகிறோம். சிலகாலத்தில்மட்டும்இந்தஆனந்தத்தை அனுபவிக்காமல் எப்பொழுதும் இந்தஆனந்தத்தைப் பசிதாகம்தூக்கம் செலவு சிரமம் ஒன்றும் இல்லாமல் அனுபவிக்கிற ஆநந்தம் மிக உயர்ந்தல்லவா. அதுதான் ஸமுத்திரத்தின் அக் கரை. அந்தக்கரையிலேதான் ஈச்வரபக்தியும் அதற்கு ஸாதனமான ஸங்கீதமும் கொண்டுபோய்ச்சேர்க்கிறது. இதற்காகத்தான் நாம்ஸங்கீதத்தை அப்யஸிக்க வேண்டும். இதை அப்யஸித்துவேறு விஷயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாது. தொழிலாக வைத்துக்கொள்ளக் கூடாது. நாம் அந்த வழியில் போகவேண்டாம். நம்முடை ஸங்கீதத்தைக்கேட்டுப்பிறர் ஸந்தோஷப் படுவதை ஆக்ஷேபிக்கவில்லை. அவர்கள் ஸந்தோஷபடவேண்டும் என்பது நம்முடைய லட்சியமல்ல.